
கல்கி



KALKI செப்டம்பர் 23, 1956 4 அணா

தனது கவுனே வெண்மையென அவள் நினைத்திருந்தாள்
ஆனால், ரின்ஸோவினால் சலவை செய்த மீனாவின் கவுனைப் பார்த்ததும் பிரமித்தாள்!



உண்மை! ரின்ஸோ அதிவெண்மையாக வெளுக்கிறது

அற்புத சோப் பவுடராகிய ரின்ஸோவினால் சலவை செய்யுங்கள். உங்களுடைய வெண்மை ஆடைகள் கண்ணைப் பறிக்கும் வெண்மையாக ஆகிவிடும்! வர்ணத் துணிகளும் அதிகப் பிரகாசமடையும்! அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டியதில்லை. ரின்ஸோவின் பிரமிக்கத்தக்க விறுவிறுப்பு வாய்ந்த நுரை எல்லா அழுக்குகளையும் கழுவிக் களைந்துவிடும். கண்ணைப் பறிக்கும் அத்தகைய அதிகப்படி வெண்மைக்கு நீங்கள் சேர்க்க வேண்டியது வேறொன்றுமில்லை. குடும்பத்தின் சகல சலவைகளுக்கும் ரின்ஸோ உபயோகியுங்கள்!



. . . சலவை செய்ய மிகவும் சுலபமானது

இந்த அற்புத சோப் பவுடர்

R. 7-50 TM

மலர் 16 இதழ் 8

கல்கி
பொருளடக்கம்


புட்டம் 8

செப்டம்பர் 23, 1956

விபரீத விளைவுகள்!	(கார்ட்டூன்)	..	2
தவறான போக்கு!	(தலையங்கம்)	..	3
யாரைப் பொறுக்குவது?	...	..	4
வட்ட மேஜை	...	..	5
மொழிக் குழப்பம்	ராஜாஜி	..	7
நிதி மந்திரி ஸ்ரீ டி. டி. கே.	...	..	8
காணுந்த பேட்டி	விடாக்கண்டர்	..	11
மூன்றெழுத்து வளர்த்த மோட்டார்..	பகீரதன்	..	14
யோக சிகிச்சை	சுந்தரம்	..	21
தேவியின் கடிதம்	வசுமதி ராமசாமி	..	24
சோம்பேறிச் சூரியன்	ராஜாஜி	..	26
அபலை அங்கவம்	கி. ரா. கோபாலன்	..	29
மயிக் கடை மாணிக்கம்	சாவி	..	38
ரகுபதி ராகவ	ராஜாஜி	..	47
மரண தண்டனை	அ. வேதாசலம்	..	48
தை பிறந்தது	புதுமைச்சித்தன்	..	54
கடல் கண்ட கனவு	சோமு	..	59
பாலர் மலர்	சாமா	..	69
அடிமை ராஜா (பாலர் மலர்)	துரோணன்	..	70
மாணவர் செய்யும் மகத்தான...	ஸோமாஸ்	..	74
முடிவில்லாக் கதை	ரா. விழிநாதன்	..	77
கணக்கும் கல்யாணமும்	தாபன்	..	84

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

விபரீத விளைவுகள்!


சூ எஸ் கப்பல் வழிகாட்டிகள் வேலையிழந்து தவிக்கின் றனர்
எங்களுக்கு வேறு வேலை கொடுங்கள்
வேலையின்றி வருந்து கிறோம்
எங்கள் துன்பத்துக்கு நீங்களே காரணம்
பிரான்ஸ்
பிரிட்டன்
பிரிட்டன் அராபிய நாடுகளின் நட்பை இழக்கிறது
அரபு நாடுகள்
பிரிட்டன்
பிரிட்டனும் பிரான்ஸும் மேலும் அமெரிக்காவுக்கு அடிமையாகின்றன
சூ எஸ் கால்வாய் உபயோகிப்போர் சங்கம்
"கால்வாய் உபயோகிப்போர் சங்கம் அமைப்பது நடுநிலைமை நாடுகளை மிரட்டுவதாகும்": ராஜாஜி



மலர் 16 } தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற { துன்முகி௵
இதழ் 8 } தாயென்று கும்பிடடி பாப்பா – பாரதியார் { புரட்டாசி 8

தவறான போக்கு!

வேதாளம் மறுபடியும் மரத்தில் ஏறிக் கொண்டு விட்டது!

எகிப்து ஜனாதிபதி நாஸர் சூயஸ் கால்வாய்க் கம்பெனியைச் சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டதும், பிரிட்டிஷ் சர்க்கார் பிரமாதமாக ஆர்ப்பாட்டம் செய்தனர்; மத்திய கிழக்குப் பிரதேசத்துக்குப் போர்க் கப்பல்களையும் படைப் பிரிவுகளையும் அனுப்பி வைத்தனர்.

பிரிட்டனின் போர்க் கோலத்தை அமெரிக்கா உள்பட உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் ஆதரிக்கவில்லை. இதைக் கண்டதும் பிரிட்டிஷ் தலைவர்களின் தொனி படிப்படியாக இறங்கியது.

சூயஸ் பிரச்னையைத் தீர்ப்பதற்காக லண்டனில் நடந்த மகாநாட்டின் மூலம் ஆஸ்திரேலியா பிரதம மந்திரி மென்ஸீஸ் தலைமையில் ஒரு குழு சிருஷ்டியாயிற்று.

மென்ஸீஸ் குழு எகிப்துக்குச் சென்று ஜனாதிபதி நாஸருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியது. சுதந்திர எகிப்து ஒப்புக் கொள்ள முடியாத, உருப்படாத யோசனைகளைக் கூறியது.

அது போய், இப்போது சூயஸ் பிரச்னையைத் தீர்க்க மற்றொரு குழு உருவாக்க முயற்சி நடக்கிறது. அந்தக் குழுவுக்குக் 'கால்வாய் உபயோகிப்போர் சங்கம்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

அந்தச் சங்கம் சூயஸ் கால்வாய் நிர்வாகத்தை முற்றிலும் எடுத்துக் கொள்ள வேண்டும்; கால்வாய்ச் சுங்கங்கள் எல்லாம் அந்தச் சங்கமே வசூலித்துக் கொள்ள வேண்டும்; எகிப்து சர்க்காருக்குச் சுங்கம் கட்டக்கூடாது; கப்பல்களை எகிப்து சர்க்கார் தடுத்தால் அது குற்றமாகும். குற்றத்தைச் சாட்டி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்; ஐ. நா. சபையிலேயோ அல்லது வேறு வழியிலேயோ (யுத்தம் உள்பட) நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். இதைத் தவிர எகிப்து மீது பொருளாதார நடவடிக்கைகளைக் கைக்கொண்டு எகிப்து மக்களுக்கு மிகுந்த கஷ்டநஷ்டங்கள் ஏற்படும்படி செய்ய வேண்டும்:—இவைதான் இப்போது அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள் கைக்கொள்ள உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகளாகும்.

யுத்த சன்னத்துக்கான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. அவற்றை நிறுத்த முடியாது என்றும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சொல்லி விட்டார்!

ஆங்கில, பிரஞ்சு சர்க்கார்களும் பழைய கம்பெனி அதிகாரிகளும் சேர்ந்து சூயஸ் கால்வாய் கம்பெனியைச் சேர்ந்த எகிப்தியரல்லாத கப்பல் வழிகாட்டிகள் சகலரையும் வெளியேறி விடும்படி செய்து விட்டார்கள்.

எகிப்து சர்க்கார் சமாளிக்க முடியாத சங்கடமான நிலைமையை உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே வாய்க்கால் வழிகாட்டிகளை வேலையை விட்டு விட்டுப் போகச் செய்திருக்கிறார்கள். ஆயினும் எகிப்து சர்க்கார் நிலைமையைச் சமாளித்து வருகிறார்கள். கப்பல்களின் போக்குவரத்து குறைவுபடவில்லை.

பிரிட்டிஷார் சிறந்த ராஜதந்திரிகள் என்று புகழ் பெற்றவர்கள்; இந்தியா போன்ற மாபெரும் நாட்டில் தங்களுக்கு இருந்த ஆதிக்கத்தைக் கூட விட்டு விட்டுச் சுமுகமாக வெளியேறி, உலகமே வியக்கும்படி செய்தவர்கள்; சர்வதேச விவகாரங்களில் மிகுந்த அநுபவம் வாய்ந்தவர்கள்.

அப்படி யிருந்தும் அவர்கள், எகிப்துக்குச் சொந்தமான சூயஸ் கால்வாய் விஷயத்தில் ஏன் இவ்விதம் பெரும் தவறு செய்ய வேண்டு மென்ற கேள்வி எழலாம்.

இந்தக் கேள்விக்கு ராஜாஜி அவர்கள் உற்ற பதில் அளித்துள்ளார் :

"சமீபகால சரித்திரத்தின் படிப்பினையை யும் பைபிளின் உபதேசத்தையும் பிரிட்டி ஷார் மறந்து, பெரும் தவறு செய்து வரு கிறார்கள். பிரிட்டிஷார் பிரும்மாண்டமான சாம் ராஜ்யத்தைக் கட்டி ஆண்டவர்கள். மிகச் சிறிய நாடான எகிப்து தனக்குப் பணிய மறுத்து விட்டதென்ற கோபத்தினால், மதி யிழந்து தவறான நடவடிக்கைகளில் இறங்கி யிருக்கிறார்கள். 'பிறர் உன்னிடம் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்பு கிறாயோ, அதுபோலவே நீயும் பிறரிடம் நடந்துகொள்' என்ற புனிதமான பைபிள் வாக்கியத்தை மறந்து இப்படிப் காரியங் களைச் செய்து வருகிறார்கள்."

சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த மாபெரும் கூட்டத்தில் ராஜாஜி அவர்கள் பிரிட்டனின் நிலைமையைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

சூயஸ் கால்வாயில் கப்பல்கள் போக்கு வரத்துக்கு எகிப்து சர்க்கார் எதிர்காலத்தில் இடையூறு செய்யலாம் என்பதே பிரிட்ட னின் குற்றச்சாட்டாகும்.

ஆனால், இதுவரையில் சூயஸ் கால்வாய் கப்பல் போக்குவரத்து மிகவும் ஒழுங்காக நடைபெற்று வருவதிலிருந்து நாஸரின் நல்ல எண்ணத்தையும் நேர்மையையும் காணலாம்.

தற்போதைய பிரிட்டனின் நடவடிக்கைகள் தான் மேற்படி கப்பல் போக்குவரத்துக்கு இடையூறு உண்டாக்கலாம்.

அது மாத்திரமல்ல; பிரிட்டனின் போக்கு பொருளாதார பகிஷ்காரத்தைக் கைக் கொண்டும் எகிப்துக்குச் சேரவேண்டிய பணத்தை முடக்கியும் எகிப்து மக்களைத் திக்குமுக்காடச் செய்வதாக இருக்கிறது.

சூயஸ் பிரச்னையைப் பரிசீலனை செய்வதற் காகக் லெய்ரோவில் நடைபெறப் போகும் மகாநாட்டுக்கு எகிப்து அனுப்பிய அழைப்பை இருபது நாடுகளுக்குமேல் அங்கீகரித்துள்ளன.

எனவே, சூயஸ் பிரச்னையைத் தீர்க்கச் சமரசமான முறைகளைக் கைக் கொள்ள வேண்டும் என்பதில் நாஸருக்குள்ள ஆர்வம் நன்கு தெரிகிறது அல்லவா ?

மன்னுஞ்சை, கோபம் காரணமாக பிரிட்டன் மதியிழந்து விடாமல், எகிப்துக்கு உரிமை யான சூயஸ் வாய்க்காலைச் சுமுகமாக விட்டு விட வேண்டும். வாய்க்காலில் கப்பல்கள் செல்லத் தடை ஏற்பட்டால், அப்போது குற்றம் சாட்டலாமே யொழிய இப்போது பிரச்னையையும், சிக்கலையும் கிளப்பி யிருப் பதை நிறுத்திவிட வேண்டும்.

பிரிட்டனின் போர்க் கோலத்தைப் பெரும் பாலான உலக நாடுகள் அங்கீகரிக்கவில்லை என்பது தெளிவாகி வருகிறது. இதற்கு முன் ஒருபோதும் இராதவாறு அரபுநாடுகள் எகிப் துக்கு ஆதரவாக ஏகோபித்து ஒற்றுமை யுடன் ஒன்று சேர்ந்திருப்பதே அதற்குச் சான்றாகும்.

ஆசிய மக்களும், இந்திய மகா ஜனங்களும் எகிப்தின் கட்சியை ஆதரிக்கின்றனர்.

ஆகையால், நெருக்கடி முற்றி, போரில் முடி யாமல் இருப்பதற்கான வழியைப் பிரிட்டன் முதலிய வல்லரசுகள் பின்பற்ற முற்பட வேண்டும்.

பிரிட்டிஷாரின் அனுபவமும் பண்பட்ட ராஜதந்திரமும் இந்த நெருக்கடியான சமயத் தில் அவர்களைக் கைவிட்டு விடாமலிருக்க வேண்டும். இதுவே நம்முடைய ஆசை. யுத்தம் கிளப்புவது எளிது. பிறகு அந்தப் பிசாசைச் சமானிக்கும் மந்திரம் யாரும் கற்றதில்லை. உலகத்தை விநாசத்தில் கொண்டு போய்விடும்.

கப்பல்கள் சூயஸ் வாய்க்கால் வழியாகச் செல்வது ஒன்றே அல்லவா நோக்கம். அதைப் பற்றிப் பயப்படுவதற்குத் தற்போது இடமே யில்லை. நாஸர் பதவியிலிருந்து விலகும்படி செய்துவிட வேண்டும் என்கிற எண்ணம் தவறான எண்ணம்.

யாரைப் பொறுக்குவது?

தேச நலனில் அக்கறை கொண்ட காங் கிரஸ் மேலோர்களுக்குக் காங்கிரஸ் ஸ்தா பனத்தை எப்படித் தூய்மைப்படுத்துவது என்பதே பெரும் கவலையாக இருக்கிறது.

தேர்தல் சமயம் நெருங்கிக் கொண்டிருக் கிறது. தேசத்தில் காங்கிரஸ் ஒன்றே மிகப் பெரிய கட்சியாக இருக்கிறது. அதனாலேயே காங்கிரஸ் தனது புராதன சிறப்பை இழந்து, சுயநலக்காரர்கள் மிஞ்சிய கூட்டமாகி விட்டது என்கிற அபிப்பிராயம் பொது மக்க ளிடையே பரவி வருகிறது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நற்பெயரையும் செல்வாக்கையும் உபயோகப்படுத்தித் தங்கள் சொந்த லாபங்களை அபிவிருத்தி செய்து கொள்பவர்கள், காங்கிரஸ் கமிட்டிகளிலும் சட்டசபைகளிலும் சூழாமல் தடுப்பது எப்படி என்பதே கவலையாக இருக்கிறது.

இந்தத் தர்மசங்கடமான நிலைமையைச் சமா ளிக்கவே, ஒவ்வொரு ராஜ்யத்திலும் காங் கிரஸ் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஒரு கமிட்டியிடம் ஒப்படைத் திருக்கிறார்கள் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார். பிற ராஜ்யங்களைச் சேர்ந்த இரண்டு காங்கிரஸ் பிரமுகர்களும் உள் ளூர்க் காங்கிரஸ் பிரமுகரும் சேர்ந்த மூன்று பேர் கொண்ட கமிட்டியிடம் தேர்தல் அபேட்சகர்களைப் பொறுக்கும் வேலையை ஒப்படைத்திருக்கிறார்கள். இவர்களும் உள் ளூர்க் காங்கிரஸ் தலைவரின் சிபாரிசின் பேரில் தானே அபேட்சகரைத் தேர்ந்தெடுப்பார்கள்! வேறு என்ன செய்ய முடியும்? அது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்பது சந்தேகத் துக்கிடமான விஷயமாயிற்றே என்று பலர் எண்ணி வருகிறார்கள்.

ஆகவே வேறு வழி கண்டு பிடிக்க வேண்டியிருக்கிறது. அந்த வழியைச் சமீபத்தில் வடசென்னையில் நிகழ்ந்த ம. பொ. சி. மன்ற இரண்டாவது ஆண்டு விழாவில் ராஜாஜி மிக அருமையாக வெளியிட்டார்.

குறளாசிரியர் நோய் நாடி அதன் காரணத்தை அறிந்து, அந்தக் காரணத்தை நீக்கி மருந்து சொல்ல வேண்டும் என்றார்.

"நோய் நாடி நோய் முதல் நாடி
அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

அம்முறையிலேயே ராஜாஜியும் காங்கிரஸுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள நோயின் காரணத்தைக் கண்டு மருந்து கூறியிருக்கிறார்.

காங்கிரஸில் இவ்வளவு ஊழல் மலிந்திருப்பதற்குக் காரணம் காங்கிரஸ் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் அரசியலை ஜீவனமாக வைத்திருப்பதுதான் என்று தெளிவாகக் கூறி விட்டார்.

அந்நிய ஆதிக்கமிருந்த காலத்தில், இருபத்து நாலுமணி நேரமும் தேச விடுதலைக்குப் போராட வேண்டிய அவசியமிருந்தது. சுயநலமற்ற தியாகத்திலேயே வாழ்வின் பயனைக் கண்டார்கள். ஆனால் சுதந்திரம் அடைந்து விட்ட பின்னர் அத்தகைய 24 மணி அரசியல்வாதிகளுக்கு அவசியமில்லை. ஆளும் கட்சியினரில் அதிகார பீடத்திலிருப்பவர்கள் தேச சுபிட்சத்துக்கு வேண்டிய திட்டம் வகுத்து விட்டால், அரசாங்க நிர்வாகிகள் அதைத் திறம்பட அமுல் நடத்திக் கொண்டு போய் விடுகிறார்கள். ஆகவே சுதந்திரம் அடைந்த தேசத்தில் ஆளும் கட்சியினரின் விருப்பத்துக்கு ஏற்றபடி சட்ட சபைகளில் யோசனை சொல்லுவதும் கைதூக்குவதும் தவிர அரசியல்வாதிகளுக்கு வேறு வேலையிருப்பதில்லை. ஆகவே, முழு நேர வேலைக் காங்கிரஸ்காரர்கள் தங்கள் சுயநலன்களுக்காகப் பல காரியங்களில் ஈடுபட்டுக் கட்சியின் நற்பெயரையும், நிர்வாகத் திறமையையும் கெடுத்து விடுகிறார்கள்.

அரசியல் தவிர வேறு வேலையில்லாத அரசியல்வாதிகள், வம்பு தும்பு லஞ்ச வேலைகளில் ஈடுபட்டுக் காங்கிரஸின் நற்பெயருக்கு இழிவு ஏற்படுத்துகிறார்கள் என்கிற அபவாதத்துக்கு உள்ளாகிறார்கள்.' அதனால் காங்கிரஸ் கட்சியில் சேருபவர்கள் தங்கள் ஜீவனத்துக்கு ஏதாகிலும் ஒரு தொழில் செய்பவர்களாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை வைத்துக் கொள்ள வேண்டும் என்றார் ராஜாஜி. தொழில், எத் தொழிலாயினும் பரவாயில்லை. ரிக்ஷா இழுப்பவர், தச்சு வேலை செய்பவர் இப்படித் தங்கள் மெய் வருத்தி வேலை செய்பவர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர வேண்டும். இவர்களே சட்டசபைக்கு அங்கத்தினர்களாக நிறுத்தப்பட வேண்டும். தங்களுடைய தொழிலில் வரும் வருவாயில் பிழைக்க வேண்டும் என்றார். இப்படிச் செய்தால் காங்கிரஸ் மீண்டும் தன் பழைய கீர்த்தியைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

முன்பு மேடைப் பேச்சாளர்களும், வாதாடும் வழக்கறிஞர்களும் காங்கிரசுக்குத் தேவையாக இருந்தது. மக்களிடையே சுதந்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்ப அவர்கள் உதவி தேவைப் பட்டது. அது அந்தக் காலம். அந்தக் காலம் மலை ஏறிவிட்டது. இது தொழில் யுகம். தேசம் தொழில் துறையில் முன்னேற இருக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் ஆக்கத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களே சட்டசபை அங்கத்தினர்களாகவும், பார்லிமெண்ட் அங்கத்தினர்களாகவும் வருவது மிகவும் பொருத்தமாக இருக்கும். காங்கிரஸ் மேலிடத்தாரிடை ராஜாஜியின் யோசனை எடுபட வேண்டும்.

வட்ட மேஜை

"தேர்தல் முறை"

செப்டம்பர் 16உ 'கல்கி' தலையங்கத்தைப் பார்த்து மட்டிலா மகிழ்ச்சி யடைந்தோம். தமிழகத்தில் காங்கிரஸ் எப்படி வாழ வேண்டும், ஜீவிதமாக இருக்க வேண்டும் என்பதைத் தங்கள் தலையங்கம் தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு நன்கு உணர்த்தியிருக்கும். தாங்கள் சொல்லி விரும்புவதுபோல் தேர்தலுக்குத் தனக்கு வேண்டப்பட்டவர்கள் யார் யாரோ, அவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. மாகாண கமிட்டியிலிருந்து ஒவ்வொரு தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி வரை கோஷ்டி மனப்பான்மை தான் இருக்கிறது. தங்கள் தலையங்கத்தைப் பார்த்த பிறகாவது தலைவர் என்று சொல்லிக் கொள்பவர்கள் மனம் திருந்தி, நாட்டுக்கும் காங்கிரஸுக்கும் தங்கள் சொந்த வெறுப்பு, விருப்புகளைக் களைந்து விட்டுப் பாடுபடுவார்களா?

ஜெயங்கொண்டம்
14—9—56

எம். கிருஷ்ணமூர்த்தி

தன்னலமற்ற தலைமை

'தேர்தல் முறை' என்ற தலையங்கத்தைப் படித்தேன். நான் ஒரு அரசியல்வாதி அல்ல. கடந்த ஒன்பது ஆண்டுகளில் நம் மாகாண மந்திரி சபையில் எத்தனை மாறுதல்கள்! கேட்க மிக மிக வருத்தமாயிருக்கிறது.

திறமையைக் கொண்டுதான் மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே அல்லாது சூழ்ச்சிக்கும், சந்தர்ப்பத்துக்காகவும் அல்ல.

காங்கிரஸ் மகாசபை தன்னலமற்ற மேதைகளால் எந்த நோக்கத்துடன் ஏற்படுத்தப் பட்டதோ அந்த நிலையில் அக் கட்சி இல்லை என்பது உறுதி. தற்போதைய உறுப்பினர்களைப் பற்றி நான் அதிகம் கூறத் தேவை இல்லை. சுயநலம்தான் அவர்களின் குறிக்கோளாக இருக்கிறது. சென்னை மாகாண அரசியல் சீர்படவும், காங்கிரஸ் புனிதமடையவும், தன்னலமற்ற அரசியல் வாதிகளின் தலைமை ஏற்பட வேண்டும்.

குத்தாலம்
15—9—56

எம். வி. நாராயணசாமி

சூயஸ் கால்வாய் வருமானம்!

பிரஞ்சுக்காரர் தன்னந் தனியாகவே யுத்தம் செய்வதற்குத் தயாராவதற்கு அடிப்படையான காரணத்தைக் கீழே கொடுத்திருக்கும் சூயஸ் கப்பல் கால்வாயின் லாபக் கணக்கைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

1955-ம் ஆண்டு வருமானத்தில் பிரஞ்சுக்காரர்கள் பெற்ற லாபம் மூன்று கோடியே எழுபத்தைந்து லட்சம் டாலர். இங்கிலாந்து பெற்றது இரண்டு கோடியே முப்பத்தைந்து லட்சம் டாலர். ஆனால் சூயஸ் கால்வாயின் உண்மையான உரிமையாளர்களான எகிப்து தேசம் பெற்றது முப்பதுலட்சம் டாலர்தான்!

இதிலிருந்து ஆங்கிலேய, பிரஞ்சுக்காரர்களின் கொள்ளை ஆசையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

கோயமுத்தூர்
14—9—56

ரிஷி ஸ்ரீ சங்கர ஐயர்

உதவித் தொகை சேரவில்லை

தென் இந்தியாவில் புயலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கஷ்ட நிவாரணத்துக்காக இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் மூலம் பணம் அனுப்பியவர்களில் நானும் ஒருவன். கொழும்பில் உள்ள 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா'வில் 8-5-56ல் செலுத்திய ரூபாய் இருநூறும் இந்தியாவில் உள்ள எனது குடும்பத்தினருக்கு இன்னும் பட்டுவாடாச் செய்யப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். விஷயத்தை ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் பலன் ஏற்படவில்லை. புயலின் கொடுமையால் அல்லல்படும் குடும்பத்தினருக்கு அந்தப் பணம் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

கண்டி
6—9—56

ராம. பழனியப்பன்

மொழிக் குழப்பம்

ராஜாஜி

மொழிப் பிரச்னையில் இரண்டு விஷயங்களைப் பற்றிக் குழப்பம் ஏற்பட்டிருப்பதை அகற்றித் தெளிவு படுத்த வேண்டும்.

1. பாரத நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு ஹிந்தி பாஷை தாய்மொழியாகும். அல்லது எளிதில் புரிந்து கொள்ளும்படியான பாஷையாகும். ஆனபடியால் பாரத நாட்டுப் பொது மொழி ஹிந்தி பாஷை என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஹிந்தி பேசாதவர்களும் அறியாதவர்களும், பெரும் கணக்கில் இருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் ஹிந்தி பேசுபவர்களின் மத்தியில் சிதறிக் கிடப்பவர்களல்ல. சேர்ந்தாற் போல் பாரத தேசத்தின் தென் பாகத்தில் வசித்து வருகிறார்கள். அவர்களையும் அவர்களுடைய பிரதேசத்தையும் 'சிறு கணக்கு' என்று புறக்கணிக்க முடியாது. இந்தக் காரணத்தினால் பெரும்பாலோரின் பாஷையை அரசியல் மொழியாகச் செய்து விட்டுத் திணிப்பது நியாயமாகாது. ஜனநாயக தத்துவத்துக்கு விரோதமாகும். அரசியல் மொழிப் பிரச்னை வேறு; தேசப்பொது மொழிப் பிரச்னை வேறு. தேசப் பொது மொழி தானாக வேர் விட்டு முளைத்து வளரும் செடியாகும். அரசியல் மொழிப் பிரச்னையானது சட்டத்தின் மூலம் அமுலுக்குக் கொண்டு வர வேண்டிய விஷயம். அதில் பலாத்காரமாவது நியாய விரோதமான காரியமாவது இருக்கக் கூடாது.

2. கல்வித் துறையில் அந்தந்தப் பிரதேசத்து மொழியிலே தான் அந்த அந்தப் பிரதேசத்தில் படிப்பு நடைபெற வேண்டும். புது விஞ்ஞான விஷயங்களைப் பற்றிப் பாடம் சொல்லித் தருவதற்கு ஆங்கிலம் அவசியமாகும் என்று பேசப்பட்டு வருகிறது. இதில் ஓரளவு உண்மை உண்டு. புது விஷயங்களுக்கு அந்த விஷயங்களோடு வந்த அன்னிய பாஷைப் பெயர்களையே வைத்துக் கொள்வதும் வைத்துக் கொண்டு போதிப்பதும் நலம். புதிதாக வந்திருக்கும் பொருள்களுக்குப் புதுப் பெயர் கஷ்டப்பட்டு உண்டாக்கி அலைய வேண்டியதில்லை. பொது ஜனங்களுக்கும் புதுப் பெயர்களினால் ஒன்றும் லாபம் கிடையாது. புதுப் பெயர்களை உண்டாக்கினாலும் அவை நிதானமாகத் தான் வழக்கில்வரும். இரண்டும்கூடவே நடைபெறலாம். ஆனால் பரி பாஷைப் பதங்கள் பிரச்னை வேறு; விஷயத்தை விளக்கிச் சொல்லித் தருவது எந்த மொழியின் மூலம் என்கிற பிரச்னை வேறு. பரிபாஷைகளை — அதாவது பொருள்களின் பெயர்களை—ஆங்கிலத்தில் வைத்துக் கொண்டு தமிழிலேயே பாடம் சொல்லித்தர முடியும். லத்தீன் பெயர்களை வைத்துக் கொண்டு ஆங்கிலத்தில் பாடம் சொல்லித் தருவது போல் நாமும் தமிழில் சொல்லித் தரலாம். பாடங்களும் சொற்பொழிவுகளும் எந்த மொழியில் நடைபெற வேண்டும் என்கிற கேள்வியையும், விஞ்ஞான ஆராய்ச்சியிலும் படிப்பிலும் உபயோகிக்க வேண்டிய ஆங்கிலப் பெயர்களைப் பற்றிய கேள்வியையும் ஒன்று சேர்த்துக் குழப்பி, போதனை முறை முழுவதும் ஆங்கிலமாகவே இருக்க வேண்டும் என்று சொல்லுவது தவறு. சில மொழிகள் அந்நிய பாஷையாக இருக்க வேண்டிய படியினால், முழுவதுமே அந்நிய பாஷையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. தெளிவுறப் புரிந்து கொள்வதற்குத் தாய்பாஷை அவசியமாகிறது. இடையில் வரும் ஆங்கிலச் சொற்களைப் பற்றிக் கவலையில்லை. "மோட்டாரில் என்ஜின் சரியாக வேலை செய்யவில்லை. கார்பரேட்டர் சரியாகவே இருக்கிறது." இந்த உதாரணத்தை வைத்துக் கொண்டு மேலே சொல்லப் பட்டதின் பொருளைக் காணலாம்.

நிதி மந்திரி ஸ்ரீ டி.டி.கே.

நிதி மந்திரி பதவியை ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஏற்றிருக்கிறார் என்பதைக் குறித்துப் பெருமகிழ்ச்சி யடைகிறோம்.

ஓர் தமிழர், பிரதம மந்திரி பதவிக்கு அடுத்தபடியான செல்வாக்கு மிகுந்த பதவியாகிய நிதி மந்திரி பதவியை ஏற்றிருக்கிறார் என்பதற்காக நாம் மகிழ்ச்சி யடையவில்லை.

ஸ்ரீ தேசமுக் ராஜிநாமா செய்த பதவியை ஏற்கத் தகுந்த நபர் யார் என்று தேடிய போது, அந்தப் பதவிக்குத் தகுதியானவர் ஸ்ரீ டி. டி. கே.தான் என்று நிர்மானித்து, அவரை நியமித்தமைக்காகவும் அல்ல!

பின் எதற்காக?

சென்ற வருஷம் ஸ்ரீ டி. டி. கே. தமது தொழில் மந்திரி பதவியை ராஜிநாமா செய்து



விட்டு வந்தார். அப்போது நாம் எழுதியிருந்த தலையங்கத்தில் ஸ்ரீ டி. டி. கே. யைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்.

"டி. டி. கே. தொழில் துறைகளில் அறிவும் அநுபவமும் வாய்ந்தவர். தூங்காமல் தமது கடமைகளைச் செய்யும் ஆற்றல் படைத்தவர். பிறர் பேச்சுக்களைக் கேட்டு ஏமாந்து போகாத ஒரு மந்திரி!"

இத்தகைய குண நலன்களைப் பரிபூரணமாகப் பெற்ற ஸ்ரீ டி. டி. கே. நிதி மந்திரிப் பதவிக்கு வந்ததற்காகவே பெரு மகிழ்ச்சி யடைகிறோம். இத்தகைய குண நலன்களே நிதி மந்திரி பதவிக்கு மிகவும் அவசியம்.

நிதி மந்திரிக்கும் வரி விதிப்புக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நேயர்கள் நன்கு அறிவார்கள்.

இருந்தும் இவருடைய நியமனத்தை வர்த்தக சமுதாயம் பரிபூரணமாக வரவேற்றிருக்கிறது. இங்கிலாந்திலும் வரவேற்றிருக்கிறார்கள். இதிலிருந்தே வர்த்தகத் துறையில் ஸ்ரீ டி. டி. கே. எவ்வளவு செல்வாக்கு பெற்றிருக்கிறார் என்பது விளங்கும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கி ஆறு மாதங்கள் ஆகி விட்டன. இத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கத் தேசத்தில் நிதி திரட்ட வேண்டிய பொறுப்பு நிதி மந்திரியையே சேர்ந்தது. ஸ்ரீ டி. டி. கே. தமது அபாரமான சாமர்த்தியத்தினால் சர்க்காருக்குப் போதிய நிதி திரட்டித் தருவார் என்று நாம் நம்பலாம்.

ஸ்ரீ டி. டி. கே. பொருளாதாரம், நிதி, நாணய பரிவர்த்தனை, செலாவணி முதலிய பல விஷயங்களில் மிகுந்த நுட்பமான அறிவு பெற்றவர். அவர் தமது கல்வி ஞானத்தையும் அநுபவ ஞானத்தையும் பயன்படுத்தித் தேசத்தைச் சுபிட்சப் பாதையில் கொண்டு செல்ல இன்னுமொரு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது!

ஸ்ரீ டி. டி. கே. தொழில் துறையில் மந்திரியாகப் பதவி வகித்த காலத்தில் தமிழகத்துக்கு நெய்வேலித் திட்டமும், சேலம் அலுமினியத் தொழிற்சாலையும் உருவாவதற்குப் பெரும் உதவியாக இருந்தார். இப்பொழுது நிதி மந்திரி பதவி ஏற்றிருக்கிறார். இப் பதவி காலத்தில் தமிழகம் உள்படத் தேசம் பல துறைகளிலும் முன்னேறுவதற்கு வழி வகை செய்வார் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ டி. டி. கே. நண்பருக்கு உற்ற நண்பர். நண்பர்களுக்குக் கஷ்டம் வரும் காலத்தில் கைகொடுத்து உதவும் உயர் பண்பைப் பெற்றவர். கூரிய புத்தி சாதுர்யமும் சுருக்கெனப் பேசும் நாவும் பெற்றவர். அவரால் மௌடீகத்தைப் பொறுக்க முடியாது. 'பளிச்' 'பளிச்' என்று பதில் அளித்துவிடுவார்.

இவர் தொழில் துறை மந்திரியாக இருந்த போது, நிர்வகித்த இரும்பு-எஃகுத் தொழில் இலாகா நிதி மந்திரி பதவி ஏற்ற பிறகும் இவரிடமே வந்திருக்கிறது. "நிதி திரட்டும் இலாகாவும் அந்த நிதியைச் செலவழிக்கும் இலாகாவும் ஒருவரிடமே இருக்கலாமா? செலவினத்தைத் தட்டிக் கேட்க ஆளில்லாமல் இருக்கிறதே! இப்படி எந்தத் தேசத்திலும் நடக்காத வழக்கமாக இருக்கிறதே" என்று சிலர் குறை சொல்லக் கேட்கிறோம். ஆனால் ஸ்ரீ டி. டி. கே. நாம் முன்பு சொன்னது போல் பிறர் பேச்சைக் கேட்டு ஏமாந்து போகாதவர். ஆதலால் அவரிடம் இப் பொறுப்பு இருக்கத்தான் வேண்டும் என்று கருதுகிறோம்.

சிலர் சில விஷயங்களில் மட்டும் தேர்ச்சி பெற்றவராக இருப்பார்கள். மற்ற விஷயங்களைப் பற்றி அவற்றின் அடிப்படை ஞானம் கூட இல்லாதவர்களாக இருப்பார்கள்! ஆனால் டி. டி. கே. அப்படியல்ல. கலைத் துறையிலும் அவரது ஞானம் அபாரம். சங்கீதக் கலையில் அவரது சாஸ்திரிய ஞானம் உயர்தரமானது என்பது தமிழ் உலகம் நன்கு அறியும். ஒரு முறை ஸ்ரீ முசிரி சுப்பிரமண்ய அய்யர் ஸ்ரீ டி. டி. கே. யைப் பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டார்: "மந்திரிகளிடையே இவர் ஒரு சங்கீத வித்வான்! சங்கீத வித்வான்களிடையே இவர் ஒரு மந்திரி!"

காணுக்  பேட்டி

விடாக்கண்டர்

ஆசிரியரைப் பார்த்து நான், "டில்லி சலோவா? கெய்ரோ சலோவா?" என்று கேட்டேன். ஆசிரியர், "ஓ! பேஷா! எங்கே வேண்டுமானாலும் சலோ! டில்லி சலோ, கெய்ரோ சலோ, லண்டன் சலோ, வாஷிங்டன் சலோ!" என்றார்.

"இல்லை: நான் டில்லிக்கும் கெய்ரோவுக்கும் மட்டும் செல்கிறேன். லண்டனுக்கும் வாஷிங்டனுக்கும் போகப் போவதில்லை" என்றேன் நான்.

"ஏன்?" என்று கேட்டார் ஆசிரியர்.

"பாருங்கள்: இந்தப் பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் இருக்கிறாரே, அவர் ரொம்ப ரொம்ப மோசம்! சூயெஸ் கால்வாய் வழியாக நான் எத்தனை தடவைகள் லண்டனுக்குச் சென்று அவரைச் சந்தித்திருக்கிறேன்? ஆகவே, சூயெஸ் கால்வாயை உபயோகிப்போர்களில் நானும் ஒருவன்தானே? இப்போது ஈடன் லண்டனில் சூயெஸ் கால்வாய் உபயோகிப்போர் மகாநாடு கூட்டியிருக்கிறாரே! எனக்கு ஒரு அழைப்பு அனுப்பினாரா? ஆகையால்தான் நான் லண்டனுக்குப் போவதில்லை என்று முடிவு செய்திருக்கிறேன்" என்றேன்.

"ரொம்ப பேஷாய்ப் போச்சு; வாஷிங்டன் செல்வதற்கு என்ன தயக்கம்?" என்று கேட்டார் ஆசிரியர்.

"பிரஸிடெண்ட் ஐஸன்ஹவர் என்னை அமெரிக்கா வரும்படி ஒரு தடவை அழைப்பு அனுப்பினார். 'சரி' என்று ஒப்புக் கொண்டேன். சில மாதங்களுக்கு முன்னால் லண்டனில் காமன்வெல்த் மகாநாட்டுக்குப் போயிருந்தேன் அல்லவா! அப்போது அமெரிக்காவுக்கும் போவதா யிருந்தேன். ஆனால் ஐஸன்ஹவருக்கு உடல்நிலை சரியில்லாததால் என் பயணத்தை ரத்து செய்து விடும்படி நேர்ந்தது. இப்போது ஐஸன் ஹவர் மீண்டும் எனக்கு அழைப்பு அனுப்பி யிருக்கிறார். எனக்கோ இப்போது மூச்சு விடக் கூடச் சாவகாசமில்லை. பின்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து விட்டேன்" என்றேன்.

ஆசிரியர் சிரித்தார்! "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"நம்முடைய பிரதமர் ஜவாஹர்லால்ஜி செய்த காரியத்தை நீரும் செய்து விட்டீர் போலிருக்கிறது!" என்றார் ஆசிரியர்.

"அழைப்பு எனக்கானால் என்ன? பிரதமருக்கானால் என்ன? எல்லாம் ஒன்றுதானே? நம் பிரதமருக்குக் கிடைக்கும் கௌரவம், புகழ் எல்லாம் நமக்குக் கிடைக்கிற மாதிரி தானே?" என்றேன்.

"ரொம்ப சரி; சீக்கிரம் புறப்படுங்கள் டில்லிக்கு" என்றார்.

டில்லிக்குப் புறப்படுவதற்கு முன்னால் தியாகராய நகருக்குப் புறப்பட்டேன். தியாகராய நகரில் ராஜாஜி தம்முடைய இல்லத்தில் அமர்ந்து புத்தகம் ஒன்றில் எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

"இந்தப் புத்தகத்தில் தாங்கள் எதைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"கரோல் பாமரைத் தேடுகிறேன்" என்றார் ராஜாஜி.

"அவர் தங்கள் எதிரி அல்லவா?"

"ஆமாம்; பி. ஸி. ஜி விஷயத்தில் அவர் ஒரு சமயம் என் கருத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தார். அவர் அப்போது கூறிய கருத்தைத்தான் இதில் தேடிக் கொண்டிருக்கிறேன். இப்போது அவர் என்னுடைய நண்பராகி விட்டார். பி. ஸி. ஜி உபயோகமில்லை என்று இப்போது டாக்டர் பாமர் தெளிவாகச் சொல்லி விட்டாரே" என்றார் ராஜாஜி.

"தங்களுக்கு இந்த உலகத்தில் எதிரி என்று ஒருவரும் கிடையாது. இன்றைக்கு எதிரியா யிருப்பவர்கள், நாளைக்கே நண்பர்களாகி விடுவார்கள். இதுதான் தங்களுடைய அரசியல் ஜாதக விசேஷம்! எல்லாரும் காலம் கடந்த பிறகாவது தங்கள் அபிப்பிராயத்தை ஒரு நாள் ஒப்புக் கொண்டு நண்பர்களாகி விடுகிறார்கள்!" என்றேன்.

ராஜாஜி தமது இயல்பான புன்சிரிப்புடன் என்னைப் பார்த்தார்.

"பி. ஸி. ஜி வேண்டும் என்று பிடிவாதம் பிடித்த மெத்தப் படித்த மேதாவிகளெல்லாம் கூட இப்போது டாக்டர் பாமரின் தெளிவான அபிப்பிராயம் காரணமாக மௌனம் சாதிக்க ஆரம்பித்து விட்டார்கள்...." என்றார் ராஜாஜி.

"ஆமாம்; பாமரின் கருத்தைத் தாங்கள் அன்று லக்ஷ்மிபுரம் வாலிபர் சங்கத்தில் மட்டைக்கு இரண்டு கீற்றாக விளக்கிப் பாமரர்களுக்கும் புரியும்படி தெளிவாக்கி விட்டீர்களே! அத்துடன்..."

"அத்துடன் என்ன?..."

"மணமாகாதவர்களுக்குக் கருத்தடை உபயோகித்து எப்படி ஜனப் பெருக்கத்தைத் தடை செய்ய முடியாதோ, அதே மாதிரி க்ஷயக்கிருமிகள் இல்லாதவர்களுக்கு பி. ஸி. ஜியை உபயோகித்து டி. பி. யைத் தடுப்பதும் முடியாது என்று உதாரணத்தின் மூலம் விளக்கினீர்கள் அல்லவா?.."

"ஓஹோ! அதைச் சொல்கிறாயா! பி. ஸி. ஜியே ஒரு அபத்தம்; அதனால் குழந்தைகளை இம்சிப்பதுதான் மிச்சம்..."

"பிள்ளைகளைச் சிரமிக்கும் தீவிஇம்சைக்குத் தான் பி. ஸி. ஜி என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள் போலும்! சரியான பெயர்தான்!" என்று கூறினேன்.

"இது உம்முடைய வியாக்கியானமோ!" என்று கேட்டார் ராஜாஜி.

"ஆமாம்;...குயெஸ்லைப் பற்றித் தங்கள் கருத்து...?" என்று மெதுவாக இழுத்தேன்.

"ஒன்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது இன்னொன்றைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது! தெரிந்ததா?.."

"தெரிந்தது. தெரிந்தது" என்று கூறி விட்டு நேராக டில்லிக்குப் பாய்ந்தேன். நிதி மந்திரி ஸ்ரீ டி. டி. கே. அவசரம் அவசரமாகப் பார்லிமெண்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், "வீடாக் கண்டரே! வாரும், வாரும்! என்ன விசேஷம்? உம்முடைய அங்க வஸ்திரம் எங்கே?" என்று வியப்புடன் கேட்டார்.

"தாங்கள் துணிகளுக்கு 'செஸ்' வரி போட்டீர்களல்லவா? அதன் பலன்!" என்றேன் நான்.

"நீர் சொல்வது புரியவில்லையே!" என்று முகத்தைச் சுளித்தார் ஸ்ரீ டி. டி. கே.

"தாங்கள் போட்ட செஸ் வரி காரணமாகத் துணி விலை ஏறிவிட்டது. என்னுடைய பட்ஜெட் அங்கவஸ்திரம் வாங்குவதற்கு இடம் தரவில்லை. பட்ஜெட்டில் துண்டு விழுகிறது!" என்றேன்.

"துண்டு விழுந்தால் என்ன? அங்கவஸ்திரத்துக்குப் பதிலாகத் துண்டைத்தான் போட்டுக்கொள்ளுங்களேன்" என்றார் ஸ்ரீ டி.டி.கே.

என் சட்டைப்பையிலிருந்த ஒருதுண்டுக் காகிதத்தை எடுத்து அவரிடம் நீட்டினேன். அவர் அதைப் படித்து விட்டு ஒன்றும் புரியாமல் தவித்துக் கொண்டே, "இது என்ன! ஏதோ புள்ளி விவரம்போல் இருக்கிறதே!" என்று கேட்டார்.

"தங்களுக்குத் தமிழ் எழுத்துக்கள் ஞாபகத்தில் இருக்கின்றனவா?"

"என்ன அப்படிக் கேட்கிறாய்? நான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் என்பதைக் கூட மறந்து விட்டாயா, என்ன?" என்று கேட்டார் ஸ்ரீ டி. டி. கே.

"அப்படியானால் சீட்டில் இருக்கும் எழுத்து...."

"ஓகோ! இப்போது புரிகிறது. இது மூன்று புள்ளிகள் கொண்ட அக்கன்னு அல்லவா? தமிழில் ஃ!" என்றார் ஸ்ரீ டி.டி.கே.

"இந்த எழுத்தில் மூன்று புள்ளிகள் இருக்கின்றன அல்லவா!"

"ஆமாம்."

"ஒரு புள்ளி இரும்பைக் குறிக்கிறது. இன்னொன்று நிதியைக் குறிக்கிறது" என்றேன்.

"மற்றொன்று?...." என்று கேட்டார் ஸ்ரீ டி. டி. கே.

"மற்றொன்று எஃகு. பார்த்தீர்களா! எஃகில் மறுபடியும் அந்த மூன்றெழுத்துக்களும் வந்து விட்டன! அதாவது தாங்கள் இந்த மூன்றுக்கும் தானே மந்திரி? தாங்கள்

நிதிமந்திரிப் பதவி ஏற்றுக் கொண்டதற்காக மிகவும் சந்தோஷம். இதோ என்னுடைய வாழ்த்துக்கள்'' என்றேன்.

''இதில் என்ன சந்தோஷம்?'' என்று கேட்டார் ஸ்ரீ டி. டி. கே.

''நமது தேசத்தில் சுதந்திர சர்க்கார் ஏற்பட்ட பிறகு நிதிமந்திரிப் பதவியை இப்போது தான் முதன் முதலாக ஒரு காங்கிரஸ்காரர் ஏற்றுக் கொள்கிறீர்கள். அதிலும் ஒரு தமிழருக்கு இப்பதவி கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி இருக்காதா?'' என்றேன். பிறகு ''துணி மில்லை இறக்குவதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்'' என்று கூறி எகிப்துக்குப் பாய்ந்தேன்.

''நமஸ்காரம், நாஸர் ஸார்! சரியான போடு போட்டீர்கள். அதுதான் சரி!'' என்றேன் அழுத்தம் திருத்தமாக.

''எதைச் சொல்கிறீர்?'' என்று கேட்டார் நாஸர்.

''ஆளுக்கு ஆள்! வாளுக்கு வாள்! போருக்குப் போர்! என்ன ஆனாலும் சூயெஸ் கால்வாய் எகிப்துக்கே சொந்தம்!'' என்று பிரிட்டிஷ் போட்டுக்கு எதிர்ப் போடு போட்டீர்களே, அதைத்தான் சொல்கிறேன்.''

''அது சரி; சூயெஸ் கால்வாய் உபயோகிப்போர் சங்கம் ஒன்று ஏற்படுத்திச் சூயெஸ் கால்வாயை எடுத்து நடத்தப் போகிறார்களாமே?'' என்றேன்.

''நான்கூட லண்டன் துறைமுகத்தை உபயோகிப்போர் சங்கம் என்று ஒன்றை அமைத்து மேற்படி துறைமுகத்தை அதன் உடைமையாக்கப் போகிறேன்'' என்றார்.

''எங்கள் ராஜாஜிகூட இப்படி ஒரு உதாரணத்தின் மூலம் சூயெஸ் பிரச்னையை விளக்கினார். சுதந்திரம் பெற்ற இந்தியா தேசத்தில் சென்னை நகரத்தின் துறைமுகத்தை மட்டும் ஒரு அந்நியர் கம்பெனி நிர்வகித்து வந்தால் அதை எப்படி நாம் வரவேற்க முடியும்? அதைப் போல்தான் சூயெஸ் கால்வாய் மீது பிறர் சுதந்திரம் கொண்டாட நினைப்பதும் என்று சொன்னார்'' என்றேன்.

''ஆமாம்; பிரிட்டனும் பிரான்ஸும் அமெரிக்காவும் சூயெஸ் கால்வாயை எகிப்திலிருந்து எடுத்துக் கொண்டு போய் வேறு எங்கேயாவது வைத்துக்கொண்டு நடத்தட்டுமே! எனக்கு அதில் துளியும் ஆட்சேபனை கிடையாது....'' என்றார் நாஸர்.

''எகிப்திலிருந்து சூயெஸ்ஸை எப்படி எடுக்க முடியும்? அது முடியாதே!'' என்றேன்.

''அதைத்தான் சொல்கிறேன். சூயெஸ் எகிப்துக்குச் சொந்தம். அதை எடுக்கவே முடியாது என்று ஏற்படுகிறதல்லவா? பிறகு எகிப்தினிடமிருந்து சூயெஸ்ஸைப் பறிக்கப் பார்ப்பது அநியாயம்தானே?'' என்றார் நாஸர்.

''அதோ எங்கள் கிருஷ்ணன் மேனன் வருகிறார். இனி அவருடன் பேசிக் கொள்ளுங்கள். நான் போய் வருகிறேன்'' என்று பிரஸிடெண்ட் நாஸரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன்.



மேற்படி வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படம்

நானும் எனது பாரியாள் ஸ்ரீமதி ஜெயலட்சுமி அம்மாளும், எனது பேரப்பனார் பௌத்திரனும் ஸ்ரீ நா. ராமனுஜன்-ஸ்ரீமதி விலோசனாவின் துவிதீய குமாரனுமாகிய சிரஞ்சீவி சர்வோத்தமனை, சென்னை, புரசைவாக்கம், ராஜா அண்ணாமலை செட்டி ரோடு, நெ. 37 இல்லத்தில் 7-9-56 அன்று தத்து ஸ்வீகாரப் புத்திரனைப் பெற்றுக்கொண்ட வைபவத்திற்கும், அன்று மாலை நடைபெற்ற குமாரி தங்கமணியின் பரதநாட்டியத்திற்கும் நேரில் வந்து சிறப்பித்து ஆசீர்வதித்தவர்களுக்கும் நன்றி. தபால் மூலமாக வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்களது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேற்படி வைபவங்களில் விசேஷமாகச் சென்னை, புதுவை ராஜ்ய மந்திரிகளும், சென்னை மேயர் இன்னும் பிரபல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

எஸ். சோமசுந்தரம் செட்டியார், Senior Partner, N. Selvarajalou Chetty & Co., (India)



மூன்றெழுத்து வளர்ச்சி

3

மதுரையை மீனாட்சி அம்மன் கொலுவிருக்கும் தெய்வ நகரம் என்றும், சொக்கநாதர் பிட்டுக்கு மண் சுமந்த புனித பூமி என்றும் சொல்வதுண்டல்லவா? அத்துடன் அதைத் தொழிலும் கலையும் வளரும் அதிசய நகரம் என்றும் சொல்லலாம். பிரசித்தி பெற்ற டி. வி. எஸ். மோட்டார் கார் செப்பனிடும் தொழிற்சாலையில் இரவு பகல் இருபத்துநாலு மணி நேரமும் சரஸ்வதியும் லக்ஷ்மியும் நடனமிட்டு வருகிறார்கள். எத்தனை எத்தனையோ வியக்கத்தக்க அதிசயங்களைச் செய்து வருகிறார்கள். சரஸ்வதியும் லக்ஷ்மியும் ஒரே இடத்தில் ஒன்றாகச் சேர்ந்திருக்க மாட்டார்கள் என்று யாரோ சொன்ன சொல்லை மாற்றி வருகிறார்கள்.

ஒருகாலத்தில் நீலச் சட்டை போட்டுக் கொண்டு வேலை செய்வது, உடல் வளைந்து உழைப்பது, தொழிற்சாலைகளில் தொண்டாற்றுவது இந்த நாட்டில் கௌரவக் குறைவாக மதிக்கப்பட்டு வந்தன. ஆங்கிலம் படித்த மேதைகள் இரவு நேரங்களில் கூடக் கண் விழித்துக்கொண்டு, "சீசீ! தொழிற்சாலைகளில், வயல் வெளிகளில் வேலை செய்வதா? இதென்ன பிழைப்பு?" என்று வாய் விட்டு உளறினார்கள். உடனே தங்கள் கைகளை ஒருமுறை சோப்பு போட்டுக் கழுவிக் கொண்டு வந்து படுப்பார்கள். நகத்தில் கூட அழுக்குப் படாமல் இருப்பதுதான் வாழ்க்கை என்று நம்பினார்கள். கஷ்டப்பட்டு உழைப்பது அசட்டுத்தனமான காரியம், பிறர் பார்த்தால் மதிக்க மாட்டார்கள் என்ற பயம் ஏற்பட்டிருந்தது. இவ்வாறு பயப்படுவதற்கு எந்தவிதமான காரணமும் வேண்டியதில்லை என்பதைப் பல தொழில் பிரமுகர்கள், வர்த்தக நிபுணர்கள், உழைப்பால் உயர்ந்த அறிஞர்கள் உணர்ந்து நீக்கி விட்டார்கள்.

அவ்வாறு ஆங்கிலம் படித்த மேதைகள் கூடத் தொழில் செய்வதுதான் உயர்வு என்று எண்ணும்படி செய்த ஸ்தாபனம் டி.வி.எஸ். என்னும் மூன்றெழுத்துக்களை உடைய மோட்டார் தொழில் ஸ்தாபனம். ஆசியாவிலேயே இவ்வளவு பெரிய சிறப்பான மோட்டார்கார் செப்பனிடும் தொழிற் சாலைகள் இரண்டொன்றுதான் இருக்கின்றன.

டி. வி. எஸ். தொழிற்சாலையை மதுரை நகரத்து வீதியில் நின்று பார்த்தால் ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. மிகச் சாதாரணமாகத்தான் தோற்றமளிக்கிறது. ஏதோ பங்களா தோட்டத்து நீளமான காம்பவுண்டு சுவர் போலத்தான் தெரிகிறது. அந்தச் சுவரைத் தாண்டி உள்ளே சென்று விட்டால் வரிசை வரிசையாகத் தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கிற அற்புதத்தைப் பார்க்க முடிகிறது. இந்தத் தொழிற் கூடங்களில் மட்டும் ஆயிரம் தொழிலாளர்கள் தேனீக்கள் போலச் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் தலைவர் யாரோ வெள்ளைக்காரர் என்று எண்ணும்படி இருக்கிறது. ஒழுங்காக, உயர்வாக அவ்வளவு கச்சிதமாக, துப்புரவாக, கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் இருக்கின்றன. தொழிற்சாலையை இவ்வாறு சிறந்த முறையில் கவனித்து வருபவர் தொழிலதிபர் திரு டி.எஸ். கிருஷ்ணா அவர்கள் என்று அறிந்தேன்.

அவருடைய தலைமையின் கீழ்தான் ஆயிரம் பேர்கள் அபாரமான முறையில் தொண்டாற்றி வருகிறார்கள். இவ்வாறு ஒரு தமிழருடைய தலைமை



தேய்ந்து போன மோட்டார் உறுப்புகளை இரும்பை உருக்கி 'ஸ்ப்ரே' செய்து புதிதாக மாற்றுகிறார்கள்.

மேலே :- பெரிய கொல்லுப் பட்டறைக் கூடத்தையும், இயந்திரப் பகுதியையும், மணல் எண்ணெய் இயந்திரம் பழுதுபார்க்கும் பகுதியையும்.



மோட்டார் தொழில்

பகீரதன்

யில் வேலை நடைபெற்று வரும் தொழிற்சாலையில் எல்லாம் ஒழுங்காகவும், மேல் நாட்டார்கூடப் பார்த்து மூக்கின் மேல் விரல் வைத்து வியக்கும்படியும் காரியங்கள் நடைபெற்று வருவதைப் பார்க்கும்போது எனக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. கண்களை ஒரு முறைக்குப் பலமுறை கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. என்னுடைய இந்தச் சந்தேகத்தைப் போக்கிக் கொள்வதற்காகத் தொழிற்சாலைக்குள் இருந்த ஒரு தொழிலாளியைப் பார்த்து, '' உங்கள் தொழில் அதிபர் இந்தப் பக்கம் எப்போதாவது வருவாரோ ?'' என்று கேட்டேன். '' நான்தானே அந்தத் தொழில் அதிபர் '' என்றார். தொழில் அதிபரே தொழிலாளர்களுடன் தொழிலாளராய் இருந்து விட்டால் பிறகு தொழில் வளரக் கேட்பானேன்!


தொழிற்சாலைக்குள் பிரவேசிப்பதற்குள் இன்னும் சில விவரங்களையும் தெரிந்து கொண்டு விடுவோம். இந்தத் தொழிற்கூடத்தின் விஸ்தீரணம் ஐந்து ஏக்கரா சுற்றளவு உடையது. வருடத்தில் இந்தத் தொழிற்சாலையில் 15,000 மோட்டார் கார்களைப் பழுது பார்த்துச் செப்பனிட்டுக் கொடுக்கிறார்களாம். மாதம் ஒன்றுக்கு முப்பத்தைந்து மோட்டார் பஸ் வண்டிகளைக் கட்டி முடித்து விடுகிறார்களாம்.

இந்தத் தொழிற்சாலை உருவாக்குவதற்குப் பல லட்சம் ரூபாய்களை வாரி இறைத்திருக்கிறார்கள். அதன் பயனாக, மதுரை நகரில் ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்களின் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை தீர்ந்தது. சுமார் ஐயாயிரம் பேர்கள் பசியின்றிச் சாப்பிட முடிகிறது. சமூகத்தில் அவர்கள் கண்யமாக வாழ முடிகிறது.


இனி தொழிற்சாலைக்குள் செல்லுவோம். வாசலைக் கடந்து உள்ளே போட்டிருக்கும் சிமெண்ட் சாலை மீது செல்லலாம். அந்தச் சாலை வழியே சில அடிகள் சென்று வலது பக்கம் திரும்புவோம். மிகப் பெரிய தொழிற்கூடம் நம் கவனத்தைக் கவருகிறது. அங்கு ஏராளமான கார்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கின்றன. வந்த கார்களை அங்குள்ள தொழிலாளர்கள் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்கள். அவர்கள் கண்ணுக்கு ஏதோ புலப்படுகிறது. அங்கிருக்கும் இயந்திரத்தின் பக்கம் காரை ஓட்டுகிறார்கள். ஏதோ விசையை அமுக்குகிறார்கள். கார் ஆகாசத்தில் போய் அந்தரத்தில் நிற்கிறது. அதன் கீழே சென்று மேலே அண்ணாந்து காரின் அடிப் பாகங்களைப் பார்க்கிறார்கள். வெகு விரைவாக அந்தக் காரில் உள்ள பழுதுகளைக் கண்டுபிடித்துச் செப்பனிட்டு விடுகிறார்கள். இந்தக் கூடத்தில் சின்னச் சின்ன பழுதுகளை மட்டும் பார்த்துச் செப்பனிட்டுக் கொடுத்து வருகிறார்கள் என்று சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிகிறது.

அடுத்த தொழிற்கூடத்துக்குப் போகுமுன் அங்குள்ள தொழிலாளர்களுக்காகப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிக்குள் செல்வோம். இதில் இரவு பகல் இருபத்துநாலு மணி நேரமும் வைத்திய நிபுணர்கள் இருக்கின்றனர். தொழிலாளர்களுக்கு வேண்டிய சிகிச்சைகள் இலவசமாகவே அளிக்கப்படுகின்றன. மிகப் பெரிய ஆஸ்பத்திரிகளில் உள்ள நவீன வசதிகள் எல்லாம் இருக்கின்றன. 'அல்ட்ரா வயலட்,' 'இன்பரா-ரெட்' என்று சொல்லும் அதிக பணச் செலவுடைய வைத்திய சாதனங்களும் இருக்கின்றன. இந்த வைத்திய வசதிக்காகவே

மோட்டார்காரின் அச்சை மிக நுணுக்கமாகத் துருவித் துருவிப் பார்த்துச் செப்பனிடும் அபூர்வ 'லேத்'



மோட்டார் இயந்திரத்தை வெளியில் எடுக்காமலேயே அதற்கு வேண்டிய 'கார்பன்'களை இயந்திரத்தின் உதவியால் செதுக்குவதையும் காணலாம்.



டி. வி. எஸ். தொழிற்சாலையில் வேலை செய்யலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. நோயற்ற வாழ்வு தானே குறைவற்ற செல்வம்? நோயைப் போக்குவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கும் இடம் தானே நோயாளிக்குச் சொர்க்கம்?

அடுத்த தொழிற் கூடத்தில் மோட்டார்களில் இருக்கும் எல்லாப் பெரிய பழுதுகளும் செப்பனிடப்படுகின்றன. மோட்டார்களில் உள்ள மிக நுணுக்கமான சாமான்களை எல்லாம் சரிபார்க்கிறார்கள். மோட்டார்களின் அச்சுகளெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பரிசோதிக்கும் அதிசயமான இயந்திரம் ஒன்றும் இருக்கிறது. இதன் உதவியால் எல்லா மோட்டார் கார் அச்சுகளையும் வெகு சுலபமாகப் பரிசோதித்து விடுகிறார்கள்.

இந்தத் தொழிற்கூடத்தை ஒட்டினாற் போலவே மோட்டார்களுக்கு வேண்டிய சகல சாமான்களும் உள்ள கிடங்கு ஒன்றும் இருக்கிறது. இதையும் தாண்டி அப்பால் சென்றால் மோட்டார் இன்ஜின்களைத் தனித் தனியே கழற்றி அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துச் சுத்தம் செய்யும் பகுதியைப் பார்க்கலாம். இங்கு மோட்டார் இன்ஜின்களை ஒவ்வொரு அணு அணுவாகப் பரிசோதிக்கிறார்கள். அங்கேயே அதை இயக்கிப் பார்க்கிறார்கள். அதில் அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டால்தான் அங்கிருந்து மோட்டார்களில் பொருத்துவதற்கு அனுப்புகிறார்கள்.

இந்தப் பகுதியில் உள்ள மோட்டார் இன்ஜினைப் பார்த்தபோது எனக்கு ஒரே மயக்கமாக இருந்தது. அந்த இன்ஜின்கள் அப்படியே கிரீஸ் எண்ணெயிலும், இதர மோட்டார் எண்ணெய்களிலும் ஊறி ஒரே எண்ணெய்ப் பிசின் ஏறிக் கிடந்தன. ''இதை எப்படிச் சுத்தம் செய்வது? அப்படியே சுத்தம் செய்தாலும் சின்னஞ் சிறு இடுக்குகளில் உள்ள எண்ணெய்ப் பிசினை எவ்வாறு அகற்றி எடுத்துவிட முடியும்?'' என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டேன்.

''அந்தத் தொல்லையே இங்குள்ள தொழிலாளர்களுக்கு வேண்டாம். இந்தமாதிரி மோட்டார் உறுப்புகளிலுள்ள எண்ணெய்ப் பிசினைச் சுத்தப்படுத்துவதற்கென்றே இங்கிலாந்திலிருந்து ஒரு அதிசய இயந்திரத்தை வரவழைத்து வைத்திருக்கிறோம். இதைப் போன்ற இயந்திரம் நமது நாட்டில் வேறு தொழிற்சாலைகளில் இல்லை என்றே சொல்லி விடலாம். அதில் எந்தமாதிரி எண்ணெய் அழுக்குப் படிந்த மோட்டார் உறுப்புகளைப் போட்டாலும் போதும். இரண்டு நிமிஷங்களில் எண்ணெய்ப் பிசின்களை எடுத்துவிட்டுச் சுத்தம் செய்து கொடுத்துவிடும்'' என்றார் தொழிற்சாலை மானேஜர் ஸ்ரீ சேஷாத்திரி.

அடுத்த கணம் அந்த இயந்திரம் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்று காண்பித்

---


1. கார் பிரேக்குகள் சரியாக இருக்கின்றனவா என்று பரிசோதனை நடக்கிறது. 2. புது உறுப்புகள் வார்க்குமிடம். அந்தத் தொழிலாளி முகமூடி அணிந்திருப்பதைக் கவனியுங்கள். 3. 'வெல்ட்' மூலம் மோட்டார் உறுப்புகளைப் பற்ற வைக்கிறார்கள். 4. மோட்


தார். 'ட்ரைக்ளோரைத்தின்' என்னும் மருந்தின் உதவியைக் கொண்டு அந்த இயந்திரம் வெகு விரைவில் எண்ணெய்ப் பிசின் படிந்த மோட்டார் உறுப்புக்களைச் சுத்தம் செய்யும் அதிசயத்தைப் பார்த்தேன். இந்த இயந்திரத்தையும் அது மோட்டார் உறுப்புக்களைச் சுத்தம் செய்யும் அதிசயத்தையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் எண்ணெய்ப் பிசின் நிறைந்த மோட்டார் உறுப்புக்கள் பளபளவென்று மின்னும் புத்தம் புது உறுப்புகளாக மாறும்! விந்தையைப் பார்த்தால் ஏதோ மந்திர சக்தியினால் வேலை நடக்கிறதோ என்று வியக்கத் தோன்றுகிறது.

இன்னும் பழையமோட்டார் உறுப்புக்கள் புதுப்பிக்கும் இடத்தையும், அங்கு நடக்கும் அதிசயத்தையும் பார்த்துப் பார்த்து அதிசயித்துப் போனேன். தேய்ந்துபோன மோட்டார் உறுப்புக்களைச் சாதாரணமாகத் தூர எறிந்து விடுவார்கள். அதில் உள்ள இரும்பு ஒன்று தான் உபயோகமாகும். ஆனால் டி. வி. எஸ். தொழிற் சாலையில் அந்த மாதிரி தேய்ந்து போன மோட்டார் உறுப்புக்களை மீண்டும் புதுப்பிக்கிறார்கள். தேய்ந்த பாகத்தில் இரும்பை உருக்கிவிடுகிறார்கள். பிறகு அதைப் புது மோட்டார் உறுப்பாக மாற்றி விடுகிறார்கள். இவ்வாறு பழைய மோட்டார் உறுப்புக்களைச் செப்பனிடுவதின் மூலம் பல லட்சம் ரூபாய்கள் மேல் நாட்டுக்குச் செல்லாமல் மிச்சப்படுத்துகிறார்களாம்.

மோட்டாருக்குள் எத்தனை எத்தனையோ உறுப்புக்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் சுத்தமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். அவைகள் உறுதியாக இருக்கின்றனவா இல்லையா என்பதைச் சாதாரணக் கண்ணால் பார்த்துக் கண்டுபிடிக்க முடியாது. அதைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு நவீன யந்திரம் இருக்கிறது. இதில் நாம் எந்த மோட்டார் சாமானைப் பரிசோதனை செய்ய வேண்டுமோ அந்தச் சாமானைக் கொண்டு போய் வைத்து விட்டால் போதும். அதில் உள்ள குறைகளை, அதாவது பூதக்கண்ணாடி கொண்டு பார்த்தால்கூடத் தெரிந்துகொள்ள முடியாத குறைகளைக் கண்டுபிடித்துக் காட்டுகிறது.

அந்தஇயந்திரத்தில் இரண்டு பக்கங்களிலும் மின்சார சக்தி பாய்ந்து செல்லக்கூடிய வசதி இருக்கிறது. அதில் எந்த மோட்டார் உறுப்பைக் கொண்டு வைத்தாலும் அந்த உறுப்புகளில் மின்சாரம் பாய்கிறது. அடுத்த கணம் அந்த மின்சாரத்துடன் ஒருவித வர்ண மையும் செல்லுகிறது. நாம் பரிசோதனைக்கு வைத்திருக்கும் மோட்டார் உறுப்பில் எந்த இடத்தில் உடைந்திருக்கிறதோ, அல்லது கண்ணுக்குத் தெரியாமல் மயிர்க்கால் போன்ற கீறல் ஏற்பட்டிருந்தாலும் வர்ண மை கோடு போட்டுக்காண்பித்து விடுகிறது. இவ்வாறு மோட்









டார் அச்சுகள் பரிசோதிக்கப்படுகின்றன. 5. பால்பேரிங் இயந்திரங்கள் தேய்வுறாமல் இருக்கின்றனவா என்று சோதனை நடக்கிறது. 6. மோட்டார் ரேடியேட்டர்கள் சரிபார்க்கப்படுகின்றன. 7. டீசல் எண்ணெய் இயந்திரங்களை மிகவும் கவனமாகப் பரிசோதிக்கிறார்கள்.

டாரின் எல்லா உறுப்புக்களையும் அதிசயமாகப் பரிசோதிக்கும் அற்புதமான இயந்திரம் இருப்பதால்தான் டி. வி. எஸ். பஸ்களோ, லாரிகளோ நடுச் சாலைகளில் நிற்பதில்லை.

இதைத் தவிர மோட்டாருக்கு வேண்டிய உறுப்புக்களில் பெரும் பகுதியை இத் தொழிற் சாலையிலேயே தயாரித்து விடுகிறார்கள்.

இந்தத் தொழிற்கூடங்களில் வரிசை வரிசையாகவும், வட்ட வடிவமாகவும், பலவிதக் கோணங்களில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யும் அதிசயத்தைப் பார்க்கிறோம். அவர்கள் கை வண்ணத்தால் குப்பையும் கூளமுமாக இருந்த பழைய மோட்டார் சாமான்கள், அற்புத மோட்டார் வாகனங்களாக வெளி வரும் ஜால வித்தைகளைப் பார்க்கிறோம்.

ஒரு இடத்தில் காற்றைப்பிடித்து அடைத்து அதற்குப் புயற்காற்றுக்கு உள்ள சக்தியைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் காற்றின் அசுர சக்தியின் மூலம் மோட்டார் உறுப்புக்கள் சுத்தம் செய்யப்படுகின்றன. இன்னொரு இடத்தில் தண்ணீரைப் பீச்சும் குழாய்கள் இருக்கின்றன. இந்தக் குழாய்களின் மூலம் வரும் தண்ணீருக்கும் அதிக சக்தியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் கற்பனைக்கு எட்டாத வேகத்துடன் வரும் தண்ணீரின் மூலம் மோட்டார் கார்களைக் கழுவுகிறார்கள். மற்றொரு இடத்தில் ஒரு இயந்திரம் இரும்பையே உருக்கித் தண்ணீர் போலத் தெளிக்கிறது. இன்னும் சில இடங்களில் கண்ணைப் பறிக்கும் மின் ஒளியின் மூலம் இரும்புப் பற்ற வைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

இந்தக் காட்சிகளை யெல்லாம் பார்க்கும் போது ஏதோ மாயாபுரியில் இருப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது. டி.வி.எஸ். தொழிற்சாலையையும், அதில் வேலை செய்யும் தொழிலாளர்களை நடத்தும் விதத்தையும் பார்த்தால் "இதுவன்றோ சோஷலிஸ முறை!" என்று சொல்லத் தோன்றுகிறது.

பொதுவாக ஒரு தொழிற்கூடத்தையும், தொழில் நுணுக்கத்தையும், அதில் வேலை செய்யும் அதிசயத்தையும் அனுபவிப்பதற்கு, தொழில் ஞானமும், தொழில் அனுபவமும், தொழில் மனப்பான்மையும், அறிவு முதிர்ச்சியும் வேண்டும். ஆனால் டி. வி. எஸ். தொழிற்சாலைக்குள் சென்றால் மேலே கூறிய அத்தனை ஞானத்தையும் நாமே பெற்று விடலாம் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறு காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய அருமையான தொழில் ஸ்தாபனத்தை அமைத்து, அதை மிகத் திறமையாக நடத்தி வரும் இந்தத் தொழிற்கூட அதிபர்கள் உண்மையிலேயே மிகச் சிறந்த மேதைகளாகத்தான் இருக்க வேண்டும். அவர்களுக்குத் தொழிலும், தொழிற் கூடத்தில் பணியாற்றும் தொழிலாளர்களும் உயர வேண்டும் என்ற உன்னத எண்ணமும் இருக்கத்தான் வேண்டும். அப்பேர்ப்பட்டவர்கள் கையில் இந்தத் தேசத்தில் உள்ள பல் தொழில் அத்தனையுமே ஒப்படைத்து விடலாம் என்பதே என் அபிப்பிராயம்.

சரஸ்வதியும் லக்ஷ்மியும் நடனமிட்டு வரும் தொழிற் கூடத்துக்கு ஒரு வணக்கம் செய்துவிட்டு, மண்டபத்திலிருந்து கிளம்புவதற்கு முன்பு அங்குள்ள சிற்றுண்டிச்சாலையில் ஏதாவது சாப்பிடுவோம். 'அடாடா! சிற்றுண்டி என்றால் இதுவல்லவா சிற்றுண்டி! காப்பி என்றால் இதுதான் காப்பி! தேநீர் என்றால் இதுதான் தேநீர்' என்று சொல்லிச் சொல்லி, அனுபவித்துச் சாப்பிடும் வண்ணம் எல்லாம் இருக்கின்றன. டி. வி. எஸ். தொழில் அதிபர்கள் மோட்டார் இதயத்தின் நுணுக்கத்தை மட்டும் அறிந்திருக்கவில்லை. மனித இதயத்தின் நுணுக்கத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். போதும் போதும் என்று சொல்லும்படி செய்வது வயிற்றுக்கு சமைப்படும் ஆகாரம்தான் அல்லவா? ஆகையால் தொழிலாளர்கள் மனம் நிறையும்படி அருமையான சிற்றுண்டிகள் தயாரித்து வழங்குகிறார்கள்.

தொழிலாளர்களுக்கு வைத்திய வசதியும் சிற்றுண்டியும் வழங்குவதை விடச் சிறந்த பணி வேறு என்ன இருக்கிறது? இவற்றுக்காக டி. வி. எஸ். ஸ்தாபனம் வருஷத்துக்கு அறுபதினாயிரம் ரூபாய் செலவழிக்கிறதாம். டி. வி. எஸ். சிற்றுண்டியின் ருசியைச் சுவைத்த போது அறுபதினாயிரம் என்ன அதற்குமேலும் சில ஆயிரங்கள் செலவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தோன்றியது.

** ** **

இத் தொழிற்சாலையைப் பார்த்து விட்டு வரும் போது, இதில் உள்ள தொழிலாளர்களைப் பற்றிய நினைவு வந்தது. எல்லாவிதமான சுகசௌகரியங்களுடன் கூடிய தொழிற்சாலையாக இருந்தாலும் அதில் தொழிலாளர்கள் மனக் குறையுடன் இல்லாமல் இருக்கப் பார்த்துக் கொள்வது என்பது சாதாரண காரியமில்லை. டி. வி. எஸ். தொழிற்கூடத்தில் தொழிலாளர்கள் எப்படி முணுமுணுக்காமல் வேலை செய்கிறார்கள்? அவர்கள் முகங்களில் எப்பொழுதும் உற்சாகம் பொங்குவானேன்? நடையில் ஒரு மிடுக்கும், அடக்கமும் இருப்பானேன் என்பதைப் பற்றிய எண்ணங்களே தோன்றின.


டி. வி. எஸ். தொழில் அதிபர்கள் உத்தமமான குணமும், மனமும் படைத்தவர்கள். அவர்களிடம் அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த பலர் தொண்டாற்றுகிறார்கள். மதுரையிலும், இன்னும் அவர்கள் தொழிற்சாலைகள் இருக்கும் ஊர்களில் எல்லாம் சரஸ்வதியும் லக்ஷ்மியும் சேர்ந்தே வாழ்கிறார்கள். தொழிலும் செல்வமும் ஓங்கி வளருகின்றன. இந்தியாவில் வேறு எந்தத் தொழிற்கூடங்களிலும் இல்லாத ஒற்றுமையைத் தொழிலாளர்களிடையே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் நடத்திவரும் தொழிலும் லாபமுடையதா யிருக்கிறது. இவ்வாறு பல வழிகளிலும் நாட்டின் பண்பாட்டையும் செல்வத்தையும் வளர்த்து வருகிறார்கள். இதை யெல்லாம் எப்படிச் சாதித்து வருகிறார்கள்?

மேற்படி கேள்விக்குப் பதில் கண்டு பிடிப்பதில் எனக்கு அவ்வளவு கஷ்டம் ஏற்படவில்லை. டி. வி. எஸ். தொழிலாளர்களே அதற்கு விடை கூறி விட்டார்கள். அவர்கள் தங்கள் தொழிலதிபர்களைப்பற்றியும், தங்கள் தொழிற்சாலையைப் பற்றியும் குதூகலத்துடன் கூறுவதைக் கேளுங்கள். (தொடரும்)



எவ்வளவு பிரகாசமான, சுகமான வெளிச்சம்
—சிக்கனமானதும் கூட!

பிலிப்ஸ் ப்ளோரஸெண்ட் லைட்டுகள கண்களுக்கேற்றவை யாக இருப்பதற்குக் காரணம் உண்டு—இதன் வெளிச்சம், குளிர்ச்சியாகவும், மிருதுவாகவும் இருப்பதால் உங்களுடைய கண்களை தளர்ச்சியடையாமல் பாதுகாக்கிறது. மேலும இது சிக்கனமானதும் கூட! பிலிப்ஸ் ப்ளோரஸெண்ட் லாம்புகள் சாதாரண பல்புகளைவிட மூன்று மடங்கு அதிக வெளிச்சத்தை அதே மின்சார சக்தி செலவில் அளிக்கின்றன. இன்றிலிருந்து உங்கள் வீடுகளில் பிலிப்ஸ் ப்ளோரஸெண்ட லைட்டுகளைப் பொருத்தி ஆனந்தம் அடையுங்கள்.



பிலிப்ஸ் ப்ளோரஸெண்ட் லாம்புகள் சுமாராக 7500 மணி நேரங்கள் எரிகின்றன. உங்கள் வீட்டில் பிலிப்ஸ் லைட்டை பொருத்துங்கள்.

பிலிப்ஸ்

'டி எல்' ப்ளோரஸெண்ட் லைட்டு & பிட்டிங்ஸ்

உங்கள் வேலை சிரமத்தை குறைக்கும்!

உங்கள் வீட்டில் எவ்விதம் ப்ளோரஸெண்ட் லைட்டுகளை உபயோகிப்பது என்பதை காண்பிக்க, உங்கள் பிலிப்ஸ் லைட் வியாபாரியிடம் எழுதியோ. அல்லது நேரில் பார்த்தோ, இலவச ஆலோசனையை பெருங்கள்.

PHILIPS

கிளைகள்:-
கல்கத்தா-மதராஸ்-பம்பாய்-டெல்லி-லக்னோ-கான்பூர்-பாட்னா-பங்களூர்

அவரைப் பாருங்கள்!

- அவருக்குச் சளி மூண்டிருக்கிறது அல்லது தொண்டையில் கபம்.
- அவர் படுக்கையில் உட்காருகிறார் அல்லது ஜன்னலை நோக்கி ஓடுகிறார்.
- அவருக்கு மூச்சை யடைப்பதுபோல இருக்கிறது; மூச்சுவிட அவஸ்தைப் படுகிறார்.
- அவர் உள் மூச்சு குறுகியும் விரைவாயும் இருக்கிறது.
- அவர் வெளி மூச்சு கடினமாகவும் நீண்டும் இருக்கிறது.
- இருமும்போது அவருக்கு வேர்க்கிறது
- அவர் உதடுகள் வெளுத்திருக்கின்றன
- அவர் முகம் ஒரு கதையைக் கூறுகிறது

அதுதான் ஆஸ்த்மா

கவலையும் பச்சாதாபமும் தோய்ந்த கண்ணீருக்கும் அப்பாற்பட்ட உருவமாக இவர் காட்சியளிக்கிறார்

நவரத்ன கல்பம்

உபயோகியுங்கள்

ஆனந்தமும் உற்சாகமும் உள்ளவராக இவரை அப்படியே மாற்றிவிடும்

○●○

வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம், பவழம், முத்து, கோமேதகம் வைடூரியம் ஆகிய ஒன்பது உயர்ந்த கற்களின் கலவையே நவரத்ன கல்பம்



பண்டிட்

துர்க்காதத் வைத்யா

கவிராஜ்

வைத்திய வாசஸ்பதி

அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது

○●○

இதர விவரங்களுக்கு எழுதவும்

NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (India)



The Choice of all

GUJARAT INDUSTRIES
PRIVATE LIMITED

LALJI MANSING BUILDING,
LOHAR CHAWL BOMBAY-2.

"விலை ரூ. 2-8-0 முதல் ரூ. 15 வரையுள்ள பல ரக சாம்பியன் பேனாக்களைக் காண்பிக்குமாறு உங்களது பேனா மைகளைக் கேளுங்கள்."

யோக சிகிச்சை

சுந்தரம்

6. கூட்டுறவின் அபாயம்

தொத்து வியாதியுடன், அதிலும் டி. பி. யுடன் போரிடுவது கடினம். இது எப்பொழுது, எப்படி, எவரைத் தாக்கு மென்று சொல்லுவதற்கில்லை. டி. பி. நோயாளிகளுடன் பழக, அவசியம் ஏற்படுகிறவர்களைப் பற்றிக் கூறினேன். டாக்டர்கள், நர்சுகள், மற்றவர்கள், டி. பி. நோயாளிகளுடன் பழகுவதைத் தடுக்க இயலாது. மேல் நாட்டு நிபுணர்களும் இந்த விஷயத்தில் மிக்க கருத்து செலுத்தியுள்ளார்கள். சில சரீரங்கள் டி. பி. பூச்சி உள்ளே நுழைந்ததும், சின்னங்கள் உடனே வெளியாகி விடுகின்றன. இது ஒரு நன்மை எனக் கருதுகின்றனர். இவ்வாறு வெளிப்படுத்தும் சரீரமுடையவர்கள் தான் டி. பி. நோயாளிகளுடன் நெருங்கி உதவத் தேர்ந்தெடுக்கப் படலாம். ஏனெனில் இச்சின்னங்களால் உடனே டி.பி. நோய் அதிகரிக்கு முன், குணப்படுத்தி விடலாமென்பது கருத்து. இவர்களைப் 'பாசிடிவ்' (Positive) என்கிறோம். டி. பி. கிருமிகளை உள் இழுத்துக் கொண்டு, அது அமோகமாக வளர விட்ட பின்னரே சின்னங்களை வெளியாக்கும் உடல் போக்கு உதவாது. இத்தகைய உடல் அமைப்பை 'நெகடிவ்' (Negative) என்கிறோம்.

இத்தகைய பாசிடிவ், நெகடிவ், பரீட்சையை, டாக்டர்களிடம், நர்சுகளிடம், சானிடோரியம் பணியாளர்களிடம், மேல் நாட்டார் நடத்தித் தேர்ந்தெடுக்கின்றனர். இதற்கு 'ட்யூபர்குலின்' (Tuberculin) என்ற, டி. பி. அம்சம் கொண்ட சரக்கை ரத்தத்தினுள் ஏற்றி விளைவை ஆராய்ந்து கொள்ளுகின்றனர். இத்தகைய பரீட்சையை நம் நாட்டில், நோயாளிகளை அணுகிப் பணி புரிகிறவர்களிடம் நடத்துகிறார்கள். நடத்திய பின்பே, தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதற்கில்லை. ஆனால் இந்த ட்யூபர்குலின் ஏற்றுதல் மிக்க அபாயமென்றே கருதுகிறேன். சமீபத்தில் வெளியிடப் பட்டுள்ள ஆராய்ச்சியில், பி. ஸி. ஜிக்கு அஸ்திவாரமான 'பாசிடிவ்' கருத்துக்கள் முறியடிக்கப் பட்டுள்ளன. 'பாசிடிவ்' மனிதர்களில்தான் அதிக தாக்குதலும், அதிகமரணமும் ஏற்படுகின்றன. ஒவ்வொருவர் பாதுகாப்புக்கும், டி. பி. தொத்தும் முறை ஆராயப்பட வேண்டும் என்றேன். நோயுள்ளவர், நோயற்றவர், நோய் நம்மைத் தொத்திக் கொள்ளச் சமயம் இல்லை என்று கருதுகிறவர், எல்லோரும், டி. பி. தடுப்பு முறையில் சம்பந்தப்பட்டதான, தொத்தும் விதத்தை அறிந்து கொள்ள வேண்டும். டி. பி. யின் காரணத்தை அறிவதே டி. பி. வராமல் பாதுகாத்துக் கொள்ளுவதாகும். இது என்னுடைய அபிப்பிராயம் மட்டும் அல்ல; வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயம் மட்டும் அல்ல; நம் வேதமும் இவ்வாறே முறையிடுகின்றது.

சானிடோரியங்களில் தொழில் புரிவோருக்கு 'ட்யூபர்குலின்' வழியை விதிக்கின்றனர். எல்லா நோயாளிகளும் சானிடோரியத்தில் இருப்பவரானால், தொத்திய அபாய அறிவிப்பு ஆராய்ச்சி உதவி செய்யலாம். டி. பி. தாக்கப்பட்டவர் எல்லோரும் சானிடோரியத்தில் எங்கு இருக்கின்றனர்? இவ்வளவுபேர் இருக்கச் சானிடோரியங்கள் தான் உள்ளனவா? தற்கால அரசாங்கம், அமோகமாக நிர்மாணிக்கச் சக்தி கொண்டுள்ளதா? நோயாளிகளின் கணக்குக்குச் சானிடோரிய வசதி ஆயிரத்தில் ஒன்று கூட இல்லை.

குஷ்ட நோய் கண்டவர், குடும்பத்திலேயே இருந்து விடுவது போல், டி. பி. நோய் கண்டவரும் தத்தம் சுற்றத்துடன்தான் இருந்து விடுகின்றனர். தனம் உள்ள நோயாளிகள் மிகச் சிலர், இவர்களுக்குண்டான வசதி பெரும்பான்மையான இந்த டி. பி. நோயாளிகளுக்கு இல்லை. குழந்தைகளுக்கு டி. பி. வந்தால், பெற்றோரிடையேயும், பெற்றோருக்கு வந்தால் குழந்தைகளிடையேயும், சுற்றத்தார் ஒருவருக்கு வந்தால் குடும்பத்தினிடையேயும், வசிக்க அவசியம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் வெட்டவெளியானதே. வாழ்க்கை வசதிக் குறைவுதான் காரணம். அறியாமையும் கண்மூடித்தனமான சுற்றப் பாசமும், துணைக் காரணங்களாகும்.

நம் சமூகத்தில் ஏழைகள் தான் அதிகம். இவர்களுக்குக் கிடைக்கும் வீட்டு வசதி எத்தகையது? இருக்கும் ஒரு அறை அல்லது ஒரு சிறு வீட்டில்,

யோகாசன நிபுணரின் விலாசம்: ஸ்ரீ சுந்தரம், 1A, பேய்ப்பா கார்டன், டாஸ்கர் டவுன், பங்களூர்-1

நோயாளியை எங்கு ஒதுக்குவது? பெரிய நகரங்கள் அதிகரிக்கின்றன. முன்யோசனையின்றித் தொழிற்சாலைகளை ஒரு சில இடங்களில் திரட்டி, ஜனத்தொகையை அவ்விடங்களில் அதிகரிக்கின்றனர். தொழிற்சாலைகளைக் கூட்டமாக ஆரம்பிக்க அனுமதிக்குமுன், சேரும் ஜனங்களுக்கு வாசம், நீர், பாலை, உணவுப் பொருள் வசதிகளைச் சிந்தித்துச் செய்வதுமில்லை. பிழைப்பு நடக்கத் தொழில் எங்கு கிடைத்தாலும் அங்கு செல்லத்தான் வேண்டியிருக்கிறது. சென்னை, பம்பாய், கல்கத்தா என்ற மா நகரங்களில், சாதாரண வருமானம் கொண்டவனுக்குக் கூட, என்ன வாச வசதி கிடைக்கின்றது? மாதம் ஐம்பது நூறு ரூபாய் கொடுத்தாலும் இரண்டு சிறு அறைகள் கிடைப்பது கஷ்டம். இதில் பத்துப் பேர்கள் வசிக்க வேண்டும். பதினைந்து பேர்கள் வசிக்கும் தொழிலாளர் குடிசைகளும் எங்கும் காண்கிறோம்.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு டி. பி. தாக்கிவிட்டால் என்ன பாதுகாப்புகள் செய்து கொள்ள வேண்டும்? டி. பி. தாக்கிய உடனேயே ஆரம்ப நிலையிலேயே, தொத்தும் அபாயம் பெருகுவதில்லை. இருமல் ஏற்படுவது, கபம் வெளியாவது, ஜுரம் உண்டாவது, என்ற நிலைக்கு டி. பி. நோயாளி வந்த உடனே தான் இவன் அபாயக் கருவியாக மாறுகிறான். டி. பி. கிருமி வெளியேறித் தொத்தும் சக்தி கொள்ளுகிறது.

இருக்குமிடத்தில் இவனைத் தனிப்படுத்தி விடவேண்டும். சானிடோரியத்தில் நுழைக்க முடிந்தால் செய்து விடலாம். சானிடோரியத்தில் நுழைந்து விட்டால் யோக சிகிச்சைக்கு வழி? சானிடோரியங்களில் எல்லாம் யோக சிகிச்சை நுழைய வேண்டுமென்பதே நம் கருத்து. மருந்தையே பிரதானமாகக் கொண்ட அரசாங்கம் இதில் கையாளும் அல்லோபதி (Allopathy), தற்காலத்தில் பல முறைகளைச் சேர்த்துக் கொண்டுள்ளது. டையடோதெரபி, உணவு வைத்தியம், ஹைட்ரோதெரபி, ஜல வைத்தியம், பிசிகோதெரபி—உடல் பயிற்சி வைத்தியம், சைகோதெரபி—மன வைத்தியம்—எல்லாம், அல்லோபதிக்குள், நிபுணர்களின் ஆமோதிப்பில் புகுந்துள்ளன. ஏன் யோக சிகிச்சை புகக் கூடாது? பிசிகோதெரபியின் ஒரு அம்சமாக வேண்டுமென்றாலும் இதைச் சேர்த்துக் கொள்ளட்டும். எல்லோருக்கும் சானிடோரியத்தில் இடம் கிடைக்கும் நிலைமை வரும் முன்பே, யோக சிகிச்சை, சானிடோரியத்துக்குள் புகுந்து விடுமெனக் கருதுகிறேன்.

குழந்தைகளைத் தான் வெகு சீக்கிரம் டி. பி. கிருமி தாக்கி விடுகிறது. இக்குழந்தைகள் எக் காரணம் பற்றியும் நோய் கொண்டவரை அணுகக்கூடாது.

நோயாளிகள் தம் படுக்கையிலோ, கட்டிலிலோ, குழந்தைகளையும், சிறுவர்களையும் சேர்த்துக் கொள்ளுவது கூடாது. குடும்பத்தார் உண்ணும் எப்பண்டமும், நோயாளி தொடுவதற்கோ சுவாச காற்றோட்டத்துக்கோ, உட்படக் கூடாது. நோயாளிக்கு அவனருகே எடுத்துச் செல்லப்பட்ட தின்பண்டங்கள், பானங்கள், மறுபடியும் பொது உபயோகத்துக்கென வெளிவரக்கூடாது.

டி. பி. நோயாளியின் துணிகள், படுக்கைகள், மற்றவைகளுடன் கலக்கக் கூடாது. அவைகளைத் தனியாகச் சேகரித்து, தனியாகச் சுத்தம் செய்து, தனியாக உலர்த்தி வைக்க வேண்டும். அவன் உபயோகிக்கும் பாத்திரங்கள், அவன் அறையில் தான் இருக்கவேண்டும். அவை தனி முறையில் கழுவப்பட்டு, மறு உபயோகத்துக்கு அங்கேயே வைக்கப்பட வேண்டும். நெருப்பில் போசுக்கப்பட்ட பிறகோ அல்லது கொதி நீரில் அதிக நேரம் வைத்திருந்த பிறகோதான் இவைகளை மற்றவர்கள் உபயோகிக்கலாம்.

(தொடரும்)



எல்லோருக்கும் தெரியும்—
நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு ப்ரூக் பாண்ட் தேயிலை அதிகப்படியான, ருசியான தேநீரை அளிக்கிறது
காற்றுப் புகாமல் நன்கு பாக் செய்யப் படுவதால் ப்ரூக் பாண்ட் தேயிலை களங்கமற்று மெத்தவும் சுத்தமாக உங்களுக்குக் கிடைக்கிறது
ஒவ்வொரு நாளும் 24,90,406 ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டுகள் வாங்கப்படுகின்றன
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள் !
Blend
Brooke Bond Tea
BB 140D

தேவியின் கடிதம்

பரிசுப் பொருள்கள்

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

'கல்யாணம் மற்றுமுள்ள விசேஷங்களுக்கும் போனால் ஏதாவது பரிசுப் பொருள் வாங்க வேண்டியிருக்கிறது. என்ன வாங்கலாம்?' என்று என்னை யோசனை கேட்டிருய்.

விசேஷங்களுக்கு நம்முடைய ஆசிகளுடன் பரிசு அளிப்பதும் அவசியம்தான். வாங்கிக் கொள்பவர்களுக்கு மகிழ்ச்சியாகத்தானிருக்கிறது. கொடுக்கிறவர்களுக்குச் செலவு ஏற்பட்டாலும் கொடுப்பதிலும் ஒரு இன்பம் இல்லையெனச் சொல்ல முடியுமா? பரிசாகக் கொடுக்கும் பொருள் விலை அதிகமாக இருக்க வேண்டு மென்பது அவசியமில்லை. நம்முடைய அன்பளிப்பு என்ற முறையில் சிறிய பொருளானாலும் அதன் விலை மதிப்புக்கு அப்பாற்பட்டதுதான்.

குழந்தைகளுக்குப் பரிசு அளிப்பது பரஸ்பர இன்பம். எங்கள் உறவினர், ஒரு குழந்தைக்கு ஏதாவது விசேஷங்கள் வந்தால் மற்றக் குழந்தைகள்பேரில் விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பார். அந்தச் செய்கை குழந்தைகளுக்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். குழந்தைகள் தாங்களும் அந்த விசேஷத்தில் முக்கியமானவர்கள் என்று பெருமிதமடைகிறார்கள்.

ஒவ்வொரு விசேஷத்திலும் அதற்குத்தகுந்தபடி பரிசு அளிப்பது ஒரு கலை. அதிலும் உபயோகப்படும்படியான சாமான்கள் வாங்கிக் கொடுப்பது போற்றத் தக்கது. எங்கள் வீட்டில் பிறந்த ஒரு குழந்தைக்கு ஒரு அம்மாள் விளக்கெண்ணெய் புட்டியைப் பரிசாக அளித்தாள். தேன் புட்டியாக அளித்தால் உபயோகம் மட்டுமல்ல, மனசுக்கும் திருப்தி. புது தம்பதிகளுக்கு அவர்கள் புது குடும்பத்துக்கு ஏற்ற பொருள்களாக வாங்கிக் கொடுத்தால் அவர்கள் பெற்றோர்கள் சந்தோஷப்படுவார்கள். அவர்கள் விலை கொடுத்து அந்தப் பொருள்களை வாங்காமல் இருக்கக் கூடும் அல்லவா?



ஒரு கல்யாணப்பிள்ளை டாக்டருக்குப் படித்துப் பட்டம் பெற்றிருந்தான். மாமனார் புது நர்ஸிங்ஹோமுக்குப் பணம் கொடுத்தார். நல்லதுதான். இதர உறவினர்களும், சிநேகிதர்களும், ஒரு டாக்டருக்கு ஆப்பரேஷனுக்குத் தேவையான கத்தி, கத்திரிக்கோல், இரத்த அழுத்தம் பார்க்கும் கருவி இப்படி அநேகவித வைத்திய உபகரணங்களைப் பரிசாக அளித்திருந்தார்கள். இன்னும் சிலர் இஞ்செக்ஷன் ஊசி, சில பொது மருந்துகள், பஞ்சுப் பொட்டலங்கள் இப்படியாக அளித்திருந்தார்கள். இவைகளை யெல்லாம் அவர்கள் காட்சிப் பொருள்களாகப் பந்தலில் வைத்து விட்டார்கள். கல்யாணப் பெண் கொஞ்சம் ஒல்லியாக இருந்தாள். அதைக் கண்ட என் தோழி ஒருத்தி "மாமனார் பணத்தையும் நோயாளிப் பெண்ணையும் மாப்பிள்ளைக்குக் கொடுத்து விட்டார். இனி அவர்களுக்குத் தேவையான மற்றப் பொருள்களை விவாகத்துக்கு வந்தவர்கள், கொடுத்து விட்டார்கள்" என்று சொல்லிச் சிரித்தாள். அவள் துடுக்காகச் சொன்னாலும், பொதுவாக, கத்தியும் கப்படாவும் திருமணப் பரிசாக அளிப்பது என்னவோ அவ்வளவு ரம்மியமாக இல்லை.

இந்தக் காலத்தில் சிலர் கல்யாணப் பத்திரிகையிலேயே "அன்பளிப்புகள் விலக்கப்பட்டிருக்கிறது" என்று கொட்டை எழுத்தில் அச்சிட்டு விடுகிறார்கள். காரணம் ஏதாவது அன்பளிப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகச் சிலர் திருமணத்துக்கே வருவதில்லை. அப்படியே வந்தாலும் தான் அளிக்கும் திருமணப் பரிசு மற்றவர்கள் அளித்ததைவிடச் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் திருமணத்தில் சந்தோஷமாகக் கலந்து கொள்வதில்லை. நம் வீட்டுக்குக் கல்யாணத்துக்குப் பரிசு வழங்கியவர்களுக்கு நாமும் ஏதாவது திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்குமே என்ற எண்ணம்.

ஆனாலும் பரிசுகள்கொடுக்கும்போது கொஞ்சம் முன்யோசனை செய்யத்தான் வேண்டும்.

ஒரு கல்யாண தம்பதிகளுக்கு ஒருவர் பட்டினத்தார் பாடலையும், ஞானவாசிஷ்டத்தையும் அனுப்பியிருந்தார். அவைகளைச் சஷ்டியப்த பூர்த்தி விழாவுக்கு அனுப்பியிருந்தால் பொருத்தமாக இருக்கலாம்!

சிலர், 'வட்டியில்லாக் கடன் தானே, நாம் இன்று கொடுத்தால் நாளைக்கு நம் வீட்டு விசேஷங்களுக்கு அவர்கள் கொடுத்து விட்டுப் போகிறார்கள்' என்று கணக்குப் போடுகிறார்கள். அப்படி நினைப்பதற்கில்லை. ஒரு இளம் தம்பதிகள் தங்கள் குழந்தை பிறந்த நாளில் சிநேகிதர்களை அழைத்துச் சிற்றுண்டி விருந்து வைக்கத் தீர்மானித்தார்கள். அவர்கள், 'நமக்கு ஆகும் செலவு குறைவு; வருகிறவர்கள் கொடுக்கப் போகும் பரிசுத் தொகை அதிகம்' என்று கணக்குப் போட்டுக் கூட்டி, கழித்து மனசைத் திருப்தி செய்து கொண்டார்கள்.

சிற்றுண்டி விருந்துக்கு இவர்களுக்கு ஐம்பது ரூபாய் செலவு ஆயிற்று. ஆனால் வந்ததெல்லாம் பிஸ்கோத்துப் பொட்டலம், மிட்டாய்ப் பை, சிறு பொம்மைகள் இவைகள்தான். எனவே, அந்தக் கணக்கை ஒதுக்கிவிட்டு நம்மால் இயன்றதைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்பப் பரிசு கொடுப்பதிலுள்ள இன்பத்தை நாம் ஏன் விடவேண்டும்?

இப்படிக்கு,
பூமாதேவி


Your Finishing Touch of Loveliness
finest-in-the-world FACE POWDER
by MAX FACTOR HOLLYWOOD
. . . makes your skin look fresh,
clear, naturally-lovely!
SOLE AGENTS IN INDIA: ORIENT COSMETICS PRIVATE LTD., MADRAS, BOMBAY, CALCUTTA.






"அப்பாடா! போதுமப்பா இந்தத் தொழில்!" என்றது ஈ.

"என்ன உனக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டது?" என்றது மந்தை வெளியில் தரையைக் கொத்திக் கொண்டிருந்த ஒரு கோழி.

"கப்ப லடியிலிருந்து மயிலாப்பூர் வரை மூட்டை வண்டி இழுத்து வந்தால் உனக்குத் தெரியும்" என்றது ஈ.

"என்ன மூட்டை? என்ன வண்டி நீ இழுத்தாய்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை" என்றது கோழி—



சோம்பேறிச் சூரியன்

"உனக்கு எப்படித் தெரியும்? மண்ணைக் கிறிக் கொத்திப் புழுவும், சிந்திய அரிசியும் தின்னும் ஜீவன் நீ. உனக்கு என்ன தெரியும்? நான் இன்று ஒரு ஆள் முதுகில் உட்கார்ந்து அவனோடு வண்டியைத் தள்ளித் தள்ளி வண்டியை இங்கே கொண்டு வந்து சேர்த்தேன். அந்தக் களைப்பை உன்னிடம் சொல்லி என்ன பயன்?" என்றது ஈ.

"உனக்கு இவ்வளவு பலம் எப்படி வந்தது? வண்டி ரொம்ப பாரம் ஆச்சே?" என்றது கோழி.

"பலம் எல்லாம் உள்ளத்திலும் ஊக்கத்திலும் இருக்கிறது. வழியில் எவ்வளவோ பலகாரக் கடைகள். வாழைப்பழம் நன்றாகப் பழுத்து அழுகித் தொங்கிக் கொண்டிருந்த கடைகள். அவ்விடம் நின்று விடலாமா என்று யோசித்தேன். ஒவ்வொரு இடத்திலும் இப்படி ஆசை தோன்றும். ஆனால் ஐயோ! பாவம்! இந்த ஆட்கள் நான் இல்லாமல் எப்படி வண்டி இழுப்பார்கள் என்று பரிதாபப்பட்டுச் சாப்பாட்டுக் கடைகளிலுங்கூட நான் நிற்கவில்லை" என்றது ஈ.

"உன் ஜீவகாருண்யமே ஜீவகாருண்யம். எனக்கும் ஆசை உண்டு. நல்லவனாக இருக்கலாம் என்று பார்க்கிறேன். முடியவில்லை" என்றது கோழி. "இந்தப் புழுக்களின் ருசியைத்தான் தாங்க முடியவில்லை."

"நல்லவர்களுக்கு இது காலமல்ல. ஏதோ மருந்து போட்டுப் போட்டு எங்களைக் கொல்லுகிறார்கள். நாம் என்ன செய்தோம்? இந்த மனிதர்கள் இப்படிக் கோபாவேசமாக நம் பேரில் யுத்தம் நடத்துகிறார்களே!" என்றது ஈ.

"ஏதோ வியாதிக் கிருமிகளைக் கண்டு பயந்து இப்படிச் செய்கிறார்கள். அந்தக் கிருமிகள் உங்கள் கால்களிலும் உங்கள் தும்பியிலும் ஒட்டிக் கொண்டு இவர்கள் உடலிலும் ரத்தத்திலும் ஏறி விடுகிறதென்று இப்படிச் செய்கிறார்கள்" என்றது கோழி.

"அதற்கென்ன செய்வது? நாம் குளத்தில் நன்றாகத் தேய்த்து ஸ்நானம் செய்து விட்டு அப்புறம் இந்தப் பயங்காளிகள்மேல் உட்கார முடியுமா? ஸ்நானம் செய்தால் செத்துப் போய் விடுவோமே!" என்றது ஈ.

"உண்மை" என்றது கோழி மிக துக்கத்துடன்.

இன்னும் ஈ சொல்லிக் கொண்டு போயிற்று: "குப்பைத் தொட்டியைக்கூட மூடி வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் சில புண்ணியவதிகள் மூடியைத் திறந்து குப்பையைக் கொட்டி விட்டு மறுபடி மூடாமல் போய் விடுகிறார்கள். நம் பேரில் இந்தத் தாய்மார்களுக்காவது கொஞ்சம் கருணை இருக்கிறது."


கோழிக்குத் தூக்கம் வந்து விட்டது.

"சரி! நான் தூங்க வேண்டும். இல்லாவிட்டால் சரியாகக் காலையில் எழுந்து சூரியனை எழுப்ப முடியாது. அந்தச் சோம்பேறிச் சூரியன் நான் கூப்பிட்டுக் கத்தி எழுப்பாமல் போனால் தூங்கிக் கொண்டே இருப்பான். காலத்தில் எழுந்திருக்க மாட்டான்" என்றது கோழி.

அப்போது சந்திரன் கிழக்கே மெள்ளக் கிளம்பினான். கோழியும் ஈயும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுச் சிரித்தான். சத்தம் போடாமல் சிரித்தான்.

"எனக்காக ஒரு கோழியும் கூப்பிடவில்லை. நானாக எழுந்து விட்டேன்" என்று வேடிக்கையாக எண்ணினான் சந்திரன்.

அன்று அவனைக் கிரகணம் பிடிக்கப்போகிறது என்பது அவனுக்குத் தெரியவில்லை.





எதிர்பார்த்தபடி அறுவடை முடிந்து மாசூல் கிடைத்துவிட்டது

அறுவடை முடிந்து எதிர்பார்த்தபடி மாசூல் கிடைத்துவிட்டது...முதல் ஐந்து வருஷ திட்டப்படி தான்ய உற்பத்தியில் 76 லக்ஷம் டன்களே அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நமக்கு அதிகமாகக் கிடைத்திருப்பதோ 110 லக்ஷம் டன்கள். இச்சாதனையின் பெருமை இந்திய விவசாயிகளுக்கே.

இரண்டாவது ஐந்து வருஷ திட்டம் தான்ய உற்பத்தியை பல்விதப்படுத்துவதையும், மேலும் அதிகப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஜனப் பெருக்கம் அதிகரித்துக்கொண்டிருக்கும் நம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வது, சாகுபடி செய்ய சாத்தியமான நிலப் பரப்பைப் பொருத்திருக்கிறது. இதில்தான் இருக்கிறது இத்திட்டத்தின் வெற்றி.

விவசாயிகள் இந்த முக்கியமான வேலையைச் செய்ய பல்வேறு இடங்களிலுள்ள பண்ணைகளுக்கு எரி எண்ணெய், லூப்ரிகேடிங் ஆயில்கள் இவைகளை வழங்கி நாங்கள் உதவுகிறோம். பயிர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கவும், மாசூலை மேலும் அதிகரிக்கச் செய்யவும் ஷெல் ரசாயனப் பொருள்களான ஆல்டிரின், டீல்டிரின் மற்றும் என்டிரின் முதலியன பெரிதும் உதவுகின்றன. இந்தியாவில் பல திக்குகளிலுள்ள 1,631 பர்மா-ஷெல் சேகரிப்பு டிப்போக்களிலும் மற்றும் கிடங்குகளிலும் 4,26,00,000 காலன்கள் அளவு பெட்ரோலியப் பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொருள்கள் எவ்விடத்திலும் எப்போது தேவையோ அந்த சமயத்தில் கிடைக்கும்படிச் செய்வதற்கான ஏற்பாட்டுடன் இருக்கின்றன.

பர்மா-ஷெல்...பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது

அபலை அஞ்சுகம்

12. "அந்தக் கவலை எனக்கு!"

மேகராஜபுரத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள சிறு ஊரிலும் பார்வதியம்மாளின் தங்கை பிள்ளை விஜயரங்கனைப் பற்றி ஓரளவு தெரியும். விஜயரங்கன் அந்த ஊரை விட்டுப் போய்ப் பல வருடங்களானாலும் அவனுடைய உருவத்தையும் முக ஜாடையையும் யாரும் மறந்து விடவில்லை. சொக்கன் கிட்டத்தட்ட விஜயரங்கனைப் போலவே இருந்ததால் எவரும் சந்தேகப்படவில்லை. தவிர, சிறு வயதில் விஜயரங்கனைப் பார்த்தவர்கள் வயதான பின் குறிப்பாகச் சிறிது மாறுதல்கள் இருந்தாலும் அதைப் பெரிதாகக் கருதவில்லை. பெரிய இடத்துப் பிள்ளையாகிய சொக்கனை நெருங்கிக் கிராமவாசிகள் அதிகமாகப் பேசுவதுமில்லை. சொக்கன் தினமும் ஆடம்பரமாக ஆடைகள் அணிந்து உல்லாசமாக உலவி வந்தான்.

பார்வதியம்மாள் அவன்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தாள். அவள் குலத்தில் அவன் ஒருவன்தானே சந்ததி! அவன்தானே அவளுக்கு எல்லாம்? பல வருடங்கள் வெளியூரிலிருந்த அவன் திரும்பி வந்ததினால் அவளுக்கு ஏற்பட்ட சந்தோஷம் கொஞ்ச நஞ்சமா? அவனை விட்டுக் கண நேரங்கூட அவள் பிரிந்திருக்க இஷ்டப்படுவதில்லை. சொக்கனுக்குத் தான் விஜயரங்கனாக நடித்ததிலும் அநேக சங்கடங்கள் இருந்தன. பார்வதியம்மாளின் எல்லையற்ற அன்பு. பிணைப்பு அவனை மிகவும் சங்கடத்துக்குள்ளாக்கின. பார்வதி யம்மாளை விட்டு அவன் பிரியவேண்டுமானால் நிர்மலாவின் உதவியைத்தான் நாடவேண்டியிருந்தது. நிர்மலாவும் சமயத்தில் வந்து

இ.ரா. கோபாலன்



அவனுக்குத் தக்க உதவி செய்து வந்தான். எப்படி இருப்பினும் பார்வதியம்மாளிட மிருந்து விடுதலை யடையவே அவன் பிரியப் பட்டான்.

அன்று நிர்மலாவிடம் தனக்குள்ள குறைகளைச் சொல்லித் தான் இன்னும் சிறிது சுதந்திரமாக இருக்க ஏதேனும் வழி செய்யச் சொல்ல வேண்டுமென்று நினைத்தான். அப்பொழுது நான் பார்வதியம்மாளிடம் ஏதேதோ சாக்குப் போக்குக் காட்டி விட்டு வந்தான். சமையலறையில் இருந்த நிர்மலா ஒரு



டம்ளரில் காப்பியுடன் வந்து, ''இதை அம்மாவிடம் கொண்டு போய்க் கொடுத்து விடுங்கள்'' என்றாள் ஏதோ உத்தரவிடுவது போல். இதைக் கேட்டதும் அவனுக்கு எரிச்சலும் கோபமும் தான் ஏற்பட்டன.

''இதற்கெல்லாம் நான்தான் அகப்பட்டேனா? இதற்கெல்லாம் ஒரு வேலைக்காரியை வைத்துக் கொள்ளக் கூடாதா? இந்தக் கிழவி பாராட்டுகிற அன்பு என்னைக் கொன்று விடும்போல் இருக்கிறது. நான் என்ன பச்சைக் குழந்தையா? என்னை ஒரு நிமிஷம்கூட வெளியே விடமாட்டாள் போலிருக்கிறதே? போதும். நான் விஜயரங்க துரையாக நடித்தது. இதைவிடச் சாதாரணச் சொக்கனாக இருந்து விடுவது எவ்வளவோ மேல்...'' என்றான்.

''அடாடா! அதற்குள் இவ்வளவு பொறுமையை இழக்கலாமா? அம்மா உங்களிடம் அன்புதானே பாராட்டுகிறார்கள்? தீவிரமான அன்பு இப்படித்தான் இருக்கும். நமக்கு நன்மை ஏற்பட வேண்டுமானால் கொஞ்சம் பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்...'' என்றாள் நிர்மலா.

''போதும். எவ்வளவு நாட்கள்தான் இப்படியே இருப்பது...?''

''எவ்வளவு நாட்களா? குறைந்தது அவள் உங்கள் பேரில் இந்தச் சொத்துக்களை எழுதிவைக்கும் வரையிலாவது பொறுமையுடன் இருக்க வேண்டாமா? அந்த விஜயரங்கன் திரும்பி வரமாட்டான் என்ற எண்ணத்தில் அவள் இந்தச் சொத்துக்களையெல்லாம் ஏதோ தர்மத்துக்கு எழுதி வைக்கத் திட்டமிட்டிருந்தாள். நீங்கள் வந்த பிறகு அவள் மனம் மாறி விட்டது. கூடிய சீக்கிரம் எல்லாவற்றையும் உங்கள் பெயருக்கு எழுதி வைக்கப்போகிறாள். அந்த உயில் எழுதி வைக்கும்வரையில் கொஞ்சம் சகிப்புத் தன்மையோடு நீங்கள் பொறுத்துக் கொள்வதுதான் நல்லது.''



''சரிதான் இதற்கு எவ்வளவு நாள் பொறுக்க வேண்டுமோ? அப்படியே அவள் எழுதிவைக்கும் உயிலில் அவள் இறந்த பிறகு நான் இந்தச்சொத்துக்களை அனுபவிக்க வேண்டும் என்று எழுதி வைத்தால்...? அவள் சமீபத்தில் இறந்து விடுவாள் என்று என்னால் நம்ப முடியவில்லையே? இதைப் போன்ற கிழங்களெல்லாம் இலேசில் சாவதில்லை..''

இதைக் கேட்டதும் நிர்மலா முகத்தில் ஒரு புன்னகையை வருவித்துக் கொண்டு விஷமத்தனமான கண்களால் அவனைப் பார்த்தாள். பிறகு, ''உயில் .. வைத்தபின் நெடுநாட்கள் அவள் உடலோடு இருந்துவிடுவாள் என்று நீங்கள் எண்ண வேண்டாம். அதற்கு ஏற்பாடுகள் செய்து விடலாம்..'' என்றாள்.

அவளுடைய வார்த்தைகளின் உட்பொருளை ஓரளவு சொக்கன் புரிந்து கொண்டான். அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே அவன் சிறிது உணர்ச்சியோடு, ''இந்த விஷயத்தில் நாம் சிறிது நேர்மையோடுதான் நடந்து கொள்ளவேண்டும். அந்தக் கிழவியைச் சாக வைப்பதற்கு நாம் ஏதாவது சூழ்ச்சி செய்யலாம் என்பது உட் அபிப்பிராயம்; இல்லையா? இதைக் கொஞ்சம் நீ யோசனை செய். நான் என் வாழ்க்கையில் எவ்வளவோ குற்றங்களெல்லாம் செய்திருக்கிறேன். ஆனால்



ஒருவரைக் கொலை செய்யுமளவுக்கு என் மனத்தில் துணிவு ஏற்பட்டதில்லை. எனக்கு அது பிடிக்காது. நீ அப்படிப் பட்ட காரியங்களில் என்னைச் சம்பந்தப் படுத்த நான் அனுமதிக்க மாட்டேன்'' என்றான் கண்டிப்பான குரலில்.

நிர்மலா அவன் வார்த்தையைக் கேட்டுச் சிறிது அபிப்பிராயபேதம் கொண்டவள்போல் ஒதுங்கி நின்று, ''உங்களுக்குப் பிடிக்கும், பிடிக்காது என்று எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் இப்பொழுது எல்லா விஷயங்களிலும் சம்பந்தப் பட்டிருக்கிறீர்கள் என்பதை மறக்க முடியாது. இப்போது நீங்கள் அவளுடைய சகோதரியின் மகன் விஜயரங்கனாக வேஷம் தாங்கியிருக்கிறீர்கள் என்பதையும் மறக்க வேண்டாம். சமுத்திரத்தில் இறங்கி விட்ட பின்பு 'சாண் ஏறி விட்டதே, முழம் ஏறிவிட்டதே' என்று கவலைப் படுவதுண்டா?'' என்றாள்.

சொக்கன் அவளுடைய வார்த்தைகளைக் கேட்டு அசைவற்று நின்று விட்டான். அவனால் அவளுக்குப் பதில் சொல்லவே முடியவில்லை. தடுமாற்றத்துடன் அவள் முகத்தையே பரிதாபத்தோடு பார்த்தான். ''வீணாகக் கவலைப் படாதீர்கள். நீங்கள் உங்களுக்குள்ள காரியத்தைச் சரியாகச் செய்யுங்கள். நான் எனக்குள்ள காரியங்களை ஜாக்கிரதையாகச் செய்து விடுவேன். அந்தக் கிழவியை எப்படி நடத்த வேண்டுமென்று எனக்குத் தெரியும். அந்தக் கவலை எனக்கு'' என்றாள் அவள் மெதுவான குரலில் கொஞ்சுவதுபோல.

* * *


அஞ்சுகத்திடம் பேரன்பு வைத்திருந்த மீனாட்சி அவள் போலீஸார் கண்ணில் படாமல் இருக்க எவ்வளவு ஏற்பாடுகள் செய்ய முடியுமோ அவ்வளவு ஏற்பாடுகளையும் செய்தாள். முதலில் அஞ்சுகத்தின் உருவத்தையே மாற்றுவதில் தீவிரமாக முனைந்தாள்.

பிறருக்கு மாறுவேடம் புனைவதிலும், மாறு வேடம் புனைந்து தன்னையே உரு மாற்றிக் கொள்வதிலும் குறத்தி மீனாட்சி கெட்டிக்காரி. அஞ்சுகம் அவள் சொற்படி தன் உடைகளையெல்லாம் மாற்றிக் கொண்டாள். அவள் கொடுத்த ஆபரணங்களையெல்லாம் அணிந்து கொண்டாள். அப்பொழுது அவளைப் பார்த்தால் ஒரு குறிப் பெண்ணைப் போல்தான் தோன்றிற்று. அவள் பேச்சில் கூடச் சிறிது மாறுதல் ஏற்பட்டது. அவளுக்கு அந்த உருவத்தோடு பகிரங்கமாக உலகத்தில் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் உலாவலாம் என்ற தைரியம் ஏற்பட்டது. மீனாட்சியும் அவளை மிகவும் சுதந்திரமாகவே உலாவ விட்டாள். அந்தக் குடிசை இருந்த இடத்திலிருந்து மேகராஜபுரம் மேற்கே மூன்று மைல் தூரத்தில்தான் இருக்கிறது என்பதை அவள் அறிந்து கொண்டாள். தனக்கேற்பட்ட ஆபத்திலிருந்து தன்னை மீட்பதற்காகச் சொக்கன் அங்குதானே சென்றிருக்கிறான்? அவன் அங்குதான் இருக்கிறானா? தனக்காக அவன் என்ன செய்தான்? அவனுடைய நிலைமை என்ன? இவைகளையெல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று அஞ்சுகத்துக்கு ஆவல் ஏற்பட்டது.

அன்றுகாலை அஞ்சுகம் மீனாட்சியிடம் ஆற்றங்கரை வரை போய் விட்டு வருவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள். அவள் வழியில் வந்த சில மனிதர்களை விசாரித்துக் கொண்டு வயல்களிடையே உள்ள ஒற்றையடிப் பாதை வழியாக மேகராஜபுரத்தை நோக்கி அதி வேகமாக நடந்தாள். குறத்தி போலிருக்கும் அவளைக் கண்டு யாரும் எத்தகைய சந்தேகமும் கொள்ளவில்லை. அவள் சில நிமிஷ நேரத்தில் பார்வதியம்மாளின் வீட்டுக்குச் சமீபமாக வந்து விட்டாள். தோட்டத்து வேலிப் புறமாக நின்று கொண்டு அந்த வீட்டையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள்.

சில நாட்களே அவள் அந்த வீட்டில் இருந்திருந்தாலும் அந்தச் சூழ்நிலையில் அவள் அடைந்த அனுபவங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அமைதி சூழ்ந்த அந்தப் பெரிய வீடு எதையோ விழுங்கி விட்டு அசையாமல் கிடக்கும் மலைப் பாம்பைப் போல்தான் தோன்றியது. அடிமை வேலை செய்தாலும் அந்த வீட்டில் அடக்கமாகவும் மன நிம்மதியோடும் இருந்து வாழ்நாளைக் கழித்து விட வேண்டுமென்று தானே அவள் திட்டமிட்டிருந்தாள்? அதற்கு நேர் மாறாக முன்னிலும் அதிகமான ஆபத்தும், கெட்ட பெயரும்தானே அவளுக்குக் கிடைத்தன? அதற்குக் காரணம்...? இப்பொழுது தன் விதியை நொந்து கொள்ள அவள் இஷ்டப்பட வில்லை. அந்த வீடும் அதிலுள்ள மனிதர்களும் தான் தனக்குக் கொடுமை இழைத்தவர்கள் என்று திடமாக எண்ணினாள். அவளுக்கு அந்த வீட்டைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. அவள் வேலி ஓரமாக மெதுவாக நடந்து ஏதேனும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க எண்ணினாள். வேலியை ஒட்டினாற் போலிருக்கும் மரங்களிடையே

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற ப்ரில்க்ரீம் உபயோகியுங்கள்



கீர்த்திபெற்ற மற்றவர்களைப்போல் வினு மான்காடும் ப்ரில்க்ரீம் உபயோகிக்கிறார்



* ப்ரில்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணெய்கள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சேமிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரில்க்ரீமை உங்கள் தலையில் நன்றாக அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத்துடனும் வைக்கிறது.

* சிறிதளவு ப்ரில்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரில்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரில்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறார்கள்

BRL. 3968 (a) Tam.

மறைந்துமறைந்து பார்த்துக்கொண்டே வந்தாள். சிறிது தூரம் வந்ததும் யாரோ இருவர் எங்கிருந்தோ பேசுவது போன்ற குரல் கேட்டது. அவள் சட்டென்று ஒரு மரத்தடியில் ஒளிந்து கொண்டு சத்தம் வந்த திசையை நோக்கிப் பார்வையைச் செலுத்தினாள். தோட்டத்துக் கிடையே இருந்த மேடையில் பார்வதியம்மாள் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் வேறொரு வாலிபனும் உட்கார்ந்திருந்தான். அவன் யார்? முதலில் அவன் யாரென்று கண்டு பிடிப்பது அஞ்சுகத்துக்குச் சிரமமாகத் தான் இருந்தது. சிறிது உற்றுக் கவனித்த போது அது சொக்கன்தான் என்று அவளுக்குத் தெரிந்தது. அவள் திகைப் படைந்து நின்றாள்.

பார்வதியம்மாள் காலை வேளையில் சிறிது நேரம் தோட்டத்தில் வந்து உலாவிவிட்டு அந்த மேடையில் உட்கார்ந்து இளைப்பாறுவது வழக்கம். இது அஞ்சுகத்துக்கு நன்றாகத் தெரியும். அந்த வீட்டில் அஞ்சுகம் வேலைக்கு இருந்த போது அவள்தான் பார்வதிக்குத் துணையாகவும் உதவியாகவும் தோட்டத்துக்கு வருவது வழக்கம். ஆனால் சொக்கன் அப்பொழுது பார்வதியம்மாளோடு அங்கிருப்பது அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

சொக்கன் முன்பு இருந்தது போல் சாதாரண உடைகளோடு காட்சியளிக்கவில்லை. ஆடம்பரமான முறையில் தான் உடையணிந்திருந்தான். பட்டுச் சட்டை, ஜரிகை வேஷ்டி... எல்லாம் விநோதம். அவனுடைய முகத்தில் கூடப் பெரிய மனிதருக்குரிய தேஜஸ் ஏற்பட்டிருந்தது.

அந்த வீட்டில் நடந்த களவைப் பற்றி உளவு கண்டு பிடித்துத் தன்னை மீட்பதற்கு முயற்சி செய்வதாகச் சொல்லி விட்டு வந்தவன் அந்த வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டவன் போல் இப்படி உருமாறிக் காட்சியளிக்கும் விந்தை என்ன? சதா ஏதாவது கிடைக்காதா என்று திருட்டுத் தொழிலிலேயே சிந்தை செலுத்துகிறவன் இந்தக் கிராமத்தில் இந்த வீட்டில் எப்படி நெடுநாட்கள் அடைந்து கிடக்கிறான்? இந்த வீட்டில் இருந்த வண்ணமே குற்றவாளியைக் கண்டு பிடிக்க உளவு தேடுகிறானோ? அப்படித்தான் இருக்க வேண்டுமென்று அஞ்சுகம் தன் மனத்தைச் சமாதானம் செய்துகொண்டாள். அவள் இன்னும் சமீபமாகப்போய் நின்றால் அவர்கள் இருவரும் பேசுவது இன்னும் தெளிவாகக் காதில் விழும்

என்று எண்ணி அவர்களுக்குச் சமீபமாக ஒரு மரத்தடியின் பின்னால் சென்று மறைந்து நின்று அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டாள். அந்தக் கிழவி சொக்கனை வேறு ஏதோ பெயரைச் சொல்லி அழைப்பதைக் கேட்கவே, அஞ்சுகத்துக்கு 'அங்கிருப்பது சொக்கன் தானா? வேறுயார்?' என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியது. கண்களை நன்றாகக் கசக்கிக் கொண்டு மறுபடியும் உற்று நோக்கினாள். அவன் சொக்கன்தான் என்ற திடமான நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டது.

''விஜயா! இப்படித்தினமும் என்னைத் தோட்டத்துக்கு அன்பாக அழைத்து வர ஒருவரும் இல்லையே என்ற கவலை தான் எனக்கு. நான் யாரோடு தோட்டத்துக்கு வந்தபோதும் இவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டதில்லை. எப்பொழுமே உரிமை உள்ளவர்கள் ஒரு காரியத்தைச் செய்தால்தான் மனத்துக்கு ஆனந்தமும் நிம்மதியும் ஏற்படுகிறது. நீ என் குழந்தை—என் செல்வம்..'' என்றாள் பார்வதி ஆர்வத்தோடு.

''உங்களுக்கு நான் எப்படி நடந்து கொண்டால் சந்தோஷம் ஏற்படுமோ அப்படி நடந்து கொள்ளச் சித்தமாய் இருக்கிறேன், பெரியம்மா! நெடு நாட்கள் பிரிந்து இருந்தபின் நான் மறுபடி வந்து உங்களோடு இருப்பதில் எனக்கு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா....?'' என்றான் சொக்கன். அவனுடைய குரலில் போலித்தனமான நடிப்போடு கூடிய அன்பும் பாசமும் கலந்திருந்தன. அவனுடைய குரல், நடிப்பு எல்லாம் அஞ்சுகத்துக்குத் தெரிந்ததுதானே? ஆனால் அவன் பார்வதியைப் 'பெரியம்மா' என்று அழைத்ததுதான் அஞ்சுகத்துக்கு வியப்பாக இருந்தது. அவளுக்குக் கண நேரத்தில் 'பளிச்'சென்று எல்லாம் விளங்கிவிட்டது. அவன் சூதாகவும் வஞ்சனையாகவும் இந்த வீட்டில் ஏதோ நாடகமாடுகிறான் என்பதை அவள் உணர்ந்து கொண்டு விட்டாள். அந்த நாடகத்தின் உட்பொருளும் அவளுக்குச் சட்டென்று விளங்கியது. அவள் அந்த வீட்டுக்கு வேலைக்கு வந்த பொழுது பார்வதியம்மாளின் சகோதரி மகன் ஒருவன் சித்த சுவாதீனமில்லாமல் எங்கோ ஓடிவிட்டான் என்பதை அவள் அறிந்திருந்தாள். அவன் பெயர் விஜயரங்கன், அவன்தான் பார்வதியம்மாளின் ஒரே வாரிசு; அவன் மறுபடியும் திரும்பி வரமாட்டானா என்று பார்வதி ஏக்கம் கொண்டிருந்தாள் — என்பதெல்லாம் பற்றி அஞ்சுகத்துக்குச் சிறிது தெரியும். அப்பொழுது காணாமற் போன விஜயரங்கனாகத் தான் சொக்கன் நடிக்கிறான் என்று அஞ்சுகம் எளிதாக உணர்ந்து கொண்டாள்.

ஆனால் சொக்கனுக்கு இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிச்சலும், சாமர்த்தியமும் எப்படி ஏற்பட்டன என்றுதான் அஞ்சுகத்துக்கு விளங்கவில்லை. காணாமற் போன விஜயரங்கனின் புகைப்படம் அந்த வீட்டிலிருப்பது அஞ்சுகத்துக்குத் தெரியும். அந்த உருவத்தைப் போன்ற உருவைப் படைத்திருப்பதினால்தான் சொக்கன் இப்படி நடிக்கத் துணிவு கொண்டிருக்க வேண்டுமென அவள் தீர்மானித்தாள். ஆனால் பார்வதியம்மாளின் தங்கை மகன் ஒருவன் இருந்து காணாமற்போன கதையைச் சொக்கன் எப்படி அறிந்து கொண்டான்? சொக்கனை இப்படி நாடகமாட விட்டதற்குச் சூத்திரதாரியாக இன்னொருவரும் இருக்கவேண்டும். அது யார்? நிர்மலாவேதான். அவளைத் தவிர இந்த வீட்டின் ரகசியங்களெல்லாம் தெரிந்தவர்கள் யார்? அழகான உருவமும், இனிமையான பேச்சும் நிறைந்த நிர்மலா ஒரு கொடிய விஷப் பாம்பு என்பதை அப்பொழுது தான் அஞ்சுகம் உணர்ந்தாள். அவளுடைய அழகிலும் பேச்சிலும் சொக்கன் மயங்கி இருந்தால் ஆச்சர்யமில்லை. அவள்தான் அந்த வீட்டிலிருந்த நகைகளைக் கொள்ளையடித்திருக்க வேண்டும். அவள்தான் சொக்கனைத் தன் வசப்படுத்தி இப்படியெல்லாம் நடிக்கச் செய்து, வேறொரு பொய்ச் சதியைச் செய்யத் திட்டமிட்டிருக்க வேண்டும். உலகத்தின் கண்களுக்கு, வாழ்க்கை நெறி தவறியவர்களாகக் காணப்படும் கள்வர் கூட்டத்திடையே பழகிய அஞ்சுகத்துக்கு, பெரிய இடங்களில் உள்ளவர்கள் எத்தகைய பெரிய சதிச் செயல்களை எல்லாம் செய்து கொள்ளையடிக்க நினைக்கிறார்கள் என்ற உண்மை தெளிவாக விளங்கியது. அஞ்சுகத்துக்குச் சொக்கன் மீது இருந்த நம்பிக்கையும் நல்லெண்ணமும் தளர்ந்தன. அவன் சொல்லிச் சென்றபடி, அஞ்சுகத்தின் நலனுக்காக அவன் அந்த வீட்டில் இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள். சொக்கன் அந்த வீட்டுக்கு வரும்போது எந்த நோக்கத்தோடு வந்திருந்தாலும், அங்கு வந்ததும், சுயநலத்தோடு கூடிய ஒரு சூழ்ச்சி நாடகத்தில் அவன் இறங்கி விட்டான் என்று தீர்மானித்தாள்.

பார்வதியும் சொக்கனும் பேசிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வேறு ஒரு குரலும் அஞ்சுகத்தின் காதில் விழுந்தது.

(தொடரும்)


JASMINE

மயில் கடை மாணிக்கம்



அழகும் கவர்ச்சியும் பொருந்திய வண்ண மயில்கள் மாணிக்கத்தின் பெட்டிக் கடையில் அலங்காரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை விதம்விதமான அலங்காரங்களுடன் தெருவில் செல்வோரைக் கண் சிமிட்டி ஆகர்ஷித்தன.

கோலம் வரைந்த நீல நிறத் தோகையும், பச்சை நிறக் கழுத்தும், பட்டுப் போன்ற உடலும், பவழ நிற வாயும் செம்பொன் துளிர் இறகும் பார்ப்போர் மனத்தைக் கொள்ளை கொண்டன.

களிமண், மரத் தூள், தேங்காய் நார், பறவை இறகு, கந்தல் துணி, காகிதக் குப்பை இவைதான் பொம்மைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள். இவற்றைக் கொண்டு மாணிக்கம் அற்புதமான பல பொம்மைகளைச் சிருஷ்டித்து விடுவான்.

ஆயினும், அவன் கடையில் மயில் பொம்மைக்குத்தான் அதிக கிராக்கி இருந்தது. அதன் காரணமாகவே 'அவனுக்கு மயில் கடை மாணிக்கம்' என்ற பெயரும் ஏற்பட்டு நிலைத்து விட்டது.

மாணிக்கத்தின் கடைக்கு எதிரில் ஒரு டாக்டர் வீடு. டாக்டர் நல்லதம்பி சீமையில் படித்து விட்டு வந்து சமீபத்தில்தான் அங்கே தொழில் தொடங்கியிருந்தார். வெகு சீக்கிரத்திலேயே ஊரில் அவருக்கு நல்ல பெயரும்புகழும் ஏற்பட்டு விட்டன. இரவு பகல் எந்த நேரத்திலும் முகத்தைச் சுளிக்காமல் வியாதியஸ்தர்களை அவர்கள் வீட்டுக்கே நேரில் சென்று பார்த்துவிட்டு வருவார்.

ஒரு நாள் அவருடைய சிநேகிதரின் குழந்தை ஆண்டு நிறைவுக்கு வரும்படி அவருக்கு அழைப்பிதழ் வந்திருந்தது. வைத்தியத் தொழில் ஓரிடத்துக்கும் நகர முடியாத பெரும் பொறுப்பு வாய்ந்த தொழில் அல்லவா? எனவே அந்தக் குழந்தைக்கு ஏதாவது அழகிய பரிசு ஒன்று வாங்கி அனுப்பி விடுவதென்று முடிவு செய்தார் நல்லதம்பி. மாணிக்கம் கடை மயிலைக் காட்டிலும் அழகான பரிசு வேறு என்ன இருந்து விட முடியும்?

நல்லதம்பி மாணிக்கம் கடைக்குச் சென்று ஒவ்வொரு பொம்மையாகப் பார்த்தார். மயிலின் வர்ணஜாலத்தில் மனத்தைப் பறி கொடுத்தார். தத்ரூபமான அதன் அங்க அவயவங்களைக் கண்டு அதிசயப்பட்டார். மயிலின் உடலில், சதையும் நரம்பும்தான் இல்லை. மற்றப்படி ஓர் உயிருள்ள மயிலாகவே தோன்றியது. வெறும் குப்பை கூளங்களைக் கொண்டு இத்தனை அற்புதங்களைத் தோற்றுவிக்கும் திறன்படைத்த மாணிக்கம் டாக்டரின் கண்ணுக்குச் சாதாரண மனிதப் பிறவியாகத் தோன்றவில்லை. 'பூலோக பிரம'னாகவே காட்சி அளித்தான்!

"மாணிக்கம்! இந்தப் பொம்மையின் விலை என்ன?" என்று கேட்டார் டாக்டர் நல்லதம்பி.

"நாலு ரூபாய்!"

"எவ்வளவு? நாலு ரூபாயா!" என்று பிரமித்தார் டாக்டர்.

"ஆமாம்; நாலு ரூபாய்க்கு விற்றால் எனக்கு எட்டணா கிடைக்கும். பர்மாக்காரியிடம் நான் இதை மூன்றரை ரூபாய் கொடுத்து வாங்குகிறேன்."

"பர்மாக்காரியா! யார் அது? அவள் எப்படி 'விருப்பாள்?"

"கறுப்பாகக் குட்டையாக இருப்பாங்க.....—."

"அந்த அம்மாளின் பெயர்?..."


என்னவோ சொல்லுவார்களே, ஆமாம்.. ஆமாம்....அபாயம்!" என்றான் மாணிக்கம்.

"அபாயமா? அப்படி ஒரு பெயரா? இருக்கா தப்பா. சரி, அவங்க இப்பொழுது எங்கே இருக்காங்க?"

"முக்குறுணிப் பிள்ளையார் கோயில் சந்து தெரியுங்களா?"

"ஆமாம்; தெரியும்." டாக்டருக்கு அந்த ஊரில் இப்போது எல்லாச் சந்து பொந்துகளும் தொழில் முறையில் பரிச்சயமாகி விட்டன.

"அந்தச் சந்தில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு அடுத்த வீட்டில் ஒரு பர்மாக்கார அம்மாள் இருக்காங்க. அந்த அம்மாவுக்குச் சொந்த ஊர் பர்மா இல்லே. அவங்க முப்பது வருசமா பர்மாவிலேயே இருந்தவங்க. அந்த அம்மாவுக்குப் பூர்வீகம் இதே ஊர்தான். யுத்தத்திலே அவங்க



புருசன் குழந்தை குட்டிகள் எல்லாரும் பர்மாவிலேயே இறந்து போயிட்டாங்க. இந்த அம்மா மட்டும் தப்பிச்சுக் கப்ப லேறி வந்துட்டாங்க! இப்போது மயில் பொம்மை செய்து பிழைக்கிறாங்க..'' என்றான் மாணிக்கம்.

நல்லதம்பியின் ஆச்சரியம் அளவு கடந்ததாயிற்று.

''இத்தகைய சித்திர விசித்திரமான வேலைக்குச் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் அடுத்தபடியாகப் பர்மாவைத் தான் சொல்ல வேண்டும்!'' என்று வியந்த படியே நல்ல தம்பி தபாலாபீஸுக்குச் சென்று தாம் வாங்கிய மயிலைப் பார்ஸலில் அனுப்பிவிட்டு வந்தார்.

* * *

மேற்கண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு சில தினங்களுக்கெல்லாம் டாக்டர் நல்லதம்பியைத் தேடி நடுத்தர வயதுள்ள ஸ்திரீ ஒருத்தி வந்தாள். அந்த அம்மாள் கறுப்பாகவும் குட்டை யாகவும் இருந்தாள். அவள், ''இதுதானே டாக்டர் நல்ல தம்பி வீடு?'' என்று விசாரித்துக் கொண்டே வந்தாள்.

''ஆமாம்; உங்களுக்கு என்ன வேண்டும்? என் பெயர் எப்படித் தெரிந்தது?'' என்று வியப்புடன் கேட்டார் டாக்டர்.

''மயில் கடை மாணிக்கம் சொன்னார். தாங்கள் என் வீட்டுக்குக் கொஞ்சம் வர முடியுமா?'' என்று கேட்டாள் அந்த அம்மாள்.

''உங்கள் வீடு எங்கே?''

''முக்குறுணிப் பிள்ளையார் வீதி!''

''ஓ! பிள்ளையார் கோயிலுக்கு அடுத்த வீடா? அங்கே யாருக்கு என்ன உடம்பு?''

''என் மகளுக்கு நாலு நாட்களாய் ஜுரம்.''

''நாலு நாட்களாய் என்ன செய்தீங்க? நீங்கதானே பர்மாவிலிருந்து வந்தவங்க?'' என்று கேட்டார் டாக்டர்.

''ஆமாம்; உங்களுக்கு அது எப்படித் தெரியும்?'' என்றாள் அந்த அம்மாள்.

''மயில் கடை மாணிக்கம் சொன்னார்'' என்றார் டாக்டர்.

நல்லதம்பி அந்த அம்மாளுடன் அவள் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.



அங்கே, அந்த அம்மாளுடைய மகள் கூடத்தில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அருகில் வர்ணக் காகிதங்களும், கிண்ணங்களும், ஊசி, நூல் முதலிய உபகரணங்களும் கிடந்தன. அவள் முகத்தில் ஜுர வேகம் தெரிந்தது. ஏற்கெனவே கால்கள் இரண்டும் ஊனமாகி நடமாடும் சக்தியை இழந்தவள் என்பதும் தெரிந்தது.

அந்தப் பெண்ணின் உடல் வளர்ச்சி குன்றிப் போயிருந்ததால் அதிக வயது மதிப்பிட முடியவில்லை. ஆனாலும் அவள் இருபத்துமூன்று பிராயத்தைக் கடந்து விட்டிருந்தாள். வசீகரமான முகமும், விசாலமான விழிகளும் வாய்ந்த அந்தப் பெண்ணின் பெயர் நளினா என்று தெரிந்தது.

டாக்டர் அவளைச் சிறிது நேரம் பரிசோதித்துப் பார்த்து விட்டு ''உன்னால் நடக்க முடியுமா?'' என்று கேட்டார்.

''கொஞ்ச தூரம் வீட்டுக்குள்ளேயே நடக்க முடியும். அவ்வளவுதான்...'' என்றாள் நளினா.

''எத்தனை நாட்களாக இம்மாதிரி இருக்கிறது?''

''பத்து வருஷங்களாக இருக்கிறது'' என்றாள் நளினி.

''காலைப் பற்றி இப்போது கவலை வேண்டாம். அவள் ஜுரத்துக்கு மட்டும் மருந்து கொடுங்கள். அவள் நாலு நாட்களாகச் சாப்பிடவில்லை. தூங்கவும் இல்லை'' என்று சற்றுக் கடு கடுப்புடன் கூறினாள் அபாயம் அம்மாள். அவள் பெயர் அபாயம் அல்ல! அபயம் என்ற பெயரையே மாணிக்கம் அவ்வாறு கூறினான்.

''மற்றொரு தடவை நான் வந்து மீண்டும் சோதித்துப் பார்க்க வேண்டும். இப்போது ஜுரத்துக்கு மருந்து கொடுத்து விட்டுப் போகிறேன். பத்து நாட்களுக்கு அவள் எந்த வேலையும் செய்யக் கூடாது. பூரண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறி மருந்தும் கொடுத்து விட்டுப் போனார்.

ஒரு வாரம் ஆனதும் நளினாவின் ஜுரம் குறைந்து போதுமான அளவு அபிவிருத்தி காணப்பட்டது.

டாக்டர் மீண்டும் மீண்டும் வந்து ஊசி போட்டுக் கொண்டிருந்தார். ஒரு


புதுமை பெறுக!
இதம் பெறுக! நளினமாய் இருங்கள்!
நாள்முழுதும்!
சிறந்த, இன்பகரமான மணமுள்ள சார்மிஸ் டால்கம் பவுடரால் ஏற்படும் உணர்ச்சிகள் இவை. குளித்தபின் மேனிமுழுதும் சார்மிஸ் டால்கம்பவுடரைத்தூவுக. எத்தகைய புதுமை, குளுமை - தெய்வீகக்குளுமை ஏற்படுகிறது! அரிப்பு வராமல் அதன்பட்டுப் படலம் பாதுகாக்கிறது. சிக்கனமான, அத்யாவசியப் பொருள் சார்மிஸ் டால்கம் பவுடர். இன்பம், அழகின் இரகசியம் அது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம்பவுடர்
மிகவும்
சிறந்த இன்ப மணமுள்ளது
கால்கேட் சார்மிஸ் வாசனைத்திரவியங்கள் சகல-உபயோககிரீமும் ஸ்நோவும் உள்ளன-எல்லாவித சருமங்களுக்கும் ஏற்ற இரு பிரபல வதன கிரீம்கள்.

நான் டாக்டர் வந்த போது அந்தப் பெரிய அம்மாள் வீட்டில் இல்லை. டாக்டருக்கு இது சௌகரியமாய்ப் போயிற்று.

நளினாவிடம் மெள்ளப் பேசி விவரங்களை அறியத் தொடங்கினார். அவர் அவளிடம் அறிந்த விவரம் வருமாறு:—

அந்தப் பெரிய அம்மாள் நளினாவுக்கு மாற்றாந்தாய். நளினாவின் தந்தையும் சொந்தத் தாயும் பர்மாவில் யுத்தத்தின் போது குண்டுக்கு இரையாகி மடிந்து விட்டார்கள். குண்டுக்குத் தப்பிய நளினாவும் அவள் மாற்றாந்தாயும் மட்டும் எத்தனையோ துன்பங்களுக் கிடையில் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். குண்டு விழுந்த அதிர்ச்சியும், தாய் தகப்பனார் இறந்த அதிர்ச்சியும் சேர்ந்து நளினாவின் கால்களை முடக்கி விட்டன. ஆனால் அவை வைத்தியத்தின் மூலம் தேறக் கூடியவையே.

நளினாவின் மாற்றாந்தாய் ஒரு கொடுமைக்காரி. ஈவு இரக்கமற்றவள். சுயநலம் காரணமாக நளினாவுக்கு வைத்தியமும் செய்யாமல் கலியாணமும் செய்து வைக்காமல் காலம் கடத்தி வருகிறாள். நளினாவை வீட்டோடு மடக்கிப் போட்டிருந்தால்தானே அவள் செய்யும் மயில் பொம்மையைக் கொண்டு அந்த அம்மாள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த முடியும்?

இதையெல்லாம் அறிந்த போது டாக்டர் நல்லதம்பிக்கு நளினாவின் மீது முன்னைக் காட்டிலும் அதிக அனுதாபம் ஏற்பட்டது.

"நளினா! கவலைப்படாதே! உன் கால்களை நான் குணப்படுத்தி விடுகிறேன்" என்றார் டாக்டர்.

வெளியே போயிருந்த நளினாவின் மாற்றாந்தாய் டாக்டரின் பேச்சைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள். டாக்டர் மீது சீறிப் பாய்ந்தாள். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவள் டாக்டர் நல்லதம்பியைக் கூப்பிடுவதையே அடியோடு நிறுத்திக் கொண்டாள்.




மலேயாப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராய்ப் பதவியேற்றுச் செல்லும் சென்னை அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முத்து இராசாக் கண்ணனார் எம். ஏ. எம். இ. எஸ். அவர்களைப் பாராட்டி 9—9—56 ஞாயிறு அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில், சென்னை மாணவர் மன்றம், தமிழாசிரியர் கழகம், பெத்துநாய்க்கன் பேட்டைத் தாய்மார் கழகம் இவற்றின் சார்பில் ஒரு பாராட்டு விழா நிகழ்ந்தது. விழாவுக்குத் தலைமை வகித்த திரு இராமசாமி படையாட்சி, வரவேற்புரை நிகழ்த்திய பேராசிரியர் மயிலை வெறுத்து. பேராசிரியர் முத்து ராசாக் கண்ணனார் முதலியவர்களை மேலே உள்ள படத்தில் காணலாம்.

நல்லதம்பியின் வைத்திய மனம் அதிர்ச்சியினால் ஏற்படும் இத்தகைய வியாதியைப் பற்றின ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டது. பல வைத்திய நூல்களைப் படித்துப் பார்த்தார். பல பெரிய டாக்டர்களைக் கலந்து பேசினார். கடைசியாக இது பூரணமாகக் குணப்படுத்தி விடக் கூடியது தான் என்று தெளிந்தார். ஆனால், 'நளினாவை எப்படிச் சந்திப்பது? அதற்கு அந்த ராட்சஸி விடமாட்டாளே?' என்று அவர் எண்ணினார்.

மயில்கடை மாணிக்கத்திடம் சென்று, "மாணிக்கம்! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்; பர்மாக்காரி உன் கடைக்கு மயில்கள் எடுத்து வருவாள் அல்லவா? அந்தச் சமயம் அவளிடம் எப்படியாவது பேச்சுக் கொடுத்து உன் கடையில் ஒரு மணி நேரம் அவளைத் தங்க வைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

மாணிக்கத்துக்கு டாக்டரிடம் விசேஷ மதிப்பு உண்டு. ஏதோ முக்கியமாகத் தான் இதைச் சொல்லுகிறார் என்பதை உணர்ந்த அவன், "ஆகட்டும் டாக்டர் ஐயா, அப்படியே செய்கிறேன்" என்றான். டாக்டரின் விருப்பப்படியே அவன் செய்யவும் செய்தான்.



சென்ற ஆகஸ்டு மாதக் கடைசி வெள்ளிக்கிழமை 31-ம் தேதி இண்டி. சாந்தி மண்டபத்தில் பிரார்த்தனைக் கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ராஜாஜி, ஸ்ரீபிரகாசா முதலியவர்களும் ஏராளமான ஆண்களும் பெண்களும் பிரார்த்தனையில் கலந்து கொண்டார்கள். அன்று நடைபெற்ற நூற்பு யக்ஞத்தில் அம்பர் சர்க்காவும் கலந்து கொண்டது! காயனபடி கீர்த்தனபடி ஸ்ரீமதி சரஸ்வதி பாய் தமக்கே உரிய சிறந்த பாணியில் நந்தன் சரித்திரக் காலட்சேபம் செய்து பக்தர்களைப் பரவசப்படுத்தினார்.

பர்மாக்காரி அவன் கடைக்கு வந்த சமயம் நல்லதம்பி அவசரம் அவசரமாக நளினா வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். நளினா அப்போது மயில் பொம்மை செய்து கொண்டிருந்தாள்.

நல்லதம்பி முதலில் நளினாவிடம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு அவளை மெதுவாக எழுந்து நடக்கச் சொன்னார்.

"இந்தக் கால்கள் குணமாகி நான் என்ன செய்யப் போகிறேன்? என்னுடைய கால்களா மயில் செய்யப் போகின்றன! எனக்குக் கைகளிருந்தால் அதுவே போதும்" என்றாள் நளினா.

"நளினா! நீ கால்கள் எதற்கு என்று கேட்கிறாய்? உலகம் தெரியாத பெண் நீ! மனிதப் பிறவிகள் அனுபவிக்கக் கூடிய, அனுபவிக்க வேண்டிய இன்பங்கள் இந்த உலகத்தில் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அதிலும் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் அடையக் கூடிய பேறுகள் எவ்வளவோ உண்டு. நீ உன் கற்பனையால் அழகிய பொம்மைகளைச் சிருஷ்டிக்கிறாய்! ஆனால் நீ இயற்கையாகவே பெறவேண்டிய கடவுள் சிருஷ்டிகளை உன் மாற்றாந்தாய் எடுத்துக் கொண்டு விட்டாள். ஒன்றும் அறியாத பேதைப் பெண்ணாக உன்னை அடைத்து வைத்திருக்கிறாள். உன் வாழ்நாள் முழுதும் உயிரற்ற மயில் பொம்மைகளிடமே அன்பு செலுத்திக் கொண்டிருக்க வேண்டியது தானா? நீ என் வீட்டுக்கு வந்து விடு. உன்னை ஆறே மாதத்தில் குணப்படுத்தி உன் ஊனத்தைப் போக்கி விடுகிறேன்.." என்றார் டாக்டர் நல்லதம்பி.

நளினா ஆச்சரியத்தினால் கண்களை அகல விரித்து "ஐயையோ! அப்புறம் நான் என்ன செய்வதாம்?" என்று பயத்தோடும் வெட்கத்தோடும் கேட்டாள்.

"அப்புறம் நான் உன்னை மணந்து கொள்வதென்று முடிவு செய்து விட்டேன். பிறகு நாம் இருவரும் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்தலாம்" என்றார் நல்லதம்பி.

* * *

நல்ல தம்பியும் நளினாவும் மணம் புரிந்து ஓராண்டு பூர்த்தியாகி விட்டது. நளினா இப்போது பூரண குணம்பெற்று உல்லாசப் பறவையாக வாழ்ந்து வருகிறாள். நளினாவுக்கு இப்போது ஒரு பெண் குழந்தைகூடப் பிறந்திருக்கிறது.

நளினா மயில் செய்வதை மட்டும் நிறுத்தி விட்டாள். அதனால் மாணிக்கத்தின் வியாபாரம் படுத்துவிட்டது. அவன் டாக்டரிடம் ஓடி வந்து, "நான் உங்களுக்கு உபகாரம் செய்யப் போய் அதுவே எனக்கு அபகாரமாக முடிந்து விட்டதே!" என்று வருத்தப் பட்டான்.

"ஏன் மாணிக்கம்? என்ன விஷயம்?"

"இப்போதெல்லாம் அந்தப் பர்மாக்கார அம்மாள் மயிலே கொண்டு வந்து கொடுக்கிறதில்லேங்க" என்றான்.

"ஓகோ, நீ கவலைப் படாதே, மாணிக்கம்! மயில் செய்வது அந்த அபாயம் அம்மாள் இல்லே. என் மனைவி நளினாதான். இனி உனக்கு வேண்டிய மயில்களை நான் கொண்டுவந்து கொடுக்கிறேன்" என்று புன்சிரிப்புடன் கூறினார் டாக்டர் நல்லதம்பி.



எல்லாவித மரச் சாமான்களுக்கும்.. உட்பூச்சுக்கும், வெளிப்பூச் சுக்கும்
எவ்வித சீதோஷ்ண ஸ்திதியாலும் பாதிக்கப் படாதது
ஷாலிமார்
பூசுவதற்குத் தயாரான பெயின்டு
ஷாலிமார்
அலுமினியம் பெயின்டு
ஒரு கழுவக்கூடிய, சுவர்களுக்கேற்ற பெயின்டு
பலவித வேலைகளுக்கேற்ற சிறந்த எனாமல்
ஷாலிமார்
சுவர்களுக்கேற்ற பெயின்டு
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
Post Box 136, MADRAS-1

வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்

கால்கேட் டூத் பவுடர்

மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!

✓ வாயில் நறுமணம்!

✓ ஒளிவீசும் பற்கள்!

✓ சொத்தை குறையும்!



வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத்பவுடரை உபயோகியுங்கள்:

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பற்களை 2 நிமிஷம் பிரஷ்கொண்டு தேய்க்கவும்.
- பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
- எப்போதும் ஈற்றிலிருந்து பல்நுனி நோக்கி தேய்க்கவும்.

பெரிய சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துக

கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!

TPC/14

பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

45

"ஹிந்து மதத்திலும் ஈசன் ஒருவனே என்பது உறுதிப்பட்டால் கிறிஸ்தவமதமும் ஹிந்து மதமும் இரண்டும் கூட்டுறவு முறையில் இந்தியாவின் நன்மைக்குப் பாடுபடலாமே" என்றார் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார். இதைக் கேட்டு காந்திஜி சொன்னார் :


"இந்தக் கூட்டுறவுச் சேவை ஏற்பட வேண்டுமென்று மிகவும் விரும்புகிறேன். ஆனால் தற்காலத்து கிறிஸ்தவப் பிரசாரகர்கள் ஹிந்து மதத்தைப் பற்றிக் கேவலமாகப் பேசி வருகிறார்கள் ; அருவருப்பு உண்டாக்க முயல்கிறார்கள். ஹிந்து மதத்தை வெறுத்துத் துறந்து விட்டாலொழிய கடவுளை அடைய மாட்டீர்கள் என்று ஹிந்துக்களுக்குச் சொல்லி வருகிறார்கள். பிரசாரம் இந்த முறையில் நடந்து வரும் வரையில் இரண்டு மதங்களுக்கும் கூட்டுறவு எப்படி நடைபெறும்? முடியாது. கிறிஸ்து மதத்தில் பக்தியோடு வாழும் ஒருவன் மௌனமாகத் தன் மார்க்கத்தை அனுசரித்து இந்தியாவில் பணி செய்து கொண்டு போனால் அதனால் எவ்வளவோ நன்மை யுண்டாகும். உண்மையான கிறிஸ்துவ வாழ்க்கையின் சுகந்தம் ஹிந்து சமுதாயத்தில் வீசிப் பரிமளிக்கும். ஒரு புஷ்பம் ஏதும் பேசாமல் தன் சுவாசனையைத் தருகிறது. சுவாசனை வீசுவதே அதன்பான்மை. தன்னைப் பெருமைப் படுத்திக் கொள்வதற்காக அது சுகந்தம் தருவதில்லை. அதன் சுபாவமே சுகந்தம் வீசுவது. இதைப் போலவே, எந்த மதத்தைச் சேர்ந்த பக்தி மார்க்கமும் நல்வாழ்க்கையும். இந்தப் பரஸ்பர நிலைமை ஏற்பட்டால் உலகத்தில் சாந்தி நிலவும். மக்களுக்குள் சிநேக பாவம் வளரும். கிறிஸ்து மார்க்கத்தை மற்றவர்கள் ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று ஒரு யுத்த முறையிலே வேலை செய்தால் சாந்த நிலை ஏற்படாது. சிநேகமும் வளராது. இந்தத் தவறான முறைக்குப் பைபிளில்ஆதரவு கிடையாது."

பாதிரியார் : இந்தியர்கள் தெய்வம் ஒன்றே என்று ஒப்புக்கொண்டு பல தேவதைகளைப் பூஜைசெய்வதைநிறுத்தி விட்டால் இந்தச் சிக்கல் தீருமல்லவா?

காந்திஜி : கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்வார்களா? அவர்கள் எல்லாரும் ஒன்றுபட்டிருக்கிறார்களா?

பாதிரியார்: கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒன்றாக இல்லை. உட்பிரிவுகள் இருந்து வருகின்றன என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

காந்திஜி: ஆனபடியால் ஹிந்து மதத்துக்கும் கிறிஸ்துவ மதத்துக்கும் சமாதானம் செய்யும் உங்களுடைய யோசனை வெறும் வாதம் மட்டுந்தானே? காரியாம்சத்தில் உபயோகப் படாதல்லவா? கடவுள் ஒருவரே என்கிற கொள்கை இஸ்லாமுக்கும் கிறிஸ்தவ மதத்துக்கும் பொதுவான கொள்கை. ஆயினும் அந்த இரண்டு மதங்கள் ஒன்றாக இணைந்து விடவில்லை. அந்த இரண்டு மதங்களுமே இணைந்து ஒரு மதமாகவில்லை என்றால் நீங்கள் இப்போது சொல்லும் கிறிஸ்தவ – ஹிந்து இணைப்பு அதைவிடஅசாத்தியமல்லவா? இதைப் பற்றி என்னுடைய யோசனை வேறு. அதைச் சொல்வதற்கு முன் உங்களுக்கு நான் ஒன்று எடுத்துக்காட்ட வேண்டும். ஹிந்துக்கள் கடவுளின் ஏகத்துவத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்றும், பல தெய்வங்களை வெவ்வேறாக வைத்துப் பூஜைசெய்கிறார்கள் என்றும், மூர்த்தி பூஜைக்காரர்கள் என்றும் நீங்கள் குறை கூறுவதை நான் சரியென்று ஒப்புக்கொள்ள முடியாது. தேவர்கள் பலர் இருப்பதாகத்தான் ஹிந்துக்கள் சொல்கிறார்கள், உண்மை. ஆனால் தேவர்களுக் கெல்லாம் தேவனான ஒரு ஈசன் உண்டு என்பது ஹிந்து மதம். இதை நீங்கள் சரியாக அறியவில்லை. மக்களுக்கு மக்களின் உலகம் உண்டு. மிருகங்களுக்கு மிருகங்களின் உலகம் வேறு. அதைப் போலவே மானிட ஜாதியை விட உயர்ந்த ஒரு வகை தேவர்கள் நம்முடைய கண்களுக்குப் புலனாகாதவர்கள் இருக்கிறார்கள் என்றும் அவர்களுடைய உலகமே வேறு என்றும் ஹிந்து சமய சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. ஹிந்து சாஸ்திரத்தில் தேவர், அல்லது தேவதை என்ற பதங்களுக்கு நீங்கள் கடவுள் என்று பொருள் செய்துகொண்டு குழப்பிப் பேசி வருகிறீர்கள். கடவுளுக்கு ஆங்கிலத்தில் உள்ள சொல்லை தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் உபயோகப் படுத்துவது தவறு.



மரண தண்டனை

அ. வேதாசலம்



ஜன்னல் வழியே பத்திரிகை விழும் சத்தம். அரைத் தூக்கத்திலிருக்கும் என் காதுகளுக்குத் தான் எவ்வளவு கூர்மை! 'விடிந்திருக்குமோ?'

ஜன்னலருகே கறுப்புப் பூச்சரங்கள் கோலம் செய்ய, வெண்பட்டுப்போல் காட்சி யளித்தது, அன்றையப் பத்திரிகை. விரைவாக ஓடிப் போய் அதைக் கையில் எடுத்தேன்.

இதற்குக் காரணம் இல்லாமலில்லை. என் சிந்தனையைத் தூண்டில் போட்டு இழுத்தது அப் பத்திரிகையில் ஒரு செய்தி.

"மரண தண்டனை ரத்து மசோதாவை பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை நிராகரித்து விட்டது."

இந்தச் செய்தியை வேறு எவரிடமாவது சொல்ல வேண்டும்; விவாதிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது.

கிருஷ்ணபிள்ளை என்னுடைய நினைவுக்கு வந்தார். அவர் பக்கத்து வீட்டு விருந்தாளி. அவரிடம் ஓடினேன், பத்திரிகையைத் தூக்கிக் கொண்டு. மரண தண்டனை கூடாது என்று முன்பு வாதித்தவர் அவர். இன்றையச் செய்தியைக் கண்டு அவர் என்ன சொல்லப் போகிறார்? அதையும் தான் அவரிடம் கேட்கலாமே?

★

கிருஷ்ணபிள்ளை பக்கத்து வீட்டுக்கு வந்து ஒரு மாதம் இருக்கலாம்.

ஆள் சுமாரான உயரம்; ஒற்றை நாடி உடம்பு; சதைப் பிடிப்பும் இல்லை; அதனால் சுருக்கங்களும் இல்லை. நடந்தாரானால் இரும்புக் கம்பம் நகர்வதுமாதிரி இருக்கும்; அவ்வளவு உறுதியான உடற்கட்டு; நிறமும் அப்படித்தான்! தலை என்னவோ சாம்பல் குவியலாகத் தெரியும், வாத்தியார்கள் அணியும் வெளுத்துப் போன கறுப்புக் கோட்டுப் போல! அதைவிட அவரது வயதைக் காட்டியது ஒன்று இருந்தது; அதுதான் அவருடைய அருமையான குறுந்தாடி!

நான் வாடகைக்குக் குடியிருக்கும் இந்த வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் சொந்தக்காரரான வேதமுத்து வாத்தியாருக்கு நெருங்கிய நண்பராம் கிருஷ்ணபிள்ளை. இரண்டாம் உலகப் போரின் போது மலேயா சென்றவர் அவர். இப்பொழுதுதான் இந்தியா

திரும்பி யிருக்கிறார். இடையில், நண்பர்களுக்குள் கடிதத் தொடர்பே இல்லையாம். வேதமுத்து வாத்தியார் இறந்து போனது கூடக் கிருஷ்ணபிள்ளைக்குத் தெரியாதாம். இந்திய மண்ணை மிதித்தாரோ இல்லையோ, கிருஷ்ணபிள்ளை எப்படியோ வேதமுத்து வாத்தியாரை விசாரித்துக் கொண்டு அறந்தாங்கிக்கு வந்து விட்டார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், வேதமுத்து வாத்தியார் மகன் சாமுவேலுக்கே கிருஷ்ணபிள்ளையை அடையாளந் தெரியவில்லை. "நான் மலேயா போனபோது நீ ஐந்து வயதுப் பையன்; 'நானும் வாரேன் மாமா' என்று என் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதாய். இப்பொழுது உனக்கு நினைவு இருக்காது" என்று பழைய சம்பவங்களை நினைவுக்குக் கொண்டு வந்தார் கிருஷ்ணபிள்ளை. சாமுவேலின் அம்மா சாகாமல் இருந்திருந்தால் "ஆமாம் தம்பி" என்று அவருக்கு ஒத்துப் பாடி இருப்பாளோ என்னவோ? அவளும்தான் இரண்டு வருடங்களுக்கு முன்பு போய்விட்டாளே!

சாமுவேலின் வீடும் இப்போது மினுமினுக்கத்தான் செய்தது. வறுமையில் புதைந்திருந்த அவன் குடும்பம், கிருஷ்ணபிள்ளையின் வருகையால் வான வீதியில் மிதந்தது.

வீடு வெள்ளையடிக்கப் பட்டது; ஓடு மாற்றப் பட்டது. இருளில் சுடர் ஏற்றினால் உண்டாகும் கலகலப்பும், மலர்ச்சியும் தவழ்ந்தன.

ஒரு வருடத்துக்குச் சாப்பாட்டுக்குப் போதுமான நெல் மூட்டை மூட்டையாக வந்து இறங்கியது. வீட்டில் சுதேசிப் பாத்திரங்களாகவும் மண் பாண்டங்களாகவும் இருந்தவை, எவர்சில்வராகவும், வெண்கலமாகவும் மாறின. வளம் கொழிக்கும் பாப்பநாசம் தாலுக்காவில் ஒரு வேலி நன்செய் நிலம் சாமுவேல் பெயருக்குச் சாசனப் பத்திரமும் ஆகிவிட்டது. எல்லாம் கிருஷ்ணபிள்ளையின் கைங்கரியங்கள். சாமுவேலுக்கு மூச்சுத் திணறியது, ஆச்சரியந்தாங்காததால்.

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பது இதுதானோ? இந்தக் கிருஷ்ணபிள்ளை யார்! சாமுவேல் முன்பின் அவரைப் பார்த்ததுகூட இல்லையே? எப்போதோ செத்த வேதமுத்து வாத்தியாருக்குத் துக்கம்கொண்டாட வந்தார் கிருஷ்ணபிள்ளை. அதோடு போகக் கூடாதோ? இவர் என்னவென்றால் நண்பனுடைய பிள்ளைக்குப் பணத்தைக் கொட்டுகிறாரே? ஒருவேளை இதில் ஏதாவது சூது இருக்குமோ? அப்படியும் சொல்வதற்கில்லை. நிலம் சாசனம் ஆன கிரயப் பத்திரமே சாமுவேலின் கையில்தானே இருக்கிறது?

நாட்கள் வளர்ந்தன; கிருஷ்ணபிள்ளைக்கும் எனக்கும் இருந்த நட்பும் வளர்ந்தது. மனம் விட்டு நெருங்கிப் பழகினார் அவர்.



விளையாட்டுப் போல நான் ஒரு நாள் அவரைக் கேட்டேன்.

"சாமுவேலுக்கு ஏன் அளவுக்கு மீறி உதவி செய்கிறீர்கள்?"

கிருஷ்ணபிள்ளை புன்னகை செய்தார். குறுந்தாடியைத் தடவி விட்டுக் கொண்டார். அவரது பார்வை குருத்தைத் துளைக்கும் ஒரு வண்டு போல எங்கோ ஊடுருவிப் பாய்ந்தது.

"எனக்கும் சாமுவேலின் அப்பா வேத முத்துவுக்கும் இருந்த நட்பை நீங்கள் அறிய மாட்டீர்கள். இன்று நான் உயிரோடு இருப்பது, மனிதனாக வாழ்வது, செல்வத்தில் புரள்வது—எல்லாவற்றுக்கும் பொறுப்பாளி வேத முத்துதான். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பரந்த உலகத்துக்குப் பயந்து கொண்டு, பார்த்த வேலையையும் விட்டு விட்டு, நான் மலேயாவுக்கு ஓடினேன். போர் மூண்டது; பொருள் சேர்ந்தது. எனக்கோ பிள்ளையும் இல்லை; குட்டியும் இல்லை. திரண்ட செல்வத்தை நான் ஒருவன் மட்டும் அனுபவிப்பது அழகா? வேதமுத்து இறந்தபின் விருந்தே அவன் குடும்பம் ஏழைமையில் தத்தளிப்பதாக இந்தியா வந்ததும் அறிந்தேன். என் நண்பனின் மகனைக் கை தூக்கி விடுவது என் கடமை அல்லவா?"

கிருஷ்ணபிள்ளை அத்துடன் நிறுத்திக் கொண்டார். அவரது கண்கள் ஏனோ கலங்கி விட்டன. நண்பரின் ஞாபகந்தான் இதற்குக் காரணமோ என்னவோ?

இப்போதெல்லாம் நானும் கிருஷ்ண பிள்ளையும் உலக விவகாரங்களைப் பற்றியே அதிகம் பேசினோம்; அலசிப் பார்த்தோம். கொலையைப் பற்றிய சர்ச்சை கூட ஒருநாள் உச்ச நிலைக்கு ஓடி விட்டது.

"கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை அளிப்பதே சரி" என்று வாதித்தேன் நான்.

ஆனால் கிருஷ்ணபிள்ளை அதை ஒப்புக் கொள்ள வில்லை.

"கொலையாளி இருந்தவே மாட்டான் என்று ஏன் ஒரேயடியாக முடிவு கட்டி விடுகிறீர்கள்? மேலும், அவன்தான் அறியாத் தனத்தாலோ, ஆத்திரப்பட்டோ ஒரு உயிரைக் கொன்றான் என்றால், நாமும் அவனுக்கு மரண தண்டனை கொடுத்து ஒரு உயிரைப் பறிப்பானேன்?" என்று கேட்டார் அவர்.

"நீங்கள் சொல்வது சரி. ஆனால், என்ன தான் தவறை உணர்ந்தாலும் கொலையாளி ஒருவன் கடைசி வரை நிம்மதியுடன் வாழ முடியுமா? பீதியின் இரும்புப் பிடியிலே ஒவ்வொரு கணமும் அவன் நசுங்கித் துடிப்பானேன்? இந்தச் சித்திரவதையிலிருந்தும் அவனுக்கு விடுதலை அளிக்கவும் மற்றக் கொலையாளிகளுக்குப் படிப்பினை புகட்டவும் மரண தண்டனையை விடச் சிறந்த மார்க்கம் ஏது?"

"ஆம், தம்பி! உங்கள் வார்த்தையிலும் உண்மை இருக்கிறது...." என்று ஏதோ சொல்ல இழுத்தவர் பேச்சை நிறுத்தினார். சற்று நேரம் மௌனம் நிலவியது. அவர் முகம் ஒரு மாதிரியாக மாறியது. கண்களில் கூடக் கண்ணீர் உருண்டது: ஏன்?

அவரே பேச்சைத் தொடர்ந்தார்:



"என் உயிர் நண்பன் வேத முத்துகூடக் கொலைக்கு இரையாகி விட்டானும்...."

"என்ன! உங்கள் நண்பர் கொலை செய்யப்பட்டாரா?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டேன் நான்.

"அது ஒரு பெரிய கதை" என்று நீண்ட பெருமூச்செறிந்தார் கிருஷ்ணபிள்ளை. கதை என்ன தெரியுமோ?

★

'அறந்தாங்கியில் வேத முத்து வாத்தியார்' என்று சொன்னால் போதும். பச்சைத் தளிரும் பழுத்த மட்டையும் கூட அவருடைய வீட்டுக்கு வழி காட்டி விடும்.

இத்தனைக்கும் அவர் செவிடு. இதுதான் அவரிடமிருந்த ஒரே ஒரு குறை; மிகப் பெரிய குறையாக இருந்தது.

ஒருநாள் பேதி மருந்து சாப்பிட்டார் வேத முத்து. அது வாட்டி எடுத்து விட்டது அவரை. ஆனை உருமாறிப் போனார். பிற்பகல் மூன்று மணிக்குக் கஞ்சி சாப்பிட்டார். அதன் பிறகே அவருக்கு மயக்கம் நீங்கியது; கொஞ்சம் தெளிவு வந்தது.

மாலை நேரங்களில் இரண்டு மைல்களாவது உலவிவிட்டு வருவது அவர் வழக்கம். அன்றும் அவ்வாறே உலாவத் துடித்தன அவர் கால்கள். பேதி மருந்து தந்த களைப்போ புன்னும் இருந்தது; மனமோ கேட்கவில்லை. கொஞ்ச தூரம் நடக்க யத்தனித்தார் அவர்.

பட்டுக்கோட்டை ரோட்டில், அறந்தாங்கிக்கு வடக்கே—அதாவது, அவர் வீட்டிலிருந்து அரைமைல் தூரம் நடந்திருப்பார். ரயில் தண்டவாளம் குறுக்கே வந்தது. அந்தத் தண்டவாளத்தோடு நடந்து மேற்கே உள்ள ஏரிக்குப் போய்க் கால் கழுவ நினைத்தார்.

அந்தத் தண்டவாளத்தில் பிரயாண ரயில் போகாது. கல்லுமேடு என்னும் கிராமத்தி

விருந்து. இராவல்—சரளைக் கற்களைக் கொண்டு வரும் டிரக்கு வண்டிதான் ஓடும்; அதுவும் எப்போதாவது வரும்என்ற தைரியத்தில்தான் தண்டவாளத்தோடு நடந்தார் வேதமுத்து வாத்தியார். சற்று நேரத்தில் களைப்பு மேலிட்டுத் தண்டவாளத்துக்கு அருகில் உட்கார்ந்து விட்டார். பிறகு அப்படியே ஓய்ந்து சாய்ந்து விட்டார்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

சரளைக் கற்களைப் பொதி கழுதையாகச் சுமந்து வந்தது டிரக் வண்டி. அது 'கோ.. கோ..' என்று எத்தனையோ முறை அலறியது. வேதமுத்து வாத்தியாரின் செவிட்டுக் காதில் அது விழுந்தால்தானே? மயக்கம் வேறு. இந்த உலகத்தை மறக்கச் செய்திருந்ததே அவரை? அவர் நகரவில்லை.

டிரைவருக்கோ ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. இஞ்ஜினை விட்டுக் கீழே குதித்தான். வரும்போதே இரும்புக் கம்பி யொன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். கிழக்குப் புறமாக ஒருக்களித்துப் படுத்திருந்த அவர் முகத்தை யாரென்று கூட அவன் பார்க்கவில்லை. கம்பியைத் தூக்கி ஓங்கி அடித்தான் தலையில். பொட்டில் பட்டு விட்டதோ என்னவோ? இரத்தம் பீறிட்டுக் கொண்டு பாய்ந்தது. டிரைவருக்குப் பின்னால் ஓடிவந்த அவனது கையாள், அடிபட்ட அந்த உடலைத் தண்டவாளத்தை விட்டு அப்புறப் படுத்தி முகத்தைப் பார்த்தான்; டிரைவரும் ஏதோ ஒருவித நடுக்கத்துடன் உற்று நோக்கினான். அவனுக்குச் 'சொரேல்' என்றது.

'' ஐயோ! நம்ம வேதமுத்து வாத்தியாரா?'' என்று தன்னை மீறிக் கத்திவிட்டான்.

அந்த டிரக் வண்டியின் பின் பெட்டிகளில் உறங்கி விழும் நாலைந்து கூலிகளுக்கு இந்தச் சம்பவம் தெரிந்திருக்க நியாயம் இல்லை. டிரைவரும் கையாளும் குசு குசு வென்று ஏதோ பேசிக் கொண்டார்கள்.

அடுத்தகணம், டிரக் வண்டி தண்டவாளத்தில் பறந்தது.

அடுத்த நாள் ஊரில் ஒரே அமளி; வேதமுத்து வாத்தியார் கொலை மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்தது.

★

இந்தக் கதையைக் கேள்வியுற்ற பிறகு தான் கிருஷ்ணபிள்ளையின் துயரத்தை ஒருவாறு உணர முடிந்தது என்னால்.

உண்மையிலேயே கிருஷ்ணபிள்ளை அபூர்வ மனிதர்; உத்தமமான நண்பர்.; அவரை நண்பராகப் பெற்றதற்கு வேதமுத்து வாத்தியார் எவ்வளவோ கொடுத்து வைத்திருக்க வேண்டும்; சாமுவேல் புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

நாட்கள் ஓடின.

எனக்கும் கிருஷ்ண பிள்ளைக்கும் உள்ள நட்பு இன்னும் இறுக்கமாயிற்று.

சில நாட்கள் சென்று அவர் தம் சொந்த ஊருக்குப் போனார். பல நாட்கள் வரை திரும்பவே இல்லை. காரணம் என்னவோ?

இடையில், மரண தண்டனை பற்றிய சர்ச்சைகள் பலமாக அடிபட்டன பத்திரிகைகளில். சிலர் ஆதரித்தார்கள்; சிலர் எதிர்த்தார்கள். விதம்விதமான ஆதார, ஆராய்ச்சிக் கட்டுரைகளெல்லாம் வெளி வந்தன. எனக்கென்னவோ ஒரே குழப்பம். இன்னும் கிருஷ்ணபிள்ளையிடம் விவாதிக்க வேண்டும் போல் தோன்றியது. இப்படி நான் நினைத்த அன்றே கிருஷ்ணபிள்ளையிடமிருந்து கடிதம் வந்தது. அவர் நோயுற்றுக் கிடக்கிறாராம்!

மறுநாளே நான் விடுமுறை எடுத்துக் கொண்டேன். கிருஷ்ணபிள்ளையின் சொந்த ஊராகிய கன்னன்தன்குடிக்குப் புறப்பட்டேன். சாமுவேலும், அவன் குடும்பத்தாரும் கூட வந்தார்கள்.

கிருஷ்ணபிள்ளையை அடையாளமே தெரியவில்லையே! ஆளே மாறிவிட்டாரே! வைரம் பாய்ந்த மரமாக இருந்தவர் துவண்டு விழும் கொடியாகச் சுருங்கிப் போய் விட்டாரே? அவரது உறுதி யெல்லாம் எங்கே போயிற்று? எங்கிருந்து வந்தன இந்தத் தளர்வும் சோர்வும்? ஒளிந்திருந்த முதுமையும் வெளிப்பட்டு விட்டதே!

நான் பரிவோடு அவரை விசாரித்தேன். கொண்டு போயிருந்த ஆரஞ்சுப் பழங்களைக் கொடுத்தேன். எனக்குத் தெரிந்த ஆறுதல் வார்த்தைகளைக் கூறினேன். எனக்கு மேல் சாமுவேல் கவனித்தான். வறுமைக் கேணியில் விழுந்த அவனது குடும்பத்தை வாழ வைத்த தெய்வம் அல்லவா, அவர்? எங்கள் உபசாரங்களை யெல்லாம் அவர் ஏற்றுக் கொண்டார்; தைரியமாகவும் பேசினார்.

யாருமே இல்லாத சமயம். நானும் அவரும் தனிமையில் இருந்தோம். எங்கள் பேச்சு காற்றில் அலையும் பட்டமாகத் திரிந்தது. கடைசியில் ஈனக் குரலில் பேசினார்:—

'' ....தம்பி, மரண தண்டனை வேண்டும் என்றீர்களே அதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஒரு கொலையாளி, போலீசின் கண்ணிலே மண்ணைத் தூவி விட்டுப் பன்னிரண்டு வருடங்கள் தலை மறைவாக இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் தான் செய்த தவறை மட்டும் அவன் மறக்க முடியாது. தம்பீ! என் நண்பன் வேதமுத்துவை நினைத்தால் என்னால்அழாமல் இருக்க முடியவில்லை.''

சிறு குழந்தைமாதிரி தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டார் கிருஷ்ணபிள்ளை.

''பல வருஷங்களுக்கு முன்பு இறந்துபோன நண்பருக்காக இன்னும் நீங்கள் அழுது மாய்வதில் அர்த்தமே இல்லை'' என்றேன்.

'' நான் அழுவதில் அர்த்தம் இருக்கிறது தம்பி, அர்த்தம் இருக்கிறது. என் நிம்மதியெல்லாம் பறிபோயிற்று; சஞ்சல சாட்டியால் என் நெஞ்சு துளைபட்டு விட்டது. மற்றவர்களுக்குக் கருணை காட்டுவதாலும் பொருளைக் கொடுப்பதாலும் எனது கவலைத் தீயை அணைக்க முயன்றேன். தம்பி, எனக்குத் தோல்வி? முழுத் தோல்வி!''

'' நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? உங்கள் உடம்பு ஏன் இப்படிப் பதறுகிறது?''

'' பதறாமல் என்ன செய்யும்? வேதமுத்து வாத்தியாரைக் கொன்ற அந்த டிரக் வண்டி டிரைவர்....நான்....நான்....''

அடுத்த கணம், கிருஷ்ணபிள்ளையின் தலை துவண்டு விழுந்தது.

தை பிறந்தது

◦ புதுமைச் சித்தன் ◦

காமாட்சி புலம்புகிறாள்:

தை பிறந்தால் வழி பிறக்கு மென்பார்கள்; ஆனால், என் விஷயத்தில் மட்டும் வழி பிறக்கவில்லை! நான் மிகவும் துரதிர்ஷ்டக்காரி! ஆமாம். நிஜம்தான்! கல்யாணமாகி மூன்று வருஷங்களுக்குள்ளே என்னை ஒரு குழந்தைக்குத் தாயாக்கி விட்டு என்னுடைய ''அவர்'' திடீரென்று கண்ணை மூடி விட்டதிலேயே, என் அதிர்ஷ்டம் தெரியவில்லையா! எனக்குப் பிறந்ததே குழந்தை, அது ஆணாக இருக்கக் கூடாதா? அதுவும் பெண்! தலைவனில்லாத படையைப் போல் தத்தளித்த குடும்பத்தை நிர்வகிக்கப் பல விதத்திலும் பாடுபட்டேன். பெண் குழந்தையை ஆண் குழந்தையாக நினைத்து வளர்த்தேன்; படிக்க வைத்தேன். சங்கரியும் குடும்பக் கஷ்டத்தை உணர்ந்து பொறுப்புடன் படித்தாள். பசியும் பட்டினியுமாகக் கழித்த நாட்கள் எத்தனை எத்தனையோ; என்றாலும், படிப்பில் அவளுக்கு இருந்த ஊக்கம் சிறிதும் குறையவே இல்லை!...

வறுமை தாண்டவமாடும் வீட்டில், இவள் ஏன்தான் இத்தனை அழகுடன் பிறந்தாளோ! சங்கரியை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாமே! கண் நிறைந்த அழகாயிற்றே, என் சங்கரி!...ம்...என்ன செய்வது! கூரிய முட்களின் மையம் தானே ரோஜாவின் பிறப்பிடம்! சேறும் சகதியும் தானே செந்தாமரையின் வாசஸ்தலம்! நான் பட்ட பிரயாசை வீண் போகவில்லை. படிப்பு முடிந்து உத்தியோகத்துக்குத் தயாராக இருந்தாள், சங்கரி; ஆனால் உத்தியோகம்? இலேசில் கிடைப்பதாக இல்லையே! அவளும் வெறுமனே இருக்காமல் எதெதற்கோ எழுதிப் போட்டுக் கொண்டுதான் இருக்கிறாள்; கிடைத்தால் தானே? வேலை கிடைக்கவில்லையென்பதற்காக இந்தப் பெண், ஏன்தான் இப்படிச் சாப்பிடாமலும் தூங்காமலும் கிடக்கிறதோ! விசனப்பட்டுக் கொள்வதால் மட்டும் வேலை கிடைத்து விடுமா? எல்லாம் ஆகும் காலத்தில்தான் ஆகும்!....ஆண் பிள்ளையைப் போல் வயதுப் பெண்ணை வேலைக்கு அனுப்பப் போவதைப் பற்றி, ஊர்வம்பு காதைக் கிழிக்கிறது. இதில் முக்கிய பங்கு எதிர் வீட்டுக் கோமுவுக்குத்தான்! பைத்தியம் பிடித்த தன் மகனுக்கு எனது பெண்ணைக் கொடுத்து ''கன்னி கழிய''ச் செய்யவில்லையே என்று கோமுவுக்குக் கோபம்! அதை ஆற்றிக் கொள்ள வழி வேண்டாமா? மாலையில் சுவாமி படத்துக்கு மலர் அணிவித்துக் குத்து விளக்கு ஏற்றி நமஸ்கரித்துக் கொண்டிருந்தாள் சங்கரி. மனத்தையழுத்திய துயரம் கண்ணீராய் உருவெடுத்தது. பார்த்தேன்; என் கண்களிலும் நீர் துளித்து விட்டது! 'அருணோதயத்தைக் கண்ட பனிப்படலமாய்த் துன்பங்கள் விலக வேண்டும்' என்று மானசீகமாக வேண்டிக் கொண்டேன். அச்சமயம் தான் குத்து விளக்கின் ஜோதி, பொறிதட்டிச் சுடர்த்தது! பார்க்கலாம்!

சங்கரி கூறுகிறாள்:

பார்க்கலாம்; நாளைக்கு அந்த ஆபீஸ் 'இண்டர்வியூ'வுக்குப் போகிறேன். வேலை கிடைப்பதும் கிடைக்காததும் தெய்வசித்தம்! நாளைக்கு நடக்க இருப்பது நமக்கென்ன தெரியும்?...நானும்தான் என்ன செய்வேன்! பகல் இரவென்று பாராமல், பசி தாகம் நோக்காமல் பிரயாசைப்பட்டுப் படித்தேன்; முதல் வகுப்பிலும் தேறினேன். ஆனால், வேலை கிடைப்பதுதானே குதிரைக் கொம்பாயிருக்கிறது! நானும் பல விதங்களில் முயன்று கொண்டுதான் இருக்கிறேன். வெறுமனேயா முடங்கிக் கிடக்கிறேன்?...எல்லோரும் ஜாதகக் கட்டைத் தூக்கிக் கொண்டு வரன் வேட்டையாடுவார்கள். ஏனென்றால், தை பிறந்து விட்டதே! ஆனால், நான் மட்டும் பள்ளிக்கூட 'சர்டிபிகேட்' கட்டைத் தூக்கிக் கொண்டு உத்தியோக வேட்டை யாடுகிறேன்! என்ன செய்வது? சம்பாத்தியத்துக்கும் நிர்வாகத்துக்கும் ஆண் இல்லாத குறைக்கு எல்லாம் நான்தானே! இது தெரியவில்லை சில ஊர்வம்பிகளுக்கு! 'வயதுப் பெண் உத்தியோகம் பார்ப்பதா?' என்று கரித்துக் கொட்டுகிறார்கள். பெண்மைக்குப் பழுதேற்பட்டு விடுமாம்! தாயின் பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் சித்தத்தில் உறுதியும் இருக்கும்போது, எவர்தான் எவ்விதத்தில்தான் பெண்மைக்குப் பழுதேற்படுத்தி விட முடியும்? கடமை, விசுவரூபம் கொண்டு கண் முன்னர் நிற்கும்போது காதலையோ கல்யாணத்தையோ பற்றி நினைக்க நேரமேது? ஸ்ரீ கண்ணபிரானுக்கு ரத சாரதியானாளே தேவி சத்தியபாமை; ரத சாரத்தியம், ஆண்கள்

செய்யும் தொழிலாயிற்றே; பெண்ணை இய பாமை செய்யலாமா என்று யாரேனும் கேட்கிறார்களா? கேட்பதில்தான், அர்த்தமுண்டா? அவசியமான காலத்தில் அவசியமான தொழிலை எல்லோரும் ஏற்க வேண்டியதுதான்! இதில், ஆண் பெண் என்ற பாகுபாடு என்ன? இதை உணர அறிவில்லை, எதிர்வீட்டுக் கோமு மாமிக்கு! என் தலையைக் கண்டு விட்டால் போதும்; ஆரம்பித்து விடுகிறாள் வம்புப் பேச்சை!...எனக்கோ, வேலை கிடைக்க வேண்டுமென்ற ஒரே கவலை; அம்மாவுக்கோ, எனக்கு உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்பதுடன், என்னைப் பொறுப்புள்ள ஒருவன் கையில் ஒப்படைக்கவேண்டும் என்னும் கவலை வேறு! இதை, அவள் வெளியில் சொல்லாமல் மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டு புழுங்குவதை நான் அறியேனா? என்னைப் பார்த்துப் பார்த்து அவள் பெருமூச்சு விடுவதிலேயே அது தெரிகிறதே! எதற்கும் வேளை, நாழிகை வர வேண்டும்! எனக்கென்னவோ உத்தியோகக் கவலைதான் பெரிய கவலை. நாளைக்கு அந்த 'இண்டர்வியூ'வுக்குப் போய்ப் பார்க்கிறேன்; பிறகு பகவான் விட்ட வழி! என்ன செய்வது?


மானேஜிங் டைரக்டர் கூறுகிறார்:

என்ன செய்வது? வேலைக்காக வந்த பெண்ணின் படிப்பு, தகுதி, திறமை எல்லாவற்றையும் பரிசீலனை செய்தேன். அவளும், தம் குடும்ப நிலையை—ஏழைமை ஸ்திதியை — கஷ்டத்தை, மனம் விட்டுக் கூறி வேலை கொடுக்கும்படியும், விசுவாசமாக உழைப்பதாகவும் கெஞ்சாத குறையாக வேண்டினாள். எனக்கும் அந்த வேலையில் சங்கரியை நியமிக்க வேண்டுமென்றே ஆசை; ஆனால், என்ன செய்வது? சங்கரியைவிடச் சகல அம்சங்களிலும் உயர் தகுதியுடைய ஒரு வாலிப பி. ஏ., குறுக்கிட்டு விட்டானே! எப்படி நான் அந்த வேலையில் சங்கரியை நியமிக்க முடியும்?...பெண்ணென்றால் பேயும் இறங்கு மென்பார்கள். ஆமாம்; உண்மைதான்! நான், பேயைவிடக் கொடியவனோ, கடின சித்தம் படைத்தவனோ அல்லதான்! அன்பால், இரக்கத்தால் நெகிழும் மனம் படைத்த மனித வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான்! இரக்கம் செலுத்துகிறேன் என்று, தகுதியையும் திறமையையும் புறக்கணித்து விடுவதா? நீதிக்குப் பழுதேற்படுத்தி விடுவதா?... மானேஜரும் சில தடவைகள் வந்து, சங்கரிக்கே வேலை கொடுக்கும்படி நாசூக்காகச் சொன்னார்.

'எல்லாம் எனக்குத் தெரியும், போம்..' என்று எரிந்து விழுந்தேன், அவர் மேல். பாவம்! கண்டிய முகத்துடன் பேசாமல் சென்று விட்டார், அவர். மேற்கொண்டும் ஏதாவது சொன்னால், தவறாக ஏதாவது நான் நினைத்துக் கொண்டு விடுவேனோ என்ற பயம் வேறு.

ஒரு பருவப் பெண் வேலை தேடி வெளியில் புறப்படுகிறாளென்றால், அவள் குடும்பம் எவ்வளவு கஷ்டத்தில் இருக்கும் என்பதை ஊகிக்க முடிகிறது. சங்கரியின் துயரம் கவிந்த முகமும், சோகம் தேங்கிய விழிகளும், அவள்





பம்பாய் ஸ்ரீ வி. நாராயண அய்யர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி என். வெங்கடேஷ் அவர்களுக்கும், திருச்சூர் ஸ்ரீ டி. வி. விஸ்வநாத அய்யர் அவர்கள் குமாரி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் பம்பாயில் திருமணம் சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கூறிய வரலாறும் என் மனத்தை உருக்கி விட்டன. என்ன தர்மசங்கடம்!...முடிவாக, மனசைத் திடப்படுத்திக் கொண்டேன். அவனுக்கு 'வேலை கொடுப்பதற்கில்லை' யென்றும், அடுத்தபடியாக ஆபீஸில் ஏதாவது தேவை விழுந்தால் அவனுக்கே முதலிடம் தருவதாகவும் துணிந்து சொல்லி விட்டேன். அப்பொழுது அந்த வாலிப பி. ஏ.வை அவன் பார்த்த பார்வை! என்ன பரிதாபம்! நான் அவன் முகத்தைப் பார்த்தேன். விழிகளில் நீர் நிறைந்திருந்தது. நம்பிக்கை சிதறிவிட்ட நிலையில் தள்ளாடிய நடையில் சென்று விட்டான். பார்க்கப் பரிதாபமாகவே இருந்தது. இருந்தும் நானென்ன செய்வது?

மானேஜர் சொல்கிறார்:

நானென்ன செய்வது! மானேஜிங் டைரக்டரிடம் எவ்வளவோ சொன்னேன். அந்தப் பாவி மனுஷன் கேட்டால் தானே! அந்தப் பெண் ஆபீசுக்கு வந்தவுடனேயே பார்த்தேன். அவள் ஏழைமையான தோற்றமும், முகத்தில் படிந்திருந்த துயரமும், விழிகளில் தேங்கியிருந்த சோகமும். அவள் நிலையை எனக்கு நன்கு உணர்த்தின! என்னையறியாமலேயே அவளிடம் ஒருவித இரக்கம் உண்டாயிற்று. அதனாலேயே, அவள் ஒன்றும் சொல்லாத நிலையிலும் நானே வலியச் சென்று மானேஜிங் டைரக்டரிடம் சிபாரிசு செய்வது போல் சொன்னேன். துன்பப்படுகிறவர்களின் உண்மை நிலையைத் துன்பப்படுகின்றவர்களே உணர முடியும்! என் முயற்சி பயனில்லாது போய் விட்டது. எப்படியும் அவளுக்கு—சங்கரிக்கு உதவ வேண்டுமென்றும் என் எண்ணம் உறுதிப்பட்டதே தவிர, குலையவில்லை. எப்படி உதவுவது? வழி தான் புலப்படவில்லை. வேறு எங்கேயாவது வேலை தேடிக் கொடுப்பதா?...ம்... நெடுநேரம் தத்தளித்துக் குழம்பிய பின் ஒரு வழி கிடைத்தது. ஆம்; அதுதான் மிகச் சிறந்த வழி!

இப்பொழுது கல்யாணத்துக்கு என்ன அவசரமென்று மூன்று வருஷங்களாக என் அன்னையின் விவாக முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே வந்த நான் கூறியவைகளைக் கேட்ட அம்மா, ஸ்தம்பித்து விட்டாள். ''உனக்குத் தை பிறந்து விட்டதடா!'' என்றாள் மிகுந்த மகிழ்ச்சியுடன். அவள் முறைப்படி காரியங்களைக் கவனிக்கக் கிளம்பி விட்டாள். காரியங்கள் மிக விரைவாக நடந்தன. சகல விதத்திலும் எங்கள் இருவருக்கும் அதிசயிக்கத்தக்க ஒற்றுமை! சம்பிரதாயத்தை வழுவ விடக் கூடாதென என்னை யழைத்துக் கொண்டு பெண் பார்க்கக் கிளம்பி விட்டாள் அம்மா.

சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்ட என்னை வளர்த்து, படிக்கவைத்து ஒரு நன் நிலையடையச் செய்த தாயின் சொல்லைத் தட்டி நடப்பதா? சென்றேன்...நிலம் நோக்கும் பார்வையுடன் மணப்பெண் வந்தாள். என்னை நமஸ்கரித்தாள்; குனிந்த தலை நிமிராது நாணத்துக்கிடையில் கடை விழியால் என்னைப் பார்த்தாள். பார்த்ததுதான் தாமதம்; ஆச்சரியத்தால் அவள் அப்படியே சிலையாகி நின்றுவிட்டாள்! மனத்தில், அலை அலையாகப் பொங்கிய வியப்பும் மகிழ்ச்சியும், கண்களில் பிரகாசித்தன! அவளைத் திடீர் வியப்பிலும் சந்தோஷத்திலும் ஆழ்த்தவேண்டுமென்பதற்காகவே மணமகன் யாரென்பதை வெளிப்படுத்த வேண்டாமென என் அம்மாவிடம் சொல்லி இருந்தேன். ஒரே துள்ளலில் ஓடி மறைந்து விட்டாள்; அன்று ஆபீசில் இல்லாத நாணம், இன்று எங்கிருந்து வந்து பற்றிக்கொண்டதோ! ''எல்லாவற்றுக்கும் வழிபிறக்கச் செய்துவிட்டது இந்தத் தை'' என்று, சங்கரியிடம் அவள் தாய் சொல்லிக்கொண்டிருந்தது என் செவிகளிலும் விழுந்தது. வழி பிறக்கச் செய்தது மட்டுமா; எல்லையற்ற மகிழ்ச்சியால் சங்கரியின் மனத்தையும் அல்லவா 'தை—தை' என்று குதிக்க வைத்து விட்டது, இந்தப் பொல்லாத தை!

5—23—9

நீங்களும் இத்தகைய அழகைப் பெறலாம்





அழகிய மாதரைப் பற்றி பொறாமை வேண்டாம். அழகின் இரகசியம் உங்கள் கையிலேயே இருக்கிறது. தவறாமல் கேரளா சாண்டல்வுட் சோப்பை உபயோகித்து வாருங்கள். அதன் அற்புத சுகந்தமும், மழமழப்பான செறிப்பான நுரையும் உங்கள் சருமத்தை மிருதுவாக்கி அழகுபடுத்தும்.

கேரளா சந்தன சோப்

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கோழிக்கோடு

சென்னை ராஜ்ய தொழில் & வர்த்தக
இலாகாவின் ஒரு பிரிவு

பத்தொன்பதாம் அத்தியாயம்

கடலில் மிதந்த காதல்!

சந்திரசூடன் ஒற்றனிடமிருந்து விடை பெறும் போது, கடலின் பரப்பிலே ஓடம் செல்வதைக் கண்டானல்லவா? அந்த ஓடம் கரையோரமாகச் சொன்னபடி வந்து, வலம்புரித் தீவின் எல்லை வரம்புகளை நன்றாகக் கணித்துப் பார்த்துக் கொண்டு மீண்டும் கடலிலே திரும்பிச் செல்கிறது என்பதைச் சந்திரசூடன் உய்த்து அறிந்து விட்டான்.

''என்ன தம்பீ! இந்த ஓடம் உனக்குத் திகைப்பைத் தருகிறதா? திகைக்காதே! என்னுடைய தீர்மானத்தைத் துரிதப்படுத்தும்படி இருக்கிறது இந்தச் சம்பவம்! வலம்புரித் தீவிலிருந்து நான் புறப்பட்டு விட்டால் தான் ராஜசிம்ம மகாராஜனுடைய கட்டளையை நிறைவேற்றியவனாவேன்! இல்லையென்றால் அந்தக் கட்டளையை நிறைவேற்றவே முடியாமல் நான் இங்கேயே உயிர் விடவேண்டியது வரும்! அப்படியெல்லாம் நேராத முறையில், நானே மறு தினம் இங்கே வந்து விடுகிறேன். கவலையோ தயக்கமோ இல்லாமல் இங்கேயே எனக்காகக் காத்திரு. உன்னுடைய துணைவர்களும் ஆயத்தமாக இருக்கட்டும்!''

இவ்வாறு மீண்டும் உறுதி சொல்லி விட்டு மின்னலின் வேகத்திலே மறைந்தான் சந்திரசூடன்.

அன்றும் மறுநாளும் அதற்கு மறுநாளும் எவ்வித விபரீதமும் இல்லாமல் கழிந்தன. ஆனால் இந்த இரண்டு நாட்களிலும் சாருகேசி தனது கணவனுடைய முகத்தில் ஒரு அசாதாரணமான தெளிவைக் கண்டு திகைத்தாள். கணவன் மன அமைதியோடு இருக்க வேண்டும் என்பதில் பூரணமான ஆசை உள்ளவள் தான் சாருகேசி. என்றாலும் தனது தந்தையின் மரணமும், அதற்குக் காரணமாக அமைந்த சம்பவமும் கணவனின் உள்ளத்தில் எத்தனை பெரிய புயலை எழுப்பியிருந்தன என்பது சாருகேசிக்கு நன்றாகத் தெரியும். இரவு நேரங்களில் சந்திரசூடன் சஞ்சலத்திலே உழன்று வருவதும், மன அமைதியை நாடி அவன் வெளியே செல்வதும், அதற்குக் காரண

கடல் கண்ட கனவு



மாக அமைந்த உணர்ச்சிகளும் சாருகேசிக்குப் பரிபூரணமாகத் தெரியும். இந்த நிலையில் இப்பொழுது இரண்டு நாட்களாகச் சந்திர சூடனின் முகத்தில் ஒரு தெளிவு உண்டானது பற்றி அவள் திகைத்தாள். தெளிவின் காரணத்தை அவளால் ஊகிக்க முடியவில்லை. என்றாலும், தெளிவு ஏற்பட்டதில் ஒரு திருப்தி அடைய முயற்சி செய்தாள். ஆனால்பூரணமாகத்திருப்திப்பட்டுக் கொள்ள முடியவில்லை. இந்தத் தெளிவுக்குள்ளே ஏதோ ஒரு விபரீதம் இருப்பது போல அவளுடைய உள் மனத்தில் ஏதோ ஒன்று துடித்துக் கொண்டது! அந்த விபரீதம் ஏதாக இருக்கக் கூடும் என்று அந்த அபலையினால் கண்டு கொள்ள முடியவில்லை! இரண்டு இரவுகளும் அவள் நிம்மதியின்றிக் கழித்தாள்.

மூன்றும் நாள் இரவு. முந்திய இரவுகளின் களைப்பும், கண்களின் சோர்வுமாகச் சேர்ந்து சாருகேசி நன்றாகக் கண்ணயர்ந்து விட்டாள். அவளுடைய குழந்தை, கள்ளங் கபடம் இல்லாத அந்தப் பசலைப் பெண் குழந்தை, தன்னுடைய சிரிப்பு செய்து வரும் விபரீத மின்னல் களைப் பற்றி ஒன்றும் அறியாத பேதை நிலையில், கண்ணயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அதன் முகத்திலே மட்டும் ஒரு கனவு உலகிலிருந்து வருகிற அதே பழைய புன்முறுவலின் இரேகை மின்னற் கீற்றைப் போலவளைந்துகொண்டிருந்தது!

நடு ஜாமத்தைக் கடந்து விட்டது இரவு! பயங்கரமான ஓர் அமைதி, பயமும் அமைதியும் ஒன்று சேர்ந்த ஒரு விசித்திரம், அந்தப் படுக்கை யறையிலே படர்ந்திருந்தது! சந்திரசூடன் எழுந்தான். தான் எழுந்திருப்பதனால் எவ்வித சத்தமும் ஏற்பட்டு விடாதபடி மெதுவாக மிகுந்த கவனத்தோடு எழுந்து வந்து கட்டிலுக்கு அருகே நின்று கொண்டான்!

சாருகேசி கண்ணயர்ந்து நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். அவளுக்கு அருகில் அந்தப் பசலைக் குழந்தை புன் முறுவல் தெளிந்த முகத்தோடு படுத் திருந்தது. கண்கள் மூடி யிருந்தாலும், அதனுடைய நெற்றியிலே ஏதேதோ சுழிப்புக்கள். வளைவு நெளிவுகள்!

சந்திர சூடன் மாறிமாறிப் பார்த்தான். எந்தவிதமான விபரீத எண்ணங்களும் இல்லாமல், தன்னிடம் பரிபூரணமான நம்பிக்கை வைத்துள்ள தனது மனைவி! அவளுக்கு அருகே தனது உள்ளத்தில் புயலை எழுப்புகிற அந்த மின்னற் குழந்தை! சந்திர சூடனுடைய இதயத்தில் கடலே பொங்கி வந்தது.

ஆமாம்; அந்த இரவிலேயே சந்திரசூடன் தனது மனைவியையும், தன் குழந்தையையும் வலம் புரித் தீவிலே விட்டுவிட்டுச் செந்தமிழ் நாட்டுக்குப் புறப்படத் தீர்மானித்து விட்டான். அந்தத் தீர்மானத்தை அசைக்கப் பார்த்தது, அறையின் சூழ்நிலை!

சாருகேசியின் பளிங்கு முகத்தைப் பார்த்த சந்திர சூடன் அப்படியே கட்டிலுக்கு அருகில் இருந்த ஒரு சாய்மானத்திலே மனங் கலங்கிப் போய் உட்கார்ந்தான். ''எத்தனை பரிசுத்தமான பெண் இந்தச் சாருகேசி. எத்தனை கள்ளங் கபடம் இல்லாத குணவதி! இவளை இங்கே நிர்க்கதியாக விட்டு விட்டு ஓடுகிறோமா!'' — இப்படி ஒரு நினைப்பு மனத்தில் உண்டானதும் சந்திரசூடனுடைய இதயத்தில் யாரோ உளி கொண்டு செதுக்குவது போல இருந்தது! மறு கணம் அந்தக் குழந்தையின் முகத்தைப்பார்த்தான்! உடனே ஒரு ஆவேசம்! அந்தக் குழந்தையின் முகத்திலே எல்லை கடந்த ஆத்திரத்தோடு மின்னி வரும் ஒரு பயங்கரமான முறுவல்! நீலமேக யாழ்ப்பாணருடைய சிரிப்பே கேட்டது சந்திரசூடனுக்கு! அடுத்த விநாடி சாய்மானத்தி லிருந்து சந்திர சூடன் எழுந்தான்!

அறையின் வாசலுக்கு அருகே வந்தான் சந்திரசூடன்! சாருகேசியின் நினைவு மீண்டும் உள்ளத்தை வேதனைப் படுத்தியது. திரும்பிப் பார்த்தான். பரம நிம்மதியோடு, அவ நம்பிக்கையோ சூழ்ச்சியோ ஏதும் இல்லாத பவித்திரமான இதயம், அந்தப்பரிசுத்தமான முகத்திலே பிரதிபலித்து, உள்ளம் அமைதியிலே உறக்கமாக ஒன்றிக்

கொண்டு நின்றது! அதைப் பார்த்ததும் சந்திரசூடனுக்கு மேலே அடியெடுத்து வைக்க முடியவில்லை.

தயங்கி நின்ற சந்திரசூடன் அடுத்த கணம் குழந்தையை ஏறிட்டுப் பார்த்தான்! நீலமேக யாழ்ப்பாணரின் புன் முறுவல் தோன்றி அப்படியே அவனை விரட்டி யடித்தது!

அறையை விட்டு வெளியே வந்த சந்திரசூடன் பதுங்கிப் பதுங்கித் திருடனைப் போல-ஏன்-திருடனாகவே நடந்து சென்று யாழ்க் கூடத்துக்கு வந்தான். பேரியாழ் மரச் சட்டத்திலே நட்டமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. அதை நோக்கி நடந்தான். மெதுவாக மரச் சட்டத்திலிருந்து அந்த யாழை எடுத்தான், கையும் உடலும் பதறின. யாழை அங்கேயே வைத்து விட்டு மீண்டும் அறைக்கு வந்தான். எட்டிப் பார்த்தான். அதே பழைய நிம்மதியோடு கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்தாள் சாருகேசி! சந்திரசூடனுக்கு மீண்டும் தயக்கம் உண்டாயிற்று. அந்தத் தயக்கத்திலிருந்து விடுபட எண்ணியவனைப் போல, குழந்தையின் முகத்தைப் பார்த்தான் சந்திரசூடன். ஆவேசம் பொங்கியது உள்ளத்தில். 'சடக்' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு 'விறு விறு' என்று யாழை நோக்கி நடந்து வந்தான். ஒரு மின்னல் மின்னி மறைகிற நேரத்துக்குள் யாழோடு வேகமாக வெளியே வந்தான் சந்திரசூடன்.


வலம்புரித் தீவிலே நீலமேக யாழ்ப் பாணரின் வீட்டுக்குப் பின்னால் தென்னஞ்சோலை. அந்தச் சோலை கடலின் கரை வரை ஒரே நேராக அடர்த்தியாகச் செல்கிறது. யாழேந்திய கையனாக, மரங்களிலே மறைந்து மறைந்து, வேகமாக நடந்தான் சந்திரசூடன்.


நிலவுப் பாறைக்குத் தொலை தூரத்தில், ஒற்றனும் அவனுடைய துணைவர்களும் நின்றார்கள். அழகான நீண்ட படகு கரையிலிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமாக நின்றது.

"வணக்கம் மந்திரி குமாரரே!" என்று சந்திரசூடனை வரவேற்றான் ஒற்றன். அவனுடைய குரல் மெதுவாகத்தான் வந்தது. ஆனாலும் அந்த ஓசை கூடச் சந்திரசூடனுடைய செவியில் பன்மடங்கு பெரிதாகக் கேட்டது.

"இரையாதே தம்பி!" என்றான். மறு கணம் படகிலே நின்ற துணைவர்களைப் பார்த்துச் சந்திரசூடன் சொல்லுவான்: "யாரும் பேசாதீர்கள்! இப்படியே மௌனமாகப் புறப்படுங்கள்!"

"ஐயா! புறப்படுங்கள் என்று எங்களை மட்டும் சொல்லுகிறீர்களே! நீங்கள் எங்களோடு வந்து விடுகிறீர்கள் அல்லவா? தயவு





சென்னை வக்கீல் ஸ்ரீ டி. எஸ். நாகசாமி அய்யர் புத்திரனும் இந்தியன் ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் கம்பெனியின் உதவியாளருமான சிரஞ்சீவி டி.என். ரகுநாதனுக்கும், சென்னை "சிவில் ஏவியேஷன்" சீனியர் தொழில் நுணுக்க அதிகாரி ஸ்ரீ ராமச்சந்திரனின் புதல்வி சௌ. உஷாவுக்கும் சமீபத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள் !

செய்து பொறுமையோடு விடை கூறுங்கள் !'' என்று மிக்க பணிவோடு கேட்டான் பல்லவ ஒற்றன்.

''நான் வராமல் எப்படி? யாழ்மட்டும் தமிழ் நாட்டுக்குச் சென்று என்ன பயன்? அதை வாசிக்கக்கூடிய கையும் சேர்ந்தல்லவா போகவேண்டியிருக்கிறது. என்ன செய்ய!'' என்றான் சந்திரசூடன்.

''நீங்கள் மட்டுந்தான் புறப்பட்டீர்களா ?'' என்று ஆவலும் கவலையும் நிரம்பியவனாகக் கேட்டான் ஒற்றன்.

''தம்பி! ஏற்கனவே குழம்பியிருக்கிற என்னைக் கேள்வி கேட்டு ஆத்திரப்படுத்தாதே. படகைச் செலுத்து. இதோ நானும் என்னுடைய யாழும் படகில் ஏறி அமர்கிறோம்!'' என்று சொல்லிக்கொண்டே யாழோடு படகை நோக்கி நடந்து அதில் ஏறி இருந்து கொண்டான் சந்திரசூடன்.

கேள்வி கேட்க முடியாத நிலையில் மனத்தில் எழுகிற எண்ணங்களையும் சந்தேகங்களையும் விழிகளிலே தேக்கி ஒரே குழப்பத்தோடு சந்திரசூடனையே கூர்ந்து பார்த்தான் ஒற்றன்.

'' தம்பீ ! நீ ராஜசிம்ம மகாராஜனின் பணியாளன்! நான் இப்பொழுது சந்திரசூடன் என்ற யாழிசை மாணவனாகப் பேசவில்லை. ராஜசிம்ம மகாராஜனின் மந்திரி குமாரனாக, அரசப் பிரதானியாக, நின்று உனக்குக் கட்டளை யிடுகிறேன். புறப்படு.''

ஆவேசத்தோடு இந்த வார்த்தைகளைச் சொன்னான் சந்திரசூடன். ஒற்றன் மட்டுமில்லை, அவனோடு வந்திருந்த துணையாட்களுமே அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். படகு கடலிலே கட்டவிழ்க்கப்பட்டு மிதந்தது. எல்லையற்ற அந்தக் கார்மேகக் கடலின் தண்ணீர்ப் பரப்பைக் கிழித்துக் கொண்டு, இரு கூறாக விலகும் அலைத் தண்ணீரின் குமைச்சலுக்கு மத்தியிலே சந்திரசூடனுடைய பிடிவாதமான தீர்மானத்தைப் போல அந்தப் படகு 'விர்' என்று செந்தமிழ் நாட்டை நோக்கிப் புறப்பட்டது. அப்பொழுது தொலைவிலே வலம்புரித்தீவின் துறைமுக வாயிலை நோக்கி அணி அணியாகப் பல சிறு படகுகள் வேகமாக வந்து சேர்வது தெரிந்தது. சிறிய படகுகளைத் தொடர்ந்து பெரிய படகுகள். அவற்றைத் தொடர்ந்து இன்னும் பெரிய மரக்கலங்கள். பத்துப் பத்தாக, இருபது இருபதாக, ஐம்பது ஐம்பதாக ! பிறகு, நூற்றுக்கணக்கான மரக்கலங்கள் துறைமுகத்துக்குள் செல்வது தெரிந்தது.

''தம்பீ ! வலம்புரித் தீவுக்கு அழிவு காலம் வந்து விட்டது ! அந்த மரக்கலங்களைப் பார்த்தாயா ? இரண்டு தினங்களுக்கு முன்பு பார்த்த சிறிய படகுதான் இப்பொழுது இத்தனை படகுகளைக் கரை சேர்த்திருக்கிறது. அந்த உளவுப் படகுதான் இந்தத் தீவின் முடிவு நாளைக் கணித்துப் போக வந்த சிறிய காலதூதன்! அது திரும்ப வருகிற வரை இத்தனை மரக்கலங்களும் படையெடுப்புக்கு ஆயத்தமாகக் கடலின் மத்தியிலே நின்றிருக்கின்றன!'' என்றான் சந்திரசூடன்.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ? படையெடுப்பா ?'' என்றான் ஒற்றன்.

''தம்பி ! பல்லவ அரசியலோடு சரி உன்னுடைய அரசியல் ஞானம் ! இந்த மரக்கலங்களின் விஷயம் வேறு ! அதோ நடு நாயகமாகத் தெரிகிற மாபெரும் மரக்கலத்தில் பறக்கிறதே, அது மீனக் கொடி ! தெரிகிறதா ?. . . . நமக்குக் கேடு வந்து விடுமோ என்று பயப்படாதே ! நாம் கேட்டிலிருந்து பேரி யாழோடு தப்பி விட்டோம். வேறு யாராவது எதிரிகள் நம்மை வழியிலே சந்தித்தால்கூட நமக்குக் கேடு நேராது! நம் இலட்சியம் வேறு. எதிரிகள் இலட்சியம் வேறு!'' என்றான் சந்திரசூடன்.

''சந்திரசூடரே ! அப்படியானால் பாண்டியர்கள் இந்தத் தீவை அழித்து விடும் நோக்கத்தோடு தான் இப்பொழுது படையெடுத்து வருகிறார்களா ?'' என்று ஒற்றன் கேட்டான்.

'' ஆமாம். பழி வாங்கப் போகிறது இந்தப் படை. ஒரு வருஷத்துக்கு முன்னால் பாண்டியன் செய்த சபதம் அது!''

A SELECTION OF SOVIET PUBLICATIONS OF FOREIGN AUTHORS

MULK RAJ ANAND:	Selected Short Stories	0	8	0
HOWARD FAST:	The Last Frontier	1	2	0
HOWARD FAST:	The Peekskill U. S. A.	0	6	0
RALPH FOX:	The Novel and the People	0	12	0
JACK LINDSAY:	The Betrayed Spring	4	0	0
MARK TWAIN:	The Adventures of Tom Sawyer and The Adventures of Huckleberry Finn	2	12	0
MARK TWAIN:	The Connecticut Yankee at the King Arthur's Court	1	13	0
ELIZABETH GASKEL:	Mary Barton	2	12	0

Available with:

NEW CENTURY BOOK HOUSE, 199, Mount Road, Madras-2
NEW CENTURY BOOK HOUSE, C/17, Majestic Circle, Bangalore
VIJAYAWADA PUBLISHING HOUSE, Buckingham peth, Vijayawada-2
PRABHATH BOOK HOUSE, Ernakulam, Kottayam, Alleppey, Trichur Kozhikode, Cannanore and Mangalore

MK V/o MEZDUNARODNAYA KNIGA, Moscow 200, U.S.S.R.

இப்படிச் சொல்லி விட்டுச் சந்திர சூடன் ஒரு கணம் தொலைவிலே செல்லும் அந்த மரக்கலங்களைப் பார்த்துக் கொண்டு நின்றான். 'வலம்புரித் தீவின் கதி என்ன ஆகும்!' என்ற நினைப்பு ஒரு பெரிய அலையைப் போல அவனுடைய உள்ளத்திலே எழுந்து வந்து சரிந்தது. அப்படிச் சரியவும் அவனுடைய மனக் கண்ணுக்கு முன்னால் சாருகேசியின் முகம் அந்த அலையிலே மிதந்தது. மறுவினாடி அந்த முகம் மறைந்தது. அந்தக் குழந்தையின் முகம் தெரிந்தது. கலங்கிய கண்களிலே இப்பொழுது தீப்பொறி பறந்தது!

"படகை விரைவாகச் செலுத்துங்கள்!" என்று கட்டளை யிட்டான், பல்லவ ராஜசிம்மப் பேரரசனின் மந்திரி குமாரனாகிய சந்திரசூடன்.

இருபதாம் அத்தியாயம்

பெண்மை வெகுண்டது!

வைகறைப் பொழுது என்று பெரியோர்களும், முனிவர்களும், ஞானிகளும் புனிதமாக வழிபடும் புண்ணிய வேளையிலே நீலமேக யாழ்ப்பாணரின் வீட்டில் நிலாமுற்றத்தை யடுத்த அறையிலிருந்து குழந்தையின் அழுகுரல் எழுந்தது! ஏதோ பயங்கரமான ஒரு கனவிலிருந்து பதறி யெழுந்தது போல அந்தக் குழந்தை திடீரென்று வீறிட்டு அழுதது! சாருகேசி படுக்கையிலிருந்து உடம்பெல்லாம் பதறிக் கொண்டு எழுந்தாள். குழந்தையை வாரியெடுத்து அணைத்துக் கொண்டதும் அழுகை அடங்கியது. அதன் பிறகு தான் சாருகேசி இந்த உலகின் நினைவுக்கு வந்தாள். உடனே மீண்டும் பதறிப் போனாள்! கணவனைக் காணோம்!

பல இரவுகளில் சந்திரசூடன் காணாமற் போனதுண்டு. அப்படி யிருக்கும் இன்றுங்கூட என்று எண்ணி, அமைதி யடைய முடியவில்லை சாருகேசிக்கு! காரணம், கடந்த இரண்டு தினங்களாகத் தன்னுடைய கணவவின் முகத்திலே கண்ட விபரீதத் தெளிவு சாருகேசியின் உள்ளத்தில் ஒரு விவரிக்க முடியாத சஞ்சலத்தை ஏற்படுத்தி யிருந்தது!

குழந்தையை யணைத்தவாறு, பதறுகிற உடம்போடு கட்டிலிலிருந்து இறங்கி அறைக்கு வெளியே வந்தாள் சாருகேசி! அங்கேயும் சந்திரசூடனைக் காணோம்! மறுகணம் அவளுடைய அறிவின் வரம்புக் கோட்டிலே மின்னல் மின்னியது போல ஒரு சிந்தனை. அவ்வளவுதான். யாழ்க்கூடத்தை நோக்கி ஓடினாள் சாருகேசி. அப்படியே ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டாள் அவள்! யாழ் இருந்த இடத்தில் வெறும் மரச் சட்டம் மட்டும் நின்று கொண்டிருந்தது! உயிரை யிழந்த உடல் போன்று இருந்தது அந்த மரச் சட்டம்.

சித்திராங்க பூபதிக்கு யாழின் கதையை மேற்கண்டவாறு சொல்லிக் கொண்டு வந்த சமணத் துறவி இந்த இடத்தில் சற்று நிறுத்தினார். நீண்ட பெருமூச்சு ஒன்று வந்தது! அவருடைய இதயத்தின் அடித் தளத்தில் ஏதோ ஒரு வேதனை இதுவரை உறுத்திக் கொண்டிருந்ததை, இப்பொழுது வெளியேற்றுவதுபோலப் பாரமான பெருமூச்சு வந்ததும், துறவியின் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. பூபதியைப் பார்த்துக் கேட்டார்: "இளவரசே! உங்களுக்குக் கோவலனுடைய வரலாறு தெரியுமல்லவா?" என்று! பூபதி பதிலே பேசவில்லை. கதையை இடை மறிப்பது அவனுக்கு வேதனை தந்தது. இதைக் கவனித்த சமணத் துறவி மேலும் தொடர்ந்து சொன்னார்:

"எத்தனையோ அமைதி நிரம்பிய உள்ளங்களில் திடீரென்று எரிமலைக்கு நெற்றிக் கண் திறந்தது போல, என்றோ ஒரு நாள் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டுவிடக் கூடும். கண்ணகிக்கு அதிர்ச்சி ஏற்பட்ட விதத்தை இளங்கோ அடிகள் அமர காவியமாகப் பாடியிருக்கிறார். அமைதியும் குடும்பப் பண்பும் நிரம்பிய கண்ணகி என்ற பத்தினிக்குக் கோபம் உண்டாகி அந்தக் கோபம் மதுரைமா நகரையே அழித்தது. துரியோதனனுடைய சபையில் அமைதியே உருவான பாஞ்சாலி கூந்தலை அவிழ்த்தாள். அது பாரத யுத்தமாக மூண்டது. சாந்தமும் சத்தியமும் நிரம்பிய பெண்மணிகளுக்குத் திடீரென்று சீற்றம் எழுந்து விட்டால் அது எத்தனை வேகத்தோடு என்னென்ன காரியங்களைச் செய்து முடித்து விடுகிறது என்பது ஒரு பேராச்சரியம். அப்படிப்பட்ட பேராச்சரியமான சீற்றம் உண்டாயிற்று சாருகேசிக்கு.

கையிலே அணைத்துப் பிடித்த குழந்தையோடு வீட்டின் வெளியே ரத வீதியிலே பாய்ந்து வந்தாள் சாருகேசி! தெருவெல்லாம் தேடினாள். கடலின் கரையெல்லாம் ஓடினாள். தென்னஞ் சோலையில் எல்லாம் புகுந்து புகுந்து பார்த்தாள். கணவனைக் காணோம்! யாழின் கவடு பிடிபடவில்லை. ஆனால்

என்ன நடந்திருக்கிறது என்பதை ஊகித்து விட்டாள் அவள்!

சாருகேசியின் உள்ளம் எரிமலையாக மாறி விட்டது. எரிமலையின் கண் திறந்து கொண்டது. தன் இதய பீடத்தில் இருத்திப் பூஜை செய்து வந்த காதல்- தெய்வமாகிய சந்திரசூடன், பேரியாழுடன் வலம்புரித் தீவிலிருந்து மறைந்து விட்டான் என்று எண்ணியதும் சாருகேசிக்குத் தலை சுற்றியது. வானம் இடிவது போலவும், கடல் குமுறிக் கொண்டு வருவது போலவும் அவளுடைய உள்ளம் தவித்தது. தன்னுடைய மாசற்ற காதலுக்கு அவன் செய்து விட்ட வஞ்சகத்தை எண்ணி அவள் வருந்தவில்லை. தன்னுடைய தந்தையின் அபாரமான வாஞ்சைக்கு அவன் செய்துவிட்ட துரோகத்தை நினைந்து அவள் துயரப்படவில்லை. இதையெல்லாம் அவளால் மன்னிக்க முடிந்தது. ஆனால் அந்த யாழின் மறைவினால் நாட்டுக்கு ஏற்படப் போகும் தீங்கு?' யோசித்து யோசித்து ஒரு கணத்தில் பதினாயிரம் எண்ணங்கள் எண்ணி எண்ணி விம்மினாள் சாருகேசி. தன்னுடைய இதயக் காதலன் தன் தாய் நாட்டின் துரோகி என்ற நினைவை அவளால் தாங்கவே முடியவில்லை. பித்துப் பிடித்தவள்போல ஓடினாள். "துரோகியைப் பிடியுங்கள்!" என்று கதறினாள்.

வலம்புரித் தீவின் அரச வீதியிலே சூரியோதய காலத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு அபலைப் பெண்ணின் கதறல் கேட்டது. கையிலே குழந்தை ஏந்திய பெண்ணொருத்தி, வீராவேசமான குரலிலே பிரலாபித்துக் கொண்டு, பத்தினிக் கடவுள் தெய்வ கோபத்தோடு வெறி கொண்டு வீதியிலே ஓடுவதுபோல ஓடுவதைக் கண்டு மக்கள் எல்லாம் மருண்டார்கள்.

வலம்புரித் தீவின் அரசமாளிகையிலே ஆசார வாசலிலே தொங்கும் மாபெரும் 'ஆலி மணி' 'டாண் டாண்' என்று ஓங்கி அடித்தது. காவல் காத்து நின்ற வீரர்கள் எல்லாம் பதறிக் கொண்டு வழி விட்டார்கள். பத்தினித் தெய்வம், வலம்புரித் தீவை அழிவிலிருந்து காத்து நிற்க அறைகூவும் கன்னிக் கடவுள், கொதிக்கின்ற தீயாக, சுவாலை விடும் பெரும் நெருப்பாக, அரண்மனையின் உள்ளே நுழைந்தாள்.

"தாய்நாட்டின் துரோகியைப் பிடியுங்கள்! வலம்புரி அரசப் பிரதானிகளே! துரோகியைப் பிடியுங்கள்! உங்கள் மக்களைக் காப்பாற்றுங்கள்!" என்று கதறிக்கொண்டே அரச மாளிகைக்குள் ஓடினாள்!

அரச மன்றத்திலிருந்து திகைப்பும், படபடப்பும் மேலிட்டவராய் அரசச் சம்பிரதாயங்களை உதறி விட்டு ஓடி வந்தார் வலம்புரிப் பேரரசர்!

"மன்னர் பெருமானே! நீலமேக யாழ்ப்பாணரின் மகள் நான். அரச விசுவாசத்தினால், தாய் நாட்டின் நலத்தில் தனக்கிருந்த எல்லையற்ற பாசத்தினால் உயிர்விட்ட அந்த உத்தமக் கிழவரின் வழி வந்தவள் நான்! என்னுடைய முறையீட்டைக் கேளுங்கள். இந்தத் தாய்த் திருநாட்டை அழிவிலிருந்து காப்பாற்றுங்கள். .இந்த உத்தமப் புண்ணிய பூமிக்கு அழிவை வருத்து விட்டுப் பேரியாழோடு மறைந்துசென்று விட்ட துரோகியைப் பிடியுங்கள்."

இவ்வாறு கதறி ஓலமிட்ட சாருகேசியைக்கண்டு, மெய்யெல்லாம் தள்ளாடும் முதியவரான பேரரசர் திகைத்துப் போய் நின்றார்.

"வீரர்களே! காவலாளர்களே! ஏன் என்னை இப்படி வெருண்டு பார்க்கிறீர்கள். எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்று திகைக்கிறீர்களா? திகைக்காதீர்கள். தெளிவோடு தான் பேசுகிறேன். இந்தத் தாய் நாட்டின் துரோகி யார் என்று தெரியவில்லையா உங்களுக்கு! சொல்லுகிறேன் கேளுங்கள். இந்த வலம்புரித் தீவின் வஞ்சகத் துரோகி வேறு யாருமில்லை. என்னுடைய கணவன்! என்னை மாலையிட்ட மணாளன் எனது புண்ணியத் தாய் நாட்டின் துரோகி! இதோ என் கையில் தவழும் இந்தக் குழந்தையின் தந்தை எனது அன்னை பூமியின் நயவஞ்சக விரோதி! பிடியுங்கள்! பேரியாழையும் அதைக் கொண்டோடிய திருடனையும் பாய்ந்து சென்று கொண்டு வாருங்கள்! ஏன் தாமதிக்கிறீர்கள்! பேரரசர் பெருமானே! உங்களுடைய உடம்புங்கூடப் பதறுகிறதா! அப்படியானால் இந்தப் புண்ணிய பூமிக்குக் கேடு வருகிறதா! ஏ! வலம்புரித் தெய்வமே! சாந்த மயமான உன்னுடைய அருட் கண்கள் இமைகளை மூடி விட்டனவா! முக்கண் முதல்வனுடைய நெற்றிக்கண் இக்கலைத் தீவை நோக்கி விழித்து விட்டதா!"

சாருகேசி இப்படி ஒரே ஆவேசத்தோடு கதறிக் கொண்டு நின்றபோது, அரச மாளிகையின் வாசலோடு பதறியடித்துக் கொண்டு சில வீரர்கள் ஓடி வந்தார்கள். தொலைவிலே போர் முரசங்களின் ஒலி கேட்டது! அதைத் தொடர்ந்து வீர பராக்கிரமத்தோடு அறைகூவி அழைக்கும் சமர்ச் சின்னத்தின் குழல் ஒலி ஓங்கியெழுந்து காற்றிலே மிதந்து வந்தது! (தொடரும்)



ஸ்டாக்கிஸ்டுகள் :

மதுரை: மெஸர்ஸ் நாமிந்தியா ஸ்டோர்ஸ். * ஜார்ஜ் டவுன்: மெஸர்ஸ் வெங்கடேஷ் வஸ்திராலயா ஷாப் 1: பாங்க் ஆப் மைசூர் நியூ பில்டிங்ஸ், ஹைகோர்ட்டுக்கு எதிரில் * மவுண்ட் ரோடு: இந்தியா ஸில்க்ஹவுஸ். * தியாகராயநகர்: நம்பி சின்னசாமி செட்டி, நாகேஸ்வர ராவ் ரோடு






சென்ற வாரக் கணக்குக்கு விடை

1 - -	410256
- - -	இந்த எண்ணில் உள்ள 4 ஐ முதலில் ஆறுக்கு முன்னால் மாற்றவும்.
- - 5	
- - 7	
9 9 9	
1111	விடை: 102564



உங்களுக்கும் பறந்து வரும் காற்றாடி வேண்டுமா? படத்தில் உள்ளது போல் கொஞ்சம் தடித்த அட்டையைக் கத்திரித்துக் கொள்ளவும். அதை இரண்டு பக்கமும் சற்று வளைத்துக் கொள். அதன் நடுவில் ஒரு துவாரம் செய்து, அதில் ஒரு நீண்ட குச்சியைச் செருகவும். துவாரம் காற்றாடி சுற்றும்படி இருக்கட்டும். இப்போது குச்சியின் ஒரு முனையைக் கோர்த்துக் குச்சியை ஒரு 'கார்க்'கில் பொருத்தி விடு. கார்க்கின் அடி பாகத்தில் ஒரு கயிற்றைச் செருகு. கயிற்றில் ஒரு கல்லைக் கட்டிவிடு. பிறகு காற்றாடியை உயர வீசி விடு! காற்றாடி சுற்றிக் கொண்டே கீழே இறங்கி வரும்!





உன் மாமாவின் சகோதரியை என்னவென்று அழைப்பாய்? சொல். பார்க்கலாம். அத்தை என்றுதானே? அதுதான் இல்லை. யார் தெரியுமா?- தாயார்!

இடமைராஜ

துரோணன்

4. முடிவில்லாப் பயணம்

முரடர்களின் பிரயாணம் மீண்டும் தொடங்கிற்று. பழைய படியே ஆவேசமான ஓட்டம் தான்! வழியில் உருக்குப் பாறைகள் போன்ற மலைகள் குறுக்கிட்டன. சமதரை போன்ற மூட்டாதைகள் வந்தன. அதன் பின்னரோ வானத்தையளாவி நிற்கும் மரங்கள்! அவைகளிலிருந்துதான், எவ்வளவு வகையான கூச்சல்கள் எழுந்தன!

அவர்கள் பின்னும் நான்கு காத தூரம் வந்து விட்டார்கள். அவர்களுடைய கால்கள் தள்ளாடத் தொடங்கின. கைகளோ, தோள் புறத்தை விட்டே நழுவி விழுந்து விடும் போன்றிருந்தன.

ஆ! — இது என்ன? ஏதோ இரண்டு நெருப்புக் கோளங்கள் போலல்லவா தெரிகின்றன! இதென்ன உறுமல்? "கர்ர்ர்......" என்ற சப்தம் எழுந்தது.

அடுத்தகணமே, மஞ்சத்தின் முன் புறத்தைத் தூக்கிக் கொண்டிருந்த இருவரும் பயங்கரமாகக் கூச்சலிட்டனர். பின்புறத்தைத் தாங்கிக் கொண்டிருந்த இருவருமோ உளறியபடியே மஞ்சத்தைக் கீழே விட்டு விட்டனர். அதைத் தொடர்ந்து, முன் பக்கத்திலிருந்தவர்களும் 'பொத்'தென்று பிடிப்பைவிட்டுவிட்டனர். மறுகணமே, அவர்கள் 'கோ' என்று கத்திக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்! இப்பொழுது அந்நால்வரின் கால்களுக்கும் ஒரு புதுமையான சக்தியே ஏற்பட்டு விட்டது! ஏனென்றால், அவர்களின் பின்னே ஒரு பிரும்மாண்டமான புலியல்லவா பாய்ந்து வந்து கொண்டிருந்தது?

* * *

மஞ்சத்தை அந்தப் பாவிகள் 'தொம்' சென்று கீழே போட்டார்கள் அல்லவா? அவ்வதிர்ச்சியினால், உள்ளே யிருந்த உருவம் எப்படி நிம்மதியாக உறங்க முடியும்? அதன் விளைவாக, உள்ளிருந்த உருவமும் உளறியபடியே விழிப்படைந்து விட்டது! அது யார் என்று நினைக்கிறீர்கள்? அதுதான் இரண்டு தினங்களில் இளவரசுப் பட்டத்தை ஏற்பதற்கு இருந்த ராஜகுமாரனான விஜயன்!

விஜயன் பெரும் பதற்றத்துடன் மஞ்சத்தினுள் எழுந்து உட்கார்ந்தான். அவனது கண்களின் எதிரில் கருமையான இருளே தெரிந்தது. கைகளினால் படுக்கையைத் துழாவினான். தலை மாட்டிலிருந்த தலையணை கைக்குப் பட்டது. கையை இன்னும் கொஞ்சம் நீட்டி மஞ்சத்தைச் சுற்றியிருந்த கொசு வலையை விலக்கி விட்டு நோக்கினான். எத்தனைய பயங்கரமான இருள்! அந்த இருளினிடையில், 'மினுக் மினுக்'கென்று எத்தனை கோடி விளக்குப் பூச்சிகள் ஒளிவிட்டன.

'இது என்ன கனவு? இது எந்த இடம்?' என்று எண்ணி, வழி தெரியாது திகைத்தான் விஜயன்.

ராஜ குமாரன் வாயைத் திறந்து 'ஓ' வென்று கூச்சலிட முயன்றான். ஆனால், பாஷையின்றி வறட்டுக் கூச்சலைத்தான் அவன் வெளியாக்க முடிந்தது! இது அவனிருந்த அரண்மனையாக இருந்தாலல்லவா பலரும் ஓடி வருவார்கள்? அவனை வளர்த்த செவிலித்தாய்தான் போசாமலிருப்பாளா? அந்தோ, பரிதாபம்!

வானம் 'கிடுகிடு'வென்று முழக்கமிட்டது. பலவிதமான காட்டு மிருகங்களின் ஓலக்கூச்சல்களும் எங்கெங்கிருந்தோ வந்து கொண்டிருந்தன.

மரங்களின் மீதிருந்த பல வகையான பறவைகள் 'கிறீச்'சிடுவதும், 'படபட' வென்று சிறகையடித்துக் கொள்ளுவதுமாக ஆர்ப்பாட்டங்கள் செய்தன. ஆனால், இவைகளையெல்லாம் ராஜகுமாரன் எப்படி உணர முடியும்? சற்று நேரத்துக்கொரு தடவை 'பளிச் பளிச்' என்று வெளியாக்கிக் கொண்டிருந்த மின்னல்கள் மட்டிலும் மரங்களின் இடுக்குகளை ஊடுருவிக் கொண்டு தெரிந்தன. 'ஜிவ்' சென்ற ஊதல் காற்று விசையுடன் வந்து தாக்கிற்று. இவைகளைத்தான் ராஜகுமாரன் அறிய முடிந்தது!

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் 'சோ' என்று மழை கொட்ட ஆரம்பித்தது. சாரல் காற்று 'உஸ் உஸ்' என்று சீறிய வண்ணம் ராஜகுமாரனின் முகத்தை நோக்கி வீசிற்று. அவன் 'ஓ' வென்று கூச்சலிட்டபடியே மஞ்சத்தின் குப்புறப்படுத்துக் கொண்டான். பயத்தின் மிகுதியினால் அவனுக்குக் கண்களைத் திறக்கவே மனம் வரவில்லை.

வெகு நேரத்துக்குப் பின் அவன் கண்களைத் திறந்து பார்த்த போது, மழை நின்றிருந்தது. மரங்களின் வழியாக இலேசான வெளிச்சமும் தெரிந்து கொண்டிருந்தது. விடியற்காலை ஆகி

விட்டதில் காரணமாக மரத்திலிருந்த பட்சிகளெல்லாம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அவன் செவிகளுக்கு இவை எப்படிக் கேட்கும்? அவனது சுற்றுப்புறம் முழுமையிலும் எவ்வளவு பயங்கரமான காட்சிகள்!

மேடும் பள்ளமுமாக இருந்த அந்த இடத்தில் எங்கு பார்த்தாலும் கூழாங் கற்களும், கருமையான உருக்குக் கற்களுமே நிறைந்திருந்தன. ஏதேதோ அவன் பார்த்தறியாத புதர்களும், முட் செடிகளும் மண்டிக் கிடந்தன. நாலா புறங்களிலும் மிருகங்களின் எலும்புத் துண்டுகளும், மண்டை ஓடுகளும் கிடந்தன. கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் மரங்களையும் சிறு சிறு குன்றுகளையும் தவிர வேறெதுவுமில்லை.


ராஜகுமாரன் சிறிதே தைரியத்துடன் சுற்று முற்றும் நோக்கினான். பின்னர் மஞ்சத்தையும் பார்த்தான். அதிலிருந்த துணிப்பையைக் கண்டதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதில் வேறொன்றுமில்லை. அவன் சித்திரம் வரைவதில் ஆசையுள்ளவன் அல்லவா? அவன் சேகரித்திருந்த சாயக்கட்டிகளும், சார்த்துண்டுகளுமே அப் பைக்குள்ளிருந்தன. முதல் நாளிரவு படுக்கும் போது அப் பையைத் தலைமாட்டிலேயே வைத்துக் கொண்டதன் ஞாபகம் இப்பொழுதுதான் அவனுக்கு ஏற்பட்டது. விஜயன் அதையெடுத்துத் தம் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு எழுந்தான். அந்தப் பயங்கர இடத்தை விட்டு வேறெங்கேயாகிலும் போய் விடவேண்டுமென்று அவன் தீர்மானித்தான்.

கொஞ்ச [illegible] தும், இரண்டு [illegible] அவனுக்கெதிரே [illegible] அவைகளின் [illegible] வாய் போல [illegible] யிருந்தது. ஆனால்—[illegible] குன்றுகளுக் [illegible] இருக்க [illegible] என்று அவனுக்குத் தோன்றியது. ஆகவே, விஜயன் கொஞ்சம் பரபரப்புடனேயே சென்று குன்றின் சரிவை அணுகினான். அடாடா! அங்கேதான் அவனுக்கு எத்தகைய ஆபத்து காத்திருந்தது!

ராஜகுமாரன் எதேச்சையாகத் திரும்பினான். ஒரு பிரும்மாண்டமான கரடி தன் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிக் கொண்டபடியே மனிதனைப் போல் நடந்து வந்து கொண்டிருந்தது! அதன் நடையில்தான் எத்தகைய உல்லாசம்! அதன் திறந்திருந்த வாயோ, சிரிப்பது போன்று எல்லாப் பற்களும் தெரியும் வண்ணமிருந்தது. அந்தக் கைகளில் தான் எவ்வளவு கூர்மையான நகங்கள்! அடுத்தகணமே; விஜயன் கூச்சலிட்டவாறு, தலை தெறிக்க ஓடினான்! அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கரடு முரடான அந்தப் பாதையினால், அவனது கால்கள் 'கரீல் கரீ'லென வலியெடுத்தன.

கொஞ்ச தூரம் சென்றதும், மலைச் சரிவின் வளைவான பாகம் குறுக்கிட்டது. அதன் சமீபம் வந்தவுடன் தான் அவனுக்குப் பின்னாலும் கரடி துரத்தி வருவதை அவன் அறிய முடிந்தது. அது முன்போல் இரண்டு கால்களால் மட்டும் நடந்து வரவில்லை. நான்கு கால்களையும் பூமியில் ஊன்றித் தான் ஓடி வந்து கொண்டிருந்தது.





கோவை ஜில்லா காங்கேயம் ஸ்ரீ சென்னியப்பா மில்ஸ் உரிமையாளர் ஸ்ரீ வி. எஸ். நாச்சிமுத்து முதலியார் புதல்வி மாரியம்மாளுக்கும் ஆனைமலை பிரபல மிராசுதார் ஸ்ரீ ஆர். கோபால்சாமி முதலியார் புதல்வன் கோபாலுக்கும் 19-8-56ந் தேதி காங்கேயம் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. அது சமயம் ஏராளமான பந்துக்களும், நண்பர்களும் வந்திருந்து மணமக்களுக்கு ஆசி கூறி, பரிசுகளும் வழங்கினார்கள். ஒரிஸ்ஸா கவர்னர் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களிடமிருந்தும், ராஜ்ய மந்திரிகளிடமிருந்தும், பல எம்.எல்.ஏ., எம்.பி.,க்களிடமிருந்தும், வெளியூர் நண்பர்களிடமிருந்தும் ஆசிச் செய்திகள் வந்தன.

அன்று மாலை திருக்கோயிலூர் சகோதரிகள் S. அலமேலு & புஷ்பா அவர்கள் இன்னிசையும் இனிது நடந்தது.

வாழ்க, மணமக்கள்!

ஆனால், அதன் பருமனான உடலைத் தூக்கிக் கொண்டு அவனது வேகத்துக்குச் சரியாக ஓடிவர இயலவில்லை. இன்னும் கொஞ்சம் வேகத்துடன் ஓடினால், அந்த வளைவான திருப்பத்தில் எங்கேயாகிலும் ஒரு இடத்தில் அவன் ஒளிந்து கொண்டு விடலாம்—

விஜயன் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடி வளைவான திருப்பத்தையும் அநேகமாகக் கடந்து விட்டான். அவன் திரும்பிப் பார்க்காமல் வேகமாக ஓடினான். எதிரே — கோட்டையின் நுழைவாயில் போன்று ஒரு புதுமையான வழி தெரிந்தது. அதற்குள் சென்று விட்டால், கரடியின் கண்களுக்கு அது தெரியவே முடியாது!


விஜயன் ஒருவழியாக நுழைவாயிலுக்குள் புகுந்து விட்டான். அவனது கால்கள், பலமெல்லாம் குன்றி அசந்து போய் விட்டன. இரண்டு கால்களும் பின்னிவிடுவது போன்று, அடிக்கொருதரம் இடித்துக் கொண்டன. இனி அவனால் ஓரடிகூட ஓடமுடியாது போலிருந்தது. நெடுஞ் சுவாசம் அவனை உலுப்பிற்று. வனாந்தரமான இடத்தில் தன்னந்தனியே தவித்து நின்ற விஜயனுக்கு அழுகை அழுகையாக வந்தது. என்ன செய்வான் பாவம்!

கொஞ்சதூரம் வரையில், வாசற்படியின் வெளிச்சம் தெரிந்தது. பிறகோ? ஒரே கருமையான இருட்டுத்தான். இனி, கரடிக்கும் அவன் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்கவே முடியாது. ஆனால்—? இதென்ன? கரடியின் கோரப் பிடியிலிருந்து அவன் தப்பி விட்டதாக எண்ணி மகிழ்ந்தது, அற்ப சந்தோஷமாக வல்லவா போய்விட்டது? அந்தக் கருங் குகைக்குள்ளேயும் ஒரு பேராபத்து காத்திருக்கிறது என்பது அப்பாவி விஜயனுக்கு எப்படித் தெரியும்?

அது ஒரு குகையல்லவா? வெளிச்சமும் காற்றும் எங்கிருந்து வரும்? விஜயன் கண்களை நன்றாக விழித்துப் பார்த்தபடியே இரண்டடிகள் நகர்ந்தான். அடுத்தகணம்—அவனைத் தாங்கிக் கொண்டிருந்த பூமியின் பாகம், மிக வேகத்துடன் கீழே அமுங்குவது போன்றிருந்தது! அப்புறம் அவனது கால்களின் கீழே எவ்வித ஆதாரமும் இல்லை. இதென்ன மாயம்? கால்களின் கீழே பூமியே தட்டுப்படாத அவன்—ஆகாயத்திலே பறக்கிறானா? இல்லை, வானலோகத்திலிருந்து தான் கீழே கிடுகிடு என்று இறங்குகிறானா?

அவனது உடல் எங்கேயோ போய்க் கொண்டேயிருந்தது! அது முடிவில்லாப் பயணமாகவும் இருந்தது! (தொடரும்)

எவ்வித வாஹனம்* மற்றும் டிராக்டருக்கு* ஏற்றதொரு ஓக்ஸ் பாட்டரி இருக்கிறது



அவற்றின் விசேஷ அம்சங்கள்

அதிகப்படியான உறுதி

நீடித்த உழைப்பிற்குக் கடினமான ரப்பர் கேஸில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

அதிகப்படியான மின்சார சக்தி

அதிகப்படியான மின்சார சக்தி அளிக்கும் பைபர் கிளாஸ் ஸெப்பரேட்டர்கள் உள்ளன.

அதிகப்படியான தாங்கும் சக்தி

கடின வேலைக்குகந்த பெரிய பிளேட்டுகள் அமையப் பெற்றுள்ளன.

*பெட்ரோல்
அல்லது
டீஸல்

ஜார்ஜ் ஓக்ஸ் பிரைவேட் லிமிடெட்

இந்தியா முழுவதிலும் அங்கீகரிக்கப்பட்ட போர்ட் வியாபாரஸ்தர்கள்

ஹூக்கின்ஸ் ரோடு, பம்பாய் 4

GO. 3702



மாணவர் செய்யும் மகத்தான சேவை

ஸோமாஸ்

"நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்" என்று ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் அருட்பெரும் ஜோதியை வேண்டினார். ஆனால் தற்காலத்தில் நோயை வெல்லுவது என்பது சுலபமான காரியமாயில்லை. ஆகவே, இறைவனை நோக்கி வேண்டுவதிலும் சிறு மாறுதல் செய்யவேண்டியிருக்கிறது. அப்படி நம்மை ஏதாவது நோய் அணுகுமாயினும் அலமாதி, பஞ்செட்டி கிராமங்களில் வசிக்கும் படியான வரத்தையாவது கொடுக்கச் சொல்லிக் கோர வேண்டும்.

அலமாதி, பஞ்செட்டி கிராமங்களில் என்ன விசேஷம் என்று கேட்கிறீர்களா? முதலில் மேற்படி கிராமங்கள் எங்கே யிருக்கின்றன என்று தெரிந்து கொள்ளுவோம்.

மாபெரும் காங்கிரஸ் மகாநாடு நடந்து, அரிய புகழ் அடைந்திருக்கும் ஆவடியை அடுத்துச் சில மைல் தூரத்தில் இருக்கும் கிராமங்களே அலமாதியும் பஞ்செட்டியும்.

சரி, அங்கே என்ன விசேஷம் என்று இப்பொழுது கேளுங்கள்.

மேற்படி கிராமங்களில் சில வருஷங்களாக மகத்தான புரட்சி நடந்து வருகிறது; மனித இனத்தை அடியோடு நாசம் பண்ணும் அணுகுண்டுப் பரீட்சை, நீரகக்குண்டுப் பரீட்சை என்று சொல்லப்படும் விபரீத விஷப் பரீட்சைகள் தொடர்ந்து நடந்து வரும் இந்நாளில், மனித இனம் அடியோடு அழிந்து விடாமல் காத்துவரும் மகத்தான சக்தியாகிய சேவை உணர்ச்சி செயல்பட்டு வருகிறது; நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை செய்து கொள்ள வழியில்லாத ஏழை மக்களுக்கு இலவசமாகச் சிகிச்சை செய்யும் நோன்பு அங்கு நன்கு நோற்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சேவையில் எந்த ஸ்தாபனம் ஈடுபட்டிருக்கிறது? எந்தச் சேவா சங்கத்தினர் அந்தப் புனித கைங்கரியத்தைப் புரிய முன் வந்துள்ளனர் என்று அறிய ஆவல் ஏற்படுவது இயல்பு.

சுதந்திர பாரதத்தின் சுபிட்சத்துக்கு அடிகோலும் அஸ்திவாரப் பொறுப்பை வகிக்கும் மாணவர் சமூகம் இம் மகத்தான சேவையைச் செய்ய முன்வந்துள்ளது.

சென்னை, ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் விடா முயற்சியுடன் ஐந்து ஆண்டுகளாக ஆற்றி வரும் கிராம மருத்துவப் பணியையே குறிப்பிடுகிறேன்.

'நோயுற்றுப் படுப்பது இறைவன் செயல், அதை எதிர்த்துப் போராட முடியாது' என்ற தீர்மானத்தில் இருந்து வரும் கிராம மக்களுக்கு இப்போது எல்லா நோய்களுக்கும் இலவசச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அலமாதி கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கிராம வைத்திய சிகிச்சை நிலையத்துக்கு நூற்றுக் கணக்கில் ஆடவர், பெண்கள், சிறுவர், சிறுமியர், குழந்தைகள் யாவரும் வந்து 'க்யூ'வில் நின்று இலவசமாகச் சிகிச்சையும் மருந்தும் பெற்றுக் கொண்டு போகின்றனர்.

"கிராமத்தின் சுபிட்சம்தான் பாரதத்தின் சுபிட்சம்; கிராம மக்களின் நல்வாழ்வுதான் பாரதத்தின் நல்வாழ்வு; கிராமத்துக்குச் செய்யும் சேவைதான் நாட்டுக்குச் செய்யும் உண்மையான சேவை" என்ற காந்தியடிகளின் வாக்கு அங்கே காரியத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் எளிய முறையில் சில மாணவர்களால் மரத்தடியில் துவங்கப்பட்ட இந்தச் சேவை இப்பொழுது மிகவும் விரிந்து பரந்து விளங்குகிறது. பிரதி ஞாயிற்றுக் கிழமையும் ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் அலமாதி, பஞ்செட்டி கிராமங்களுக்குச் சென்று மிகவும் சிரத்தையாகக் கிராம மக்களைப் பரிசோதனை செய்து மருந்து கொடுக்கின்றனர். சுற்று வட்டாரத்தில் உள்ள பல கிராமங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் இந்த வைத்திய சிகிச்சையைப் பெற விரைகின்றனர். வைத்தியக் கல்லூரி மாணவர்கள் மட்டும் அல்லாமல் பயிற்சி பெற்ற டாக்டர்களும் இந்தக் கிராம வைத்திய சேவையில் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர். பிரதி ஞாயிற்றுக் கிழமையும் லேடி டாக்டர்கள், டாக்டர்கள், நர்ஸ்கள் சகிதம் கல்லூரி மாணவர்கள் பஸ் அலமாதியை நோக்கிப் புறப்படுகிறது. இவர்களை எதிர்பார்த்து ஆவலாகக் காத்திருக்கும் ஏழைக் கிராம மக்களுக்குச் சிகிச்சை செய்கிறார்கள்.

அல்மாடியில் இந்தப் புனித சேவைக்கென்றே ஒரு அம்மையார் விசாலமான கட்டடத்தைத் தானமாக அளித்திருக்கிறார். மருந்து கலந்து கொடுக்கும் டிஸ்பென்சரியும், நோயாளிகளைக் கவனித்துப் பார்க்க வசதியான பெரிய கூடமும் கொண்ட கட்டடம் அது.

பஞ்செட்டி கிராமத்தில் ஒரு பெரிய கட்டடத்தில் கிராம வைத்தியசாலை நடக்கிறது. அதைச் சேர்ந்த பிரசவ விடுதி ஒன்றும் அங்கே இருக்கிறது.

நான் முதன் முதலில் கிராமத்தில் நடக்கும் இந்த அரிய மருத்துவ சேவையைப் பற்றி அவ்வளவு பெரியதாக எண்ணவில்லை. ஆனால் நேரில் ஒரு ஞாயிற்றுக்கிழமை போய்ப் பார்த்து விட்டு வந்ததும் என் மனம் அடியோடு மாறி விட்டது.

சாதாரணமாக ஏழை மக்களுக்கு நோய் வந்தால், அவர்கள் நோயைப் பற்றிப் பயப்படுவதைவிட அதற்குச் சிகிச்சை செய்து கொள்வதற்கு ஆகும் செலவைக் குறித்துத்தான் பயப்படுவார்கள். அதுவும் மேல் நாட்டு வைத்தியம் செய்து கொள்ள ஆரம்பித்து விட்டால் விதம் விதமான பாட்டில்களில் வர்ண விசித்திரங்கள் கொண்ட பளபளப்பான மாத்திரைகளும், ஊசி மருந்துகளுமாக வாங்கியே அலுப்பு உண்டாகிவிடும். ''ஏழைக் குடும்பம், ராஜ வைத்தியம்'' என்று ஒரு பழமொழி உண்டல்லவா? ராஜ வைத்தியமாயிற்றே என்ற கவலை இப்போது வேண்டியதில்லை. ஏழை மக்களுக்குத்தான் ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் இலவசமாகவே ராஜ வைத்தியம் செய்து வருகிறார்களே!

கோடை காலத்தில், கல்லூரி சாத்தப்பட்டதும், மாணவர்கள் 'ஹாய்யாக'த் தங்கள் சொந்த ஊர்களுக்குப் போவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் விடுமுறை நாட்களில் ஊருக்குப் போகாமல் கிராமத்தில் தங்கியிருந்து இருபத்து நாலு மணி நேரமும் வைத்திய சேவை செய்கின்றனர்.

ஒரு மாணவன் வைத்தியக் கல்லூரியில் படிப்பதென்றாலே பிரமாதமாகச் செலவாகிறது. அதன் காரணமாகவே, வைத்தியப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் தங்கள் கல்விக்கு ஆகும் செலவைத் தங்கள் வருங்கால மாமனார்கள் தலையில் கட்டி விடுவது என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் நிலையே இப்படியிருக்கும்பொழுது, இவர்களால் ஏழைக் கிராம மக்களுக்கு எப்படிச் சேவை செய்ய முடியும்? முடியாதுதான்.

பெரிய மருந்து வியாபாரிகளின் மருந்து நன்கொடைகளையும், மற்றும்பல நன்கொடை நிதியையும் கொண்டு கிராம மருத்துவ சேவையைச் செய்து வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சுமார் நூறு நோயாளிகள் சிகிச்சைக்கு வந்தனர். இந்தத் தொகை வரவரப் பெருகிக் கொண்டே வந்து, இப்பொழுது சுமார் தொள்ளாயிரம் பேர்களுக்குக் குறையாமல் வருகின்றனர். இதனால் மருந்துகளுக்காக ஆகும் செலவும் அதிகமாகி யிருக்கிறது. முன்பு, வருஷத்துக்கு ரூபாய் ஐயாயிரம் செலவாயிற்று. பிறகு பத்தாயிரம் ஆயிற்று. இப்பொழுது இருபத்தைந்தாயிரம் ஆகிறது. இந்த நிலையில், சர்க்கார் உதவும் மான்யத்தைக் கொண்டும், கருணையுள்ளம் படைத்த சில தனவான்களின் நன்கொடை நிதியைக் கொண்டும் மேற்படி கிராம மருத்துவ நிலையங்கள் தொடர்ந்து நடப்பது இயலாத காரியம். பெரிய அளவில் நிதி தேவைப்படுகிறது.

நிரந்தரமான நிதி உதவி பெரிய அளவில் கிடைக்கக்கூடிய வழியை ஸ்டான்லி கல்லூரி மாணவர்கள் கண்டுபிடித்து அதைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வருகின்றனர். நான்கு வருஷ காலமாக ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்களால் மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வரும் மருத்துவக் கண் காட்சியையே குறிப்பிடுகிறேன். இந்தக் கண்காட்சி மக்களுக்குப் பலவிதத்திலும் அறிவூட்டுவதோடு கூட, மாணவர்களின் கிராம சேவைக்கும் ஏராளமான நிதி உதவியை வழங்குகிறது.

பெரிய தொழிற்சாலைகளில் ராட்சஸ இயந்திரங்கள் இயங்குவதைப் பார்த்து நாம் வியந்து போகிறோம். அதே போல், நம் உடலுக்குள் இருந்து கொண்டு அற்புதங்களை விளைவிக்கும் மனித உடற் கூறுகளை நேரில் பார்த்து அவற்றின் செயலாற்றும் சக்தியையும் அறிந்து கொள்ள யாருக்கும் ஆவல் இருப்பது இயல்பு. ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் செப்டம்பர் 7-ந் தேதி முதல் 16-ந் தேதி வரையில் அமோகமாக நடத்திய மருத்துவக் கண்காட்சியைக் கண்ணால் கண்டவர்கள் மேற்கூறிய ஆவலைத் தணித்துக் கொண்டிருப்பார்கள். சென்னைக் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் வைத்தியக் கண்காட்சியைத் திறந்து வைத்து, வைத்தியக் கல்லூரி மாணவர்கள் செய்யும் மகத்தான சேவையைப் பெரிதும் பாராட்டினார்.

ஓரறிவு உயிர் முதல் ஆறு அறிவு படைத்த மனிதன் வரையில் எல்லா உயிர் வர்க்கங்களைப் பற்றியும் அக்கு வேறு ஆணி வேறாக அலசிப் பார்த்து விடலாம், இந்த மருத்துவக் கண்காட்சியை நேரில் கண்டவர்கள். ஒவ்வொரு வருஷமும் இக் கண்காட்சி அபரிமிதமாக அபிவிருத்தி அடைந்து வந்திருக்கிறது. உடல் இயக்கம், உடற்கூறு, ரண சிகிச்சை, எலும்பு முறிவு சிகிச்சை, மன ஆராய்ச்சி, மனோ சிகிச்சை முதலிய மக்கட் குலத்துக்கு இன்றியமையாத விஷயங்களை யெல்லாம் கண்காட்சியில் விளக்கி யிருக்கிறார்கள்.

மனித குலத்துக்கு ஒப்பு உயர்வற்ற சேவை செய்யப் புகுந்திருக்கும் ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள், தங்கள் சேவைக்கு வேண்டிய நிதி உதவியைப் பெற மனித உடற் கூறுகளையும் மருத்துவ நெறியையுமே கண்காட்சியில் பயன்படுத்திக் கொண்டிருப்பது பாராட்டுக் குரியது. மாணவர் செய்யும் இந்த மகத்தான சேவை இன்னும் பல கிராமங்களுக்கும் பரவ வேண்டுமென்று விரும்புகிறேன். காந்தி மகாத்மாவின் வாக்கு கிராமந்தோறும் பலிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

முடிவில்லாக் கதை

ரா. வீழிநாதன்

பாளையப்பட்டு என்பது பாண்டிய நாட்டைச் சேர்ந்த பழம் பெரும் சமஸ்தானம். அழகிய கோட்டையுடன் கூடியது. அதன் அறையொன்றில் 'மினுக், மினுக்' என்று விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது இருட்டி ஏறக்குறைய இரண்டு ஜாமம் இருக்கலாம்.

அந்த அறையில் இரண்டே இரண்டு பேர் மட்டும் இருந்தார்கள். ஒரு சாண் உயரமுள்ள மெத்தை விரித்த மஞ்சத்தில் முதியவர் ஒருவர் படுத்திருந்தார். அவர் ஒருபுறமாக ஒருக்களித்து இடது கையைக் கன்னத்தில் முட்டுக் கொடுத்தவாறு படுத்திருந்தார். அவர் அணிந்திருந்த ஆடை ஆபரணங்கள் அவர் சீரும் சிறப்பும் மிகுந்த அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை உணர்த்தின. அவர் அருகில் அழகே உருவான ஒரு வாலிபன் அமர்ந்திருந்தான். அவனும் ஆடம்பரம் மிகுந்த அரசாங்க உடைகள்தான் உடுத்தியிருந்தான்.

அத்தனை நேரமும் அந்த அறையில் நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்தன, வயோதிகரது வாயிலிருந்து வெளி வந்த சொற்கள். அவர் மிகவும் மெதுவாகத்தான் பேசினார். ஆனால் அவரது சொற்களில் மட்டும் ஒரு அழுத்தமும் காம்பீர்யமும் ஒலித்தன.

"அம்மா! குழந்தாய்!"

எதிரே உட்கார்ந்திருந்த வாலிபன் தனது ஆசனத்தை இன்னும் அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டான்.

"என்ன, அப்பா! சொல்லுங்கள்!"

முதியவர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"அம்மா குழந்தாய்! இத்தனை நாட்களும் அரும்பெரும் ரகசியம் ஒன்றை ஒளித்து வைத்திருந்தேன். அதைப் பகிரங்கப் படுத்தும் காலம் வந்து விட்டது. அந்த ரகசியம் இத்தனை நாட்களும் என்னைப் பலவித கலக்கங்களுக்கும் சிந்தனைக்கும் ஆளாக்கியிருந்தது. இன்று அதற்கு ஒரு முடிவு கட்டுவது என்று தீர்மானித்து விட்டேன். ஒரு வேளை உனக்கு நான் சொல்லப் போகும் விஷயம் தெரியாமல் இருக்கலாம். பாண்டிய நாட்டை ஆளும் பராக்கிரம பாண்டியன் உன் அன்னைக்குச் சொந்தத் தமையன். உனக்குச் சொந்தத் தாய் மாமன். எனக்கு மைத்துனன்.

"உன் அன்னையைப் பெற்ற பாட்டனார் சாகும் வரை பராக்கிரம பாண்டியனுக்குப் புத்திர பாக்கியமே ஏற்படவில்லை. உன் தாயாருக்கும் நீ பிறக்கவில்லை. எனவே சாகும் தறுவாயில் உன்னுடைய பாட்டனார் ஒரு நிபந்தனை விதித்தார்.


"எந்தக் காரணத்தினாலாவது பராக்கிரம பாண்டியனுக்கு ஆண் சந்ததி ஏற்படாமல் போய் விட்டால், அவனது சகோதரியான உன் அன்னைக்குப் பிறக்கும் ஆண் சந்ததிக்குப் பாண்டிய நாட்டை ஆளும் உரிமை கிடைக்க வேண்டும். அப்படி இருவருக்குமே ஆண் சந்ததி உண்டாகா விட்டால், அரசாளும் முதல் உரிமை பராக்கிரம பாண்டியனின் மகளைச் சேர்ந்தது. அவள் நடத்தையில் ஏதாவது ஒழுக்கக் குறைவு இருக்குமானால் உன் அன்னைக்குப் பிறக்கும் குழந்தைக்கு, அதாவது என் மகளுக்குச் சிம்மாசனம் கிடைக்க வேண்டும். அப்படி ஆளும் உரிமையைப் பெறும் என் மகள் ஒழுக்கத்திலும் மாசு மறு காணக் கூடாது.

"இந்த நிபந்தனை காரணமாக நானும் உன் அன்னையும் 'எங்களுக்கு ஆண் மகவை அளி ஆண்டவனே!' என்று இரவு பகல் எந்நேரமும் ஆண்டவனிடம் முறையிட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் ஆண் மகவுக்குப் பதிலாக நீதான் பிறந்தாய். நாங்கள் கட்டியிருந்த ஆசைக் கோட்டையில் இடி விழுந்து விட்டது. எங்களுக்கு உண்டான துயரத்தைச் சொல்லி முடியாது. இருந்தாலும் நான் நம்பிக்கையைக் கைவிடவில்லை. என் உள்ளத்தின் ஆழத்தில் மூண்டு விட்டிருந்த நம்பிக்கைக் கொடியைப் பற்றிக் கொண்டே முன்னேறத் தொடங்கினேன்.

"நீ நள்ளிரவு நேரத்தில் பிறந்தாய். சில மருத்துவப் பெண்களையும் பணிப் பெண்களையும் தவிர, வேறு யாருக்குமே நீ பிறந்த விஷயம் தெரியாது. நீ பிறந்த சில மணி நேரத்துக்குள்ளாக அந்த மருத்துவ மாதர்களையும் பணிப் பெண்களையும் தூக்குமரத்தில் தொங்க விட்ட பின்தான் நான் நிம்மதியாக நீண்ட மூச்சு விட்டேன்.

"பாண்டிய நாட்டுப் பாராளும் உரிமையைப் பெற்றே தீருவது என்னும் ஆசையை என்னால் எந்த விதத்திலும் விட்டொழிக்க முடியவில்லை. பொழுது புலருவதற்குள்ளாகவே எனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்னும் சுபச் செய்தி நாடெங்கும் காட்டுத் தீயெனப் பரவியது. பாண்டிய நாட்டுக்கு இளவரசன் பிறந்து விட்டான் என்று மக்கள் மகிழ்ச்சி கொண்டனர். அது வரையில் பராக்கிரம பாண்டியனுக்குப் புத்திர பாக்கியமே ஏற்படாததுதான் மக்களின் மட்டற்ற மகிழ்ச்சிக்குக் காரணம்.

"உன்னைப் பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பை உன் அத்தை ஏற்றுக் கொண்டாள். எனவே, நாங்கள் கவலையற்றவர்களாகி விட்டோம். உனக்குப் பன்னிரண்டாவது வயது நடந்து கொண்டிருந்தபொழுது பராக்கிரம பாண்டியனுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அந்த நற்செய்தி எங்களைப் பொறுத்தவரையில் துயரச்செய்தியாகத்தான் இருந்தது. 'ஹே ஆண்டவனே! அந்தப் பெண்ணை எப்படியாவது உன் இருப்பிடத்துக்கே திருப்பி அழைத்துக் கொண்டு விடக் கூடாதா?' என்று நாங்கள் கடவுளை வேண்டாத நாட்கள் இல்லை. எப்படியும் நமக்கு



ஒரு ஆண் குழந்தை இருக்கிறதே என்ற திருப்தியும் தைரியமும் எங்களுக்கு ஒருபுறம் இருந்தபொழுதிலும் மனம் மட்டும் 'திக்,திக்' என்று அடித்துக் கொள்ளத்தான் செய்தது!''

முதியவர் ஒரு முறை வாலிபனை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, '' தம்பி விக்கிரமா! உனக்கு வயது இருபத்தைந்து ஆகிவிட்டது. உன்னை இன்று வரையில் விக்கிரமன் என்று பெயர் இட்டு அழைக்கிருக்கிறோமே தவிர, ஒரு நாளாவது உன்னைப் பெண் என்று கருதியிருக்கிறோமா ?'' என்றார்.

வாலிபன் வியப்பு மேலிட்டு வாய்திறவாமல் உட்கார்ந்திருந்தான். முதியவர் மேலும் தொடர்ந்து கூறினார் :

'' விக்கிரமா ! உன் மாமன் பராக்கிரமன் இன்று உன்னைத் தன்னிடம் வருமாறு அழைத்திருக்கிறான். அவனுக்கு வயது அதிகமாகி விட்டது. பாண்டிய ராஜ்யத்துக்கு வாரிசான நீ அரசாங்க அலுவல்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவன் சுமையைக் குறைக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். எனவே, நீ புறப்படுவதற்கான சகல ஏற்பாடுகளையும் நான் செய்து விட்டேன். பொழுது புலருவதற்கு முன்பாகவே ராஜதானியை நோக்கி நீ உன் பயணத்தைத் தொடங்கிவிட வேண்டும்.

''ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நீ நன்றாக நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் மறந்து விடக்கூடாது. தொன்று தொட்டகாலந் தொட்டு நமது பழம் பெரும் பாண்டிய நாட்டில் ஒரு சட்டம் அமுலில் இருந்து வருகிறது. பட்டாபிஷேகம் ஆவதற்கு முன்பாகப் பெண்ணாகப் பிறந்தவள் அரியாசனத்தில் அமரக்கூடாது. இந்தச் சட்டத்தை யாராவது மீறி நடந்தால் அவர்களுக்கு ஒரே தண்டனைதான். அந்தத் தண்டனை என்ன தெரியுமா ? மரண தண்டனை ! அதனால் நீ எப்பொழுதும் மந்திரிக்குள்ள ஆசனத்தில் அமர்ந்தேதான் தீர்ப்பும் கூறிவரவேண்டும்.''

வயோதிகர் வார்த்தையை முடிக்கவில்லை. '' அப்பா !'' என்ற சோகக் குரல் வாலிபனின் வாயிலிருந்து வெளி வந்தது. '' இந்த மன்னனைக்காகவா நீங்கள் ,என்னுடைய, வாழ்க்கையையே ஒரு பொய்க் கதையாகத் திரித்துக் கூற முற்பட்டீர்கள் ? என்னால் ஈடு கொடுக்க முடியாது. உங்கள் உத்தரவுக்கு நான் அடிபணியத் தயாராயில்லை. எனக்குக் கனவிலும் நினைத்து அறியாத ஒரு பெண்ணின் உரிமையை நான் எதற்காகப் பிடுங்கிக் கொள்ள வேண்டும் ?''

'' முட்டாள் !''

வயோதிகரின் குரலில் தொனித்த கடுமை வாலிபனை ஸ்தம்பிக்கச் செய்து விட்டது.

'' இதற்காகவா நான் உன்னைப் பேணி வளர்த்துப் பெரியவனாக்கினேன் ? காலஞ்சென்ற உன் தாய்வழிப் பாட்டனின் மீது ஆணை வைத்துச் சொல்கிறேன். நீ நடந்து கொள்ளும் விதம் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்க வில்லை. போ ! போய் நல்ல முறையில் புறப்படத் தயாராயிரு. உன் தந்தையின் சொல்லுக்கு வேறு சொல்லாதே ! உனக்குத் துணை வரப் போகிறவர்கள் தயாராயிருக்கிறார்கள். உம் புறப்படு !'' என்று பயங்கரமாக உறுமினார்.

விக்கிரமன் வாய் திறக்க வில்லை. தலை குனிந்தவண்ணம் அந்த அறையை விட்டு வேகமாக வெளியேறினான்.

விக்கிரமன் பாண்டிய ராஜதானிக்கு வந்து எத்தனையோ மாதங்கள் ஓடிவிட்டன. அவன் அங்கே வந்து சேர்ந்த சில மாதங்களுக்குள்ளேயே தனக்கு ஒரு நல்ல மதிப்பையும் ஸ்தானத்தையும் தேடிக் கொண்டு விட்

டான். இயல்பான தன் அழகு, வினய சுபாவம் ஆகியவற்றின் காரணமாக வந்தவுடனேயே விக்கிரமன் பராக்கிரம பாண்டியனின் பிரியத்துக்குப் பாத்திரமாகி விட்டான். மக்களும் அவனது நியாயம் வழங்கும் முறையைக் கண்டு அவனை மனமார வாழ்த்தினர்; புகழ்ந்தனர். அரசாங்கத்தை அழகுற நிர்வகிக்கும் அவனது அபார திறமையைக் கண்ணுற்ற பராக்கிரம பாண்டிய மன்னர் ராஜ்யபாரம் முழுவதையும் விக்கிரமனிடமே ஒப்படைத்து விட்டார். விக்கிரமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகாததால், அவன் அமாத்தியனின் ஆசனத்தில் அமர்ந்தே அரசாங்க அலுவல்களைக் கவனித்து வந்தான்.

இத்தனை சுகபோகங்களும் மதிப்பு மரியாதைகளும் கிடைத்திருந்த பொழுதிலும் விக்கிரமனுக்குத் தன் வாழ்க்கையில் சுகம் கிட்டியதாகவே தோன்றவில்லை. காரணம், அவன் மாமன் மகள் மரகதவல்லி அவனிடம் அபாரப் பிரேமை கொண்டு விட்டாள். அது மட்டுமா? அவனோடு நெருங்கிப் பழகித் தன் அன்பை வளர்க்கவும் பெருக்கவும் விரும்பினாள்.

தர்ம சங்கடமான நிலைமையில் சிக்கிக் கொண்டு விடக்கூடாதே என்பதற்காக அவன் அவளை நெருங்கவொட்டாமல் தடுத்திருக்கவே முயன்றான். அவன் விலகிச் செல்லச் செல்ல, தன்னை அலட்சியப்படுத்தப் படுத்த மரகதவல்லிக்கு அவன் மீது உண்டான ஆசையும் அன்பும் வளர்ந்ததே யொழியச் சிறிதும் குறையவில்லை.

அவளது ஆசை வளர்வதைக் காட்டிலும், பன்மடங்கு அதிகமாக அவன் கவலை வளரலாயிற்று. மரகத வல்லியின் மனத்தை மன்னர் புரிந்து கொண்டு விட்டார் என்பதை ஜாடைமாடையாக அறிந்ததும், விக்கிரமனுக்கு ஏற்பட்ட வேதனையைச் சொல்லி முடியாது. மன்னருக்கோ ஆனந்தம் நிலை கொள்ளவில்லை. நற்பாத்திரமான விக்கிரமனின் கையில் தமது மகளை ஒப்படைத்து விட்டுக் கவலையற்றிருக்கத் தீர்மானித்து விட்டார். அரசரின் அபிப்பிராயம் விக்கிரமனின் காதுகளுக்கும் எட்டியது.

எட்டடுக்கு மாளிகையிலிருந்து தலை குப்புறத் தள்ளப்பட்டவனது உணர்ச்சியல் அவன் பதறிப் போனான்.

அன்று சோதனை போல் நிகழ்ந்த நிகழ்ச்சி அவனை மெய் சிலிர்க்கும்படி செய்து விட்டது.



மன்னர் பராக்கிரம பாண்டியரது மாளிகைக்குச் சென்று அவரைச் சந்தித்து விட்டு விக்கிரமன் திரும்பிக் கொண்டிருந்தான். அரசகுமாரி அவனை வழியில் மடக்கி விட்டாள். மடக்கியதோடு மட்டுமா? மனத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த உணர்ச்சிகளை அப்படியே கொட்டியும் விட்டாள். ''என் அன்பே!'' என்று அவள் அழைத்தபொழுதே அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்னைக் கண்டால் ஏன் இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் போகிறீர்கள்? ஓடி ஓடி ஒளிகிறீர்கள்? நான் உங்களுக்கு என்ன தீங்கு இழைத்து விட்டேன்? உங்கள் நீதியையும் நியாயத்தையும் ஊரெல்லாம் வானளாவப் புகழ்கிறதே! ஆனால் நான் கேட்கும் காதற்பிச்சையை மட்டும் இப்படி உதறித் தள்ளுகிறீர்களே, இது எந்த ஊர் நியாயம் என்று கேட்கிறேன்? என் ஆருயிரே! உங்களைப் பிரிந்து என்னால் ஒருகணம்கூட வாழ முடியாது. உங்களை நான் என் உயிரைக் காட்டிலும் மேலாக நேசிக்கிறேன்!''

மரகதவல்லியின் பேச்சைக் கேட்ட விக்கிரமன் வாயடைத்துப் போய் நின்றான். தன்னிடம் கை ஏந்திக் காதற் பிச்சை கேட்கும் அரசகுமாரிக்கு என்ன பதில் சொல்வது என்று அவனுக்கு விளங்கவில்லை. விக்கிரமன் மௌனமே உருவாக நிற்பதைக் கண்ட மரகதவல்லி, அவன் தன் காதலுக்குச் சம்மதம் தெரிவித்து விட்டதாகவே எண்ணினாள். மௌனம் சம்மத லக்ஷணம் என்பது ஒரு நியாயம் அல்லவா? அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவன் கரம் பற்றப் போனாள்.

விக்கிரமனின் வாயிலிருந்து தன்னையும் மீறி ஒரு கிறீச்சிட்ட குரல் வந்தது. முகம் பேய் அறைந்தாற் போல் வெளிறி விட்டது. உடல் அரச இலையைப் போல் ஆடத் தொடங்கியது. குரல் தழு தழுக்க, ''நீ என்னிடம் என்ன வேண்டுகிறாயோ, அது கிடைப்பது சிரம சாத்தியமான காரியம். இது உனக்குத் தெரிந்திருந்தால் இப்படிக் கேட்க மாட்டாய்!'' என்றான்.

பாண்டிய நாட்டை ஆளும் பொறுப்பை விக்கிரமன் ஏற்று எத்தனையோ மாதங்கள் ஆகி விட்டன. நாட்கள் செல்லச் செல்ல, அவன் அந்தக் காரியத்தில் அதிகத் திறமை வாய்ந்தவனாகவே ஆகிக் கொண்டிருந்தான்.

விக்கிரமனும் அரசகுமாரி மரகதவல்லியும் முந்திய சந்திப்புக்குப்பின் அதிகமாகச் சந்திப்பதில்லை; வார்த்தையாடுவதும் இல்லை.

பராக்கிரம பாண்டிய மன்னர் அதைக் கவனிக்கத் தவறவில்லை. என்றாலும் அதற்கு அதிக மதிப்போ மகத்துவமோ கொடுக்கவில்லை. வேலை மிகுதி காரணமாக விக்கிரமன் அரசகுமாரியோடு அதிகம் பேசாமல் இருக்கலாம் என்றே எண்ணினார். ஆனால் அரசகுமாரியின் முகத்தில் வேதனைக் கோடு தோன்றி நாளுக்குநாள் ஆழப் பதியலாயிற்று.

இம்மாதிரி சந்தர்ப்பத்தில் தான் குடி மக்களிடையே அரண்மனையைப் பற்றிய ஒரு வதந்தி உலாவத் தொடங்கியது. சில நாட்கள் வரையில் குடி மக்கள் ஒருவரையொருவர் காதைக் கடித்துக் கொண்டனர்.

நாளடைவில் பரம ரகசியமா யிருந்த அது நாலு பேர்கள் அறியும் பகிரங்க ரகசியமாகி விட்டது. அப்புறம் கேட்பானேன்? அது, நாடு அறிந்த, நகரம் அறிந்த விஷயமாகவே உலவத் தொடங்கியது; அரச குமாரிக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்னும் செய்தி மக்களின் நாவிலே உலாவத் தொடங்கி விட்டது.

பாளையப்பட்டு சமஸ்தானதிபதியான முதியவர் காதுகளிலும் இச்செய்தி தேனாகப் பாய்ந்தது. அவர் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார். தமது கிரீடத்தைத் தூக்கி வானத்தில் போட்டுப் பிடித்தார். 'விக்கிரம மன்னர் வாழ்க! விக்கிரம மன்னர் வாழ்க!'' என்று தமக்குத்தாமே கோஷம் போட்டுக் கொண்டார். அவரது அந்தச் செய்கைகள் வாலிபம் அவருக்கு மீண்டும் திரும்பி விட்டதோ என்றே எண்ணச் செய்தன.

''இனி என் விக்கிரமன்தான் மன்னன். அவனை மன்னர் பதவியிலிருந்து அகற்ற எந்தச் சக்தியாலும் இனி ஆகாது. மார்த்தாண்டன் மகா போக்கிரிதான். இருந்தாலும் பரம கெட்டிக்காரன். நான் எந்தக் காரியத்துக்காக அவனை நியமித்தேனோ, அதில் நூற்றுக்கு நூறு அவன் வெற்றி கண்டான்! நமக்கு நன்மை செய்த அவனுக்குக் கனகாபிஷேகமே செய்து வைத்தாலும் தகும். ஆனால்....ஆனால்.... அவனை இந்த உலகில் உயிருடன் நடமாட விட்டு விடக் கூடாது. அப்படிச் செய்தால் அதுவே நமக்கு ஒரு ஆபத்தாக முடியலாம் அல்லவா?'' என்றும் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

விரைவிலேயே அரசகுமாரியின் வழக்கு நீதிஸ்தலம் ஏறியது. நீதிமன்றத்தில் அன்று எள் போட இடம் இல்லை. எல்லோரும் அரசகுமாரியின் தலைவிதியை அறிந்துகொள்ள ஆவலா யிருந்தனர்.

பிராயம் முதிர்ந்த பராக்கிரம பாண்டியர், மரகதவல்லி தமது குமாரியாயிற்றே என்பதற்காக எந்த விஷயத்திலும் எந்தவிதமான சலுகையும் காட்ட விரும்பவில்லை. இது குறித்துக் கடுமையான உத்தரவே கூடப் பிறப்பித்து விட்டார்.


இந்த வழக்கு விசாரணை தன்னிடம் வரக் கூடாது என்பதற்காக விக்கிரமன் எவ்வளவோ பாடுபட்டான். அரசர் அவன் வேண்டுகோளுக்குக் கொஞ்சமும் இடம் கொடுக்கவில்லை. அவனேதான் நீதி வழங்க வேண்டும் என்று கூறிவிட்டார்.

நீதி மன்றத்தின் பூர்வாங்க விசாரணைகளெல்லாம் நடந்து முடிந்தபின், பிரதம நீதிபதி தமது ஆசனத்திலிருந்து எழுந்து, ''கைதியே! எழுந்து கூண்டில் நில்!'' என்று உத்தர விட்டார்.

துயரமே உருவாகி நின்ற அரசகுமாரி மக்களின் மாபெரும் கூட்டத்துக்கிடையே எழுந்து வந்து கூண்டில் நின்றாள்.

நீதிபதி தொடர்ந்தார்:

''அரசகுமாரி மரகதவல்லி! கன்னிப் பெண்ணாயிருக்கும்பொழுதே, நீ ஒரு குழந்தைக்குத் தாயாராகிவிட்டாய் என்று உன் மீது சாட்டப்பட்ட குற்றம் உண்மையானது என்று நிருபணமாகிவிட்டது. நமது நாட்டின் பரம புனிதமான சட்டத்தின் பிரகாரம் இது மாபெரும் குற்றம். இந்தக் குற்றத்துக்குக்



ஸ்ரீ என். ராமகிருஷ்ண ஐயர் எம்.எல்.ஏ.வின் குமாரி சௌ. லதாங்கிக்கும் சென்னை ரிடயர்ட் இன்ஜினியர் ஸ்ரீ டி.வி. சேஷய்யர் குமாரர் ஸ்ரீ சங்கரனுக்கும் ஆதம்பாக்கத்தில் 19-8-56-ல் திருமணம் சிறப்பாக நடந்தது. கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா, முதல்மந்திரி ஸ்ரீ காமராஜ், மற்ற மந்திரிகள், மற்றும் பல பிரமுகர்கள் முதலியோர் திருமணத்துக்கு வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

தகுந்த தண்டனை மரண தண்டனைதான். எனவே, எங்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உகந்த விக்கிரம பாண்டியர் வாய் மொழியாக உனக்குக் கிடைக்கப்போகும் தண்டனையைக் கேட்கத் தயாராயிரு'' என்றார்.

விக்கிரமன் எழுந்து நின்றான். உள்ளத்துப் புயலை ஒருவாறு அடக்கிக் கொண்டு அவன் தன் தீர்ப்பைப் படிக்கத் தொடங்கினான்.

இடையே பிரதம நீதிபதி குறுக்கிட்டு விட்டார். ''விக்கிரம மன்னரே! இவ்விடத்தில் நின்றுகொண்டு தாங்கள் தீர்ப்பைப் படிக்கக்கூடாது. இந்த வழக்கு அரச குடும்பத்துடன் சம்பந்தப் பட்டிருப்பதால், அரசரின் அரியாசனத்தில் அமர்ந்துதான் தாங்கள் தீர்ப்புக் கூற வேண்டும்!'' என்றார்.

விக்கிரமனின் உடல் பறந்தது: உள்ளம் பறந்தது. பரபரப்புத் தாளாமல் பிரமை பிடித்தவன்போல் ஆகிவிட்டான். இதுகாறும் அவன் ராஜ்யாபிஷேகம் செய்து கொள்ளவில்லையே! எப்படி அரியாசனம் ஏறுவது?

சிற்றரசர்களின் கூட்டத்தில் இந்த வழக்கின் நடவடிக்கையைக் கவனிக்க வந்திருந்த விக்கிரமனின் வயது முதிர்ந்த தந்தையின் வஜ்ரம் போன்ற தேகமே வெடவெடத்து விட்டது.

பட்டாபிஷேகம் நடக்காமல் ஒரு பெண் அரியாசனம் ஏறினால் அவளுக்குக் கிடைப்பது மரண தண்டனையல்லவா?

விக்கிரமனுக்கு அதைப்பற்றி யெல்லாம் யோசிக்க எங்கே பொழுது இருந்தது?

கூடியிருந்த அத்தனை மக்களது பார்வையும் அவன்மீதே பதிந்திருந்தது. அவன் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அரியாசனத்தில் போய் அமர்ந்தான். பிறகு வழக்கின் தீர்ப்பைப் படிக்கலானான்.

''கைதியே! எசமானர்களுக்கு எசமானரான எங்கள் பராக்கிரம பாண்டியரின் சார்பில் நான் என் கடமையை இங்கே நிறைவேற்ற முன் வந்திருக்கிறேன். நான் சொல்வதைக் கவனித்துக் கேள். நம் நாட்டின் பின்டைய காலத்துப் பரிசுத்தமான சட்டத்தின் பிரகாரம் உன் பாவத்துக்கேற்ற தண்டனை மரண தண்டனைதான். ஆனால் ஒன்று. இத்தகைய தீய செயலில் இறங்க உனக்குத் துணை புரிந்தவனின் பெயரை நீ சொல்லி விட்டால், மரண தண்டனையிலிருந்து உனக்கு விலக்கு அளிக்கப்படும். நீ விரும்பினால், இந்தத் தருணத்தைப் பயன் படுத்திக் கொண்டு உன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம். உனக்குப் பிறந்திருக்கும் குழந்தையின் தகப்பனார் யார் என்பதை மட்டும் நீ சொல்லி விட்டால் போதும்! நீ தண்டனையிலிருந்து விடுதலை பெற்று விடுவாய்!''

அரசகுமாரி மெதுவாகத் திரும்பினாள். அவளுடைய கண்களில் வெறுப்பு தாண்டவமாடிக் கொண்டிருந்தது. தன் ஆள்காட்டி விரலால் விக்கிரமனைச் சுட்டிக் காட்டி, ''விக்கிரமா! நீ நீதிபதி. இப்பொழுதோ மதிப்புக்கு உகந்த ஸ்தானத்தில் அமர்ந்திருக்கிறாய்! என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்க உனக்கு வெட்கமாயில்லை? 'என் குழந்தைக்குத் தகப்பன் யார்?' என்பதை நான் இந்தச் சபையில் என் வாய்விட்டு வேறு கூறவேண்டுமா? உன் பாவத்தை ஒப்புக்கொள்ள உனக்குத் துணிவு இல்லையென்றால், சொல்கிறேன் கேள்! என் குழந்தைக்குத் தகப்பன் நீதான்!'' என்றாள்.

விக்கிரமனுக்குத் தலை தட்டாமாலை சுற்றியது. அரச சபையில் கூடியிருந்த அத்தனை மக்களும் மௌனப் பதுமையாகத் திகைத்து உட்கார்ந்திருந்தனர்.

விக்கிரமனின் கண்களுக்கெதிரே சாக்ஷாத் காலதேவனே களிக்கூத்து ஆடிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

அவன்மேல் சுமத்தப்பட்டிருக்கும் அந்தக் குற்றத்தைத் தவறானது என்று நிரூபிக்க வேண்டுமானால், அவன் 'தான் உண்மையில் ஒரு ஆண் மகன் அல்ல; பெண்!' என்னும் ரகசியத்தைப் பகிரங்கப்படுத்தி யாகவேண்டும். அப்படிப் பகிரங்கப்படுத்தினால்....? பட்டாபிஷேகம் ஆவதற்கு முன்னால் அரியாசனம் ஏறிய மாபெரும் குற்றத்தைச் செய்தவளாகி விடுவான். அதற்கான தண்டனை மரண தண்டனை தான்.

அதற்குமேல் அவளால் யோசிக்க முடியவில்லை. அவள் உடல் முழுதும் வியர்த்து விறுவிறுத்து விட்டது. உடல், உள்ளம், ஆவி அனைத்துமே பறந்தன. அடுத்த கணம் மூர்ச்சித்துத் தரையில் தடாரென்று விழுந்து விட்டான். அதே சமயத்தில் சிற்றரசர்கள் வீற்றிருந்த இடத்திலும் ஏதோ ஒன்று விழும் சத்தம் கேட்டது. எல்லோரும் ஏக காலத்தில் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். விக்கிரமனின் தந்தையும் பானையப்பட்டு சமஸ்தானத்தின் சிற்றரசருமான முதியவர் தம் நினைவு இழந்து பூமியில் உருண்டார்.


* * *

அதற்குப் பிறகு என்ன ஆயிற்று என்பதற்குச் சரித்திரத்தில் ஆதாரம் இல்லை.


ஹிமாலயா
புக்கே
அளிக்கும் மிகுந்த
புதுமைப் பொலிவை
—நீங்கள்
நாள் முழுதும்
உணரலாம்!
Himalaya
Bouquet
ஹிமாலயா
புக்கே
டாய்லெட், டால்கம்
பவுடர்கள்

கணக்கும் கல்யாணமும்

தாபன்



பூங்குளம் போஸ்ட்மாஸ்டர் சிங்கார வேலுவுக்குக் கணக்கு முடிப்பதில் ஒரு சிக்கல் ஏற்பட்டு மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தது. வாசலில் மெயில் மோட்டாரிலிருந்து தபால் பைகளைத் தபால்காரப் பொன்னுசாமி கொண்டு வந்து போட்டான். ஜன்னலில் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. மணியார்டர் பாரங்களுடன் பணத்தை நீட்டும் கரங்களும். ரிஜிஸ்தர் பார்சல்களை ஏந்தி நிற்கும் கைகளும் 'இரண்டு கூடு, மூன்று தலை' என்றவை போன்ற குரல்களும், தந்தி இயந்திரத்தின் கிறுவெறு சத்தமும் அவனது பரபரப்பை அதிகப்படுத்தின. கணக்கிலே ஒன்பது ரூபாய் பதின்மூன்றணா அதிகம்.

அதாவது கையிருப்புத் தொகையில் ரூபாய் ஒன்பது, அணா பதின்மூன்று அதிகமாயிருந்தன. திரும்பத் திரும்பப் பெட்டியிலிருந்த பணத்தை எண்ணினான். கார்டு, கவர், ஸ்டாம்புகள் அனைத்தையும் பல தடவைகள் கூட்டிப் பார்த்தான். பயன் இல்லை. சிங்காரவேலுவுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

பூங்குளம் ஒரு விசித்திரமான ஊர். அந்த ஊர் போஸ்ட்மாஸ்டர் பிரமணியகமுதலியார் பதினைந்து நாட்கள் ரஜா எடுத்திருந்ததால் தான் இங்கு விஜயம்செய்து 'ஆக்டிங் போஸ்ட் மாஸ்டரா'கப் பணிபுரியும் பாக்கியம் கிடைத்தது சிங்கார வேலுவுக்கு. இப்போது அவன் ஆபீஸ் முடிவடைந்து விட்டது. இனி மாலை இரண்டரை மணிக்குத்தான் ஆபீஸ். கதவுகளைச் சாத்தினான். கட்டிலில் வந்து படுத்தான். அவனுக்குத் தூக்கம் வரவில்லை. எப்படி வரும்? கணக்கில் ஒன்பது ரூபாய் பதின்மூன்றணா உதைக்கிறதே! நிதானமாக உட்கார்ந்து நேற்றைய நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக மனக்கண்முன் ஓடவிட்டான்.

அதிகாலையில் தபால்காரப் பொன்னுசாமியுடன் சென்று பூங்குளத்தில் குளித்தான். ஓர் அற்புதமான குளம். தாமரை மலர்கள் நிறைந்த அழகிய தடாகத்தில் அமைப்பான படிக்கட்டுகள். நல்ல தெளிந்த நீர். வாழ்நாள் முழுதும் குழாய் ஜலத்திலேயே குளித்த சிங்காரவேலுவுக்குக் குளத்தில் மூழ்கிக் குளிப்பதில் அலாதி ஆனந்தம் ஏற்பட்டது. ஆனால் அவனுக்கு நீந்தத் தெரியாது. முழங்காலளவு ஆழத்தில் நின்று கொண்டே கொம்மாளம் போட்டுக் குளித்த சிங்காரவேலுவை நடுக் குளத்தில் நல்ல ஆழத்திலே நீந்திச் சென்ற பொன்னுசாமி, 'இங்கே சும்மா வாருங்க சார்' என்று அழைத்தான்.

"போதுமையா போதும். நான் எங்க அம்மாவுக்கு ஒரே ஆண்பிள்ளை. நான் உயிரோடு ஊர் திரும்பிப் போக வேண்டும். அப்பனே. அதனால் இங்கேயே நின்று ஸ்நானம் செய்கிறேன்" என்றான் சிங்காரவேலு.

கலகலவென்ற சிரிப்பொலி கேட்டுப் பின்புறம் திரும்பிப் பார்த்தான் சிங்காரவேலு. நாலைந்து பெண்கள் படிக்கட்டுகளில் நின்று அவனையே கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிங்காரவேலுவுக்கு மிகவும் அவ




மானமாகப் போய் விட்டது. ஒருவரையும் பாராமல் தலைகவிழ்ந்தவாறே கரையேறினான்.

''ஏன், பொன்னுசாமி! இவர்கள் எல்லாம் பெண்கள்தானா? அல்லது தேவலோகத்தி லிருந்து நீராடுவதற்கென்றே இந்தத் தடா கத்துக்கு வந்திருக்கும் தேவ கன்னிகை களா?'' என்றான் சிங்காரவேலு.

''எல்லாரும் இந்தப் பூங்குளத்துப் பெண் கள்தான் சார். அதோ முன்னால் நீந்திச் செல்கிறாளே அவள்தான் இவர்களுக்கெல் லாம் தலைவி. பண்ணையார் மகள்'' என்றான் தபால்காரப் பொன்னுசாமி.

தூரத்தில் நீலநிறத் தடாகத்தின் நடுவே செந்தாமரை மலர்ந்திருப்பது போல் அப் போது அந்தப் பெண்ணின் முகம் மட்டும் தண்ணீருக்கு வெளியே தெரிந்தது.

''வாருங்க வாருங்க. ஆபீஸுக்கு நேரமாகி விட்டது'' என்றா பொன்னுசாமி துரிதப் படுத்தவே சிங்காரவேலு விரைவாக நடந் தான் ஆபீஸை நோக்கி. ஓட்டலுக்குச்சென்று காப்பி சாப்பிட்டுவிட்டு, உடை மாற்றிக் கொண்டு ஆபீஸைத் திறந்து நாற்காலியில் அமரும்போது மணி எட்டரை ஆகியிருந்தது. எட்டுமணிக்கே ஆபீஸ் திறக்கப் பட்டிருக்க வேண்டும். நல்லவேளை அதிகக் கூட்டமில்லை. ரிக்கார்டுகளில் சில கடிதங்களைப் பதிந்து கொண்டிருந்த சிங்காரவேலு, மருக்கொழுந்



தின் இனிய மணம் குபீரென்று ஜன்னல் வழியாக வந்து தாக் கவே, வெளியே பார்த்தான். என்ன ஆச்சரியம்! காலையில் அவன் குளிக்கும் போது அவனைக் கேலிசெய்த பெண் களில் ஒருத்திதான் அவள். நடுத் தடா கத்தில்செந்தாமரை இதழ் அவிழ்ந்து காட்சி தருவது போல நீந்தி வந்த தேவ கன்னிகைதான. ஆனால் இப்போது நவநாக ரிகமான உடையுடன் காட்சியளித்தாள்.

''குட்மார்னிங்! ரொம்ப டிலே பண்ணி உங்களை வெயிட் பண்ண வைச்சிட்டேன். வெரி சாரி'' என்று விளம்பினான் சிங்கார வேலு. அவன் நெஞ்சில் ஏற்பட்ட குழப்பத் தில் வார்த்தைகள் தனித் தமிழிலோ அல்லது தனி ஆங்கிலத்திலோ வராமல் மணிப் பிர வாள நடையிலே வரத் தொடங்கியது.

''பரவாயில்லே. இரண்டு 'இன்லண்டு லெட்டர்' வேண்டும்'' என்று இனிய வீணையின் நாதத்தில் கேட்டாள் அந்நங்கை.

கைப் பெட்டியைத் திறந்து ஸ்டாம்பு புத்த கத்தை எடுத்து இரண்டு

'இன்லண்டு லெட்டர்'களை எடுத்து நீட்டி, "பேனா வேண்டுமா எழுதுவதற்கு? சாதாரணமாய் எழுதலாம். மெயில் கட்டுவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. இங்கே வைத்து எழுத ஏதாவது புத்தகம் வேண்டுமா?" என்று உபசரிக்கலானான்.

"ரொம்ப வந்தனம்" என்று சொல்லிக் கொண்டே மறைந்து விட்டாள் அவள். அவளைப் பின்தொடர்ந்தன சிங்காரவேலுவின் கண்கள். திடீரென்று ஒரு நினைவு அவன் மூளையில் தட்டுப்பட்டது. காலையில் அந்தப் பெண்ணிடம் இரண்டு 'இன்லண்டு லெட்டரு'க்கும் காசு வாங்கினேனா என்ற சந்தேகம் சுரீர் என்று தைத்தது. அவள் அழகை ரசித்துக் கொண்டிருக்கும் போதுதான் மணியார்டர், ரிஜிஸ்தர் என்று வந்து நச்சரித்தனர். ஒரே குழப்பம். "போச்சு மூன்றணா!"—குழப்பத்தில் கணக்கும் அவனுக்குக் குழம்பி விட்டது.

சிங்காரவேலு சற்றுக் கண்ணயர்ந்தான். வாசற் கதவு 'தடால் தடால்' என்று தட்டும் சத்தம் கேட்டது.

"ஐயா, யாரையா உள்ளே? கதவைத் திறங்க" என்ற முரட்டுச் சப்தம். கதவு உடைந்துவிடுவது போன்ற தட்டல். எழுந்து கதவைத் திறந்தான் சிங்காரவேலு.

பெரிய முண்டாசுக் கட்டும் இருதா மீசையும் கையிலே தடிக்கம்பும் கொண்ட ஒரு முரடன் நின்று கொண்டிருந்தான்.

"என்னப்பா வேணும் உனக்கு?" என்று கேட்டான் சிங்காரவேலு.

"ஒண்ணுமில்லே, இந்த நூறு ரூபாய் நோட்டுக்குச் சில்லறை வாங்கியாரச் சொன்னாங்க பண்ணையிலே."

"எங்களிடம் சில்லறை இல்லே. அதோடு ஆபீஸ் அடைத்திருக்கிற நேரம் இது."

"இதோ இப்போதுதான் திறந்துகிட்டு நிக்கிறீங்களே. கொடுங்க."

"ஏய்! ஒண்ணும் கிடையாது. நீ போகலாம்" என்றான் சிங்காரவேலு.

"கொழந்தை உங்ககிட்டே இரண்டு தலை வாங்கிக்கிட்டுப் போச்சாமில்லே காலை நேரத்திலே. தலை போகப் பாக்கியை வாங்கியாரச் சொல்லுச்சு...." என்றான் அவன்.

"தலையும் இல்லே, உடலும் இல்லே. போ....போ...." என்று கதவைச் சாத்தினான் சிங்காரவேலு.

"என்னையா சுத்த மோசமாயிருக்கிறீங்க? பண்ணையிலே கோவப்படுவாங்க, கொடுங்க" என்றான் இருதா மீசைக்காரன்.

சிங்கார வேலுவுக்கு அவன் பேச்சு கொஞ்சமும் பிடிக்கவில்லை, பட்டினமாயிருந்தால் அதற்குள் அவனைப் போலீஸில் ஒப்படைத்திருப்பான். ஆனால் பட்டிக்காட்டில் தன்னந்தனியே வேறென்ன செய்ய முடியும்? "போடா தடியா" என்று கதவைச் சாத்திக் கொண்டு விட்டான் சிங்காரவேலு. வெளியே இருதா மீசைக்காரன் உறுமிக் கொண்டும் தடிக் கம்பைத் தட்டிக் கொண்டும் ஆர்ப்பாட்டம் செய்து விட்டு ஒழிந்தான்.

"இனிமேல் ஒரு நிமிஷம் கூட இந்த ஊரில் வேலை பார்க்கக் கூடாது. இன்றைக்கே, 'சிக்

ரிப்போர்ட்' செய்து விட்டு ஊரைப் பார்த்து ஓடிவிட வேண்டும்'' என்று எண்ணி அருலுன்ன டாக்டர் வீட்டுக்கு வந்தான். ''சார், நாலு நாளாக வயிற்றுவலி. உடனே ரஜா வேண்டும். தாங்கள் ஒரு மாத ரஜாவுக்குச் சிபாரிசு செய்து சர்டிபிகேட் தர வேண்டும். இந்தாருங்கள் பீஸ்'' என்று ஐந்து ரூபாயை நீட்டினான். டாக்டர் கோவிந்தன் அவனுக்கு மருந்தும் எழுதிக் கொடுத்து உடனடியாக லீவுக்குச் சிபாரிசு செய்து சர்டிபிகேட்டும் தந்தார். அவசரமாக ஆபீஸ் திரும்பினான். சூப்பிரண்டுக்கு லீவுக் கடிதம் எழுதி அதோடு டாக்டர் சர்டிபிகேட்டையும் தைத்துக்கவரில் இட்டான். அன்றையத்தபாலில் போய்விட்ட தென்றால் மறு நாள் பதில் ஆள் வந்து விடும். 'எவனாவது இந்தப் பூங்குளம் தபாலாபீஸைக் கட்டியழட்டும். நமக்கு வேண்டாம்' என்று அந்தக் கடிதத்தைத் தபாலில் போட்டுவிட்டுக் கடிகாரத்தைப் பார்த்தான். இன்னும் ஒன்றரை மணி நேரம் இருந்தது. இரண்டரை மணி ஆவதற்கு. மீண்டும் கட்டிலில் வந்து அவன் படுத்துக் கொண்டான்.

ஆபீஸ் கதவு மறுபடியும் தட்டப்பட்டது. 'இதென்னடா கஷ்டம். இந்த ஊரில் யாருக்குமே ஆபீஸ் நேரம் தெரியாதா?'' என்று எரிச்சல் பட்டுக் கொண்டு எழுந்தான். ''ஹலோ, சிங்காரம்!'' என்ற பழக்கப்பட்ட குரல் கேட்டது. அவசரமாக வந்து கதவைத் திறந்தான் சிங்காரவேலு. வாசலில் சிரித்துக் கொண்டு நின்றான் சிங்காரவேலுவின் பழைய கலாசாலை நண்பன் ராஜரத்தினம்.

''ராஜா! உனக்கு இதுவா சொந்த ஊர்? மறந்தே போய்விட்டேன். நீ என்ன செய்கிறாய்? உன் வீடு எங்கே இருக்கிறது?'' என்று ஆவலுடன் கேட்டான் சிங்காரவேலு.

''நான் உன்னைப்போல மாட்சிமை பொருந்திய மத்திய சர்க்காரின் கண் போன்ற அஞ்சல் அலுவலகத்தின் அதிபதியாகப் பணி புரியும் பாக்கியம் பெறவில்லை. உன் போன்று வாரத்துக்கு ஓர் ஊராக ஜில்லா முழுதும் ஊர்வலம் வரும் பெருமை பெறவும் இல்லை. என்னப்பா இது? 'திருச்செந்தூரில் வேலை பார்க்கிறாய்' என்றாள் உன் தாயார். அங்கு சென்றேன். நான்குநேரிக்கு மாற்றிப் போய்விட்டதாகச் சொன்னார்கள். நான்குநேரியில் நீ தென்காசிக்குப் போய்விட்டதாகக் கேள்வி. தென்காசியிலிருந்து கோவில்பட்டி; கோவில்பட்டியிலிருந்து கழுகுமலை. அங்கிருந்து இங்கே என் சொந்த ஊருக்கே வந்து பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வேடிக்கையல்லவா?'' என்றான் ராஜரத்தினம்.

''ராஜா! என்ன விசேஷம்? நீ என்னை ஏன் இவ்வளவு சிரமப்பட்டுக் கண்டு பிடிக்க வந்தாய்?'' என்று கேட்டான்.

''உன் தாயாரும் சகோதரியும் சென்ற இரண்டு மாத காலமாக உனக்குப் பெண் பார்க்கிறார்கள். 'அழகு இருந்தால் பணம் இல்லை, பணம் இருந்தால் படிப்பில்லை' என்று ஒவ்வொரு காரணத்தைச் சொல்லிக் கிட்டத்தட்ட இந்த ஜில்லாவில் உள்ள பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதைக் கழித்து விட்டார்கள். கடைசியாக இந்த ஊர்

பண்ணையார் வீட்டுப் பெண்தான் அழகும் பணமும் குணமும் நிறைந்தவள் என்று உன் தாயாரும் சகோதரியும் ஒருங்கே திருப்தி தெரிவித்திருக்கிறார்கள். உனக்கு வேண்டிய சீர்வகைகள், அதாவது வைர மோதிரம், தங்கக் கைக்கடிகாரம், மோட்டார் சைக்கிள் முதலியவைகள் அடங்கியதொரு பட்டியலும் தந்திருக்கிறார்கள். ஒரே ஒரு விஷயத்தில் தாவா. ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாய் தர வேண்டுமென்று உன் சகோதரி கேட்கிறாள். பண்ணையாருக்கு இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஒரு யோசனை. தன் புதல்வனுக்குச் சொல்லி அனுப்பினார். புதல்வன் வந்தான். 'தங்கையின் கல்யாணத்துக்குத் தந்தை இவ்வளவு பணம் செலவழிப்பது அநாவசியம். அதிலும் மத்திய சர்க்கார் ஆபீஸில் பேனா ஓட்டியாக வேலை செய்யும் குமாஸ்தா வர்க்கம் தேவையில்லை' என்று வாதாடினான். தந்தை கேட்கவில்லை. புதல்வன் உன்னைப் பற்றித் தீவிரமாக விசாரிக்கலானான். விசித்திரமாக நீ அவனுடன் படித்த பள்ளித் தோழன் என்று தெரிந்து கொள்ளவே அவன் தன் பரிபூரண சம்மதத்தைத் தந்துவிட்டான். உனக்கு மூன்றாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கொடுக்கவும் சம்மதித்து விட்டான். இனி நீ பெண்ணைப் பார்த்துச் சரி சொல்ல வேண்டியதுதான் பாக்கி" என்றான் ராஜா.



சிங்காரவேலுக்கு ஒரே திகைப்பும் குழப்பமுமாயிருந்தது. தன் தாயாரும் சகோதரியும் பண ஆசை பிடித்தவர்களாக நடந்து கொண்டு விட்டார்களே என்ற எரிச்சல் ஒரு புறம்; தன்னிடம் கல்யாண விஷயமாய் இது வரை ஒன்றுமே கேட்கவில்லையே என்ற கோபம் ஒருபுறம்.

"ராஜா, மன்னிக்க வேண்டும். இந்த இலாக்காவில் நான் வேலை பார்க்கும் வரை விவாகம் செய்து கொள்ளப் போவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன். என் தாயாருக்கும் எழுதிவிடப் போகிறேன்."

ஆனால் விடாப்பிடியாக, "இரண்டரை மணிக்குத்தானே உன் ஆபீஸ்? அதற்குள் வந்து விடலாம், வா" என்று அவனைத் தன் வண்டியினுள் ஏற்றினான் ராஜா. வண்டி புறப்பட்டது. இரண்டு மூன்று தெருக்களைக் கடந்து ஒரு பெரிய வீட்டு முன் வந்து நின்றது.

"வாருங்கள். வாருங்கள்" என்று வரவேற்றான், ஆபீஸில் அவனுடன் சண்டைக்கு வந்த இருதா மீசைக்காரன்.

"சிங்காரம். ஏன் திகைக்கிறாய்? இதுதான் என் வீடு. முதலில் ஏதாவது சாப்பிடுவோம். டேய், உள்ளே போய்க் காப்பி கொண்டு வரச் சொல்லு" என்றான் ராஜா.

அன்ன நடை நடந்து ஓர் அப்ஸரஸ் வெள்ளித் தம்ளர்களில் காப்பி கொண்டு வந்து அவர்கள் முன் வைத்தாள். ஏறிட்டுப் பார்த்தான் சிங்காரவேலு. இன்பத் திகைப்பில் அவன் கண்களையே நம்ப முடியவில்லை. காலையில் குளத்தில் நீந்தி விளையாடிய தேவ கன்னிகை — ஆபீஸில் இரண்டு 'இன்லண்டு லெட்டர்'களுடன் அவன் இருதயத்தையும் சேர்த்து வாங்கிக் கொண்டு போன சிங்காரத் தேவதை நின்றாள். 'இது யார் ராஜா?' என்று கேட்டான் சிங்காரவேலு.

"பெண் பார்க்கிறதிலே உன் தாயாரையும் அக்காளையும் விட ஒரு படி மிஞ்சிவிடுவாய் போலிருக்கிறதே அப்பா. இவள்தான் பண்ணையாரின் மகள் — வஸந்தா — என் உடன் பிறந்த தங்கை — உனக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மங்கை...." என்றான் ராஜா.

சிங்காரவேலுவின் உள்ளம் ஆனந்தத்தால் நிரம்பியது. தூரத்தில் பழத் தட்டுடன் வந்த வஸந்தாவைக் கடைக்கண்களால் பார்த்துக் கொண்டே, "ராஜா! உன் தங்கை இன்று காலையில் வாங்கிய இரண்டு 'இன்லண்டுலெட்டர்'களுக்கும் காசு கொடுத்தாளா என்று கேள்" என்றான்.

"மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா என்று பார்க்கத்தான் கடுதாசி வாங்க வருவதுபோல் அவள் வந்திருக்கிறாள்" என்றான் ராஜா.

"இந்த மாப்பிள்ளைதான் அப்போதே தன் கை வரிசையைக் காட்டி விட்டாரே எசமான்! சின்னம்மா கொடுத்த பத்துரூபாய் நோட்டை வாங்கிப் பெட்டியில் போட்டவர் பாக்கி சில்லறைகூடக் கொடுக்காமல் அனுப்பி விட்டாரே" என்றான் இருதா மீசைக்காரன்.

இந்தத் தாக்குதலைக் கொஞ்சமும் சிங்காரவேலு எதிர்பார்க்கவில்லை. ஆயினும் இந்த அதிர்ச்சியில் அன்று முழுதும் அவன் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்த அதிக இருப்பு ஒன்பது ரூபாய் பதின்மூன்றணாவுக்கு வழி வகை தெரிந்து விட்டது.

"சிங்காரம், என்னப்பா ஒன்றுமே பேச மாட்டேன் என்கிறாயே—வஸந்தாவை மணந்து கொள்ளச் சம்மதம்தானே?" என்றான் ராஜா.

சிங்காரவேலு, "ராஜா! அந்த நாளிலேயே நீ எது சொன்னாலும் நான் கேட்கத் தவறியதில்லையே" என்றான் இதயப் பூரிப்புடன்.

சிங்காரவேலு ஆபீஸ் கையிருப்பில் ரூபாய் ஒன்பது, அணா பதின்மூன்றை உறையிலிட்டு அந்த உறையைக் கண்ணில் ஒற்றித் தனியாக வைத்தான். அன்றையத் தபாலில் சூப்பிரண்டுக்கு அனுப்பிய லீவு கடிதத்தில் டாக்டர் சர்டிபிகேட்டை எடுத்துவிட்டு, ஒரே ஒரு மாறுதல் செய்து அனுப்பினான். 'என் கல்யாணம் நிச்சயமாயிருப்பதால் பூங்குளத்தில் 'ரிலீவ்' ஆனதும் ஒரு மாத லீவு கொடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்' என்று எழுதினான்.

மேற்படி கடிதத்தை ஒட்டித் தபாலில் சேர்க்கும்போது தபால்காரப் பொன்னுசாமி, 'இன்றைக்குக் கணக்கும் முடிந்தது; ஐயாவுக்குக் கல்யாணமும் வந்தது' என்று சொல்லிக் கொண்டே மகிழ்ச்சியுடன் கவரின் மீது பூங்குளம் தேதி முத்திரையைப் பதித்தான்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam


சிசுக்களின்
ஆடைகளை
லக்ஸ்
பத்திரமாகப்
பராமரிக்கிறது
குறுநடை பயிலும் குழந்தை
யிடம் நீடித்த பரிசுத்தத்தை எதிர்
பார்க்க முடியாதென்பதை விவேக
முள்ள அன்னை அறிவாள். புத்தம்
புதுக் கருக்கான ஆடைகளும் சீக்கி
ரமே அழுக்காகி விடும்! பரவாயில்லை
—மென்மையான லக்ஸ் நுரைகளில்
நம்பிக்கை வைத்தால், பத்திரமாகத்
துணிகளுக்குத் தூய்மையை நீங்கள்
மீட்டுக்கொடுக்கலாம்—பச்சிளஞ் சரு
மத்துக்கு ஏற்றவாறு அவற்றை மழ
மழப்புடனும் வைத்திருக்கலாம்.
இலவசம்
"குழந்தைகளின்
ஆடைகளை சலவை
செய்யும் முறை" என்னும்
அன்புப் பிரசுரம் இலவசம்.
லக்ஸ் பெட்டியின் மேல்மூடி
யிலுள்ள பாப்பா படத்தை
"த. பெ. 409, பம்பாய்"க்கு
அனுப்புங்
கள்.
LUX
for gentle washing of lovely clothes
அழகு மிக்க ஆடைகளுக்கு நீடுங்காலம்
புதுமைத் தோற்றம் அளிப்பது லக்ஸ்

L.X. 135-50 TM

REGISTERED No. M. 4292
Registered as a Newspaper in Ceylon

